பொங்கல் இதழ்.

Regd. No. M. 4900 28 பக்கங்கள்.

குடி அரசு

விலை 0-4-0.

மாலை 22 ஈரோடு 15-1-1949 சனிக்கிழமை மலர் 19

பொங்கற் புதுநாள்!

★

["கருணா"]

பொங்கற் புதுநாள்—எங்கணும் மகிழ்ச்சி
தங்கிடக் காணோம்! சங்கதி என்ன?
சிதைந்தநம் வாழ்வைச் சீர்பெறச் செய்ய
சுதந்திரம் வந்ததே; இதந்தரவில்லையா?
எங்கே...............?...........!
மங்காப் புகழுடை எங்கள் தமிழ்மேல்
எங்கிருந் தோவரும் இந்தியின் பாய்ச்சல்;
மக்களின் தயவால் மன்றம் நுழைந்தவர்
மக்களை மறந்து முக்கிய தலைவரைச்
சிக்க வைத்தனர் சிறையிலே, இந்நாள்!
இந்தியா பெயரில், வந்தவ னெல்லாம்
சொந்த நாட்டிலே சுரண்டுதல் தொலைய
உரிமை கோரினால், பொறுமையை யிழந்து,
பேசவோ, எழுதவோ, பிடித்ததைச் செய்யவோ,
ஆசைகொண் டவரிடம் நேசமாய் இருக்கவோ
தடைசெயுஞ் சட்டமே விடையெனத் தந்தனர்!
'உழைப்பதற் கேற்ற ஊதியம், உயிருடன்
தழைப்பதற் கான சாதனம் தா'எனில்
தடியடி, படைகளின் இடிஉதை பரிசாம்!
இந்நிலை வளர்கையில் இன்பம் பொங்குமா;
என்செய் வோமென ஏங்கிடும் ஏழையின்
இரத்தக் கண்ணீர் பொங்குமா?
உரத்த குரலில் உரைப்பீர் தோழரே!

காட்சி 21.

[வீதி]

உறுப்பினர்: இரஞ்சன், இராகவன், ஆடிட்டர்.

கதை அமைப்பு:- [விஸ்வனுடைய நண்பர்கள், விஸ்வனிடம் போய்த் தங்களுடைய பங்குத் தொகையை ஒற்றுமையாகக் கேட்டு வாங்கிக்கொள்ளத் தீர்மானிக்கின்றனர்.]

இரஞ்சன்:-என்ன ஆடிட்டர் சார்! ஏதோ உங்கள் தயவால் தான் ஒரு இரண்டு லெட்சம் ரூபாய் சம்பாதித்திருக்கிறோம்! அதை நாம் ஒரு ஒழுங்காகப் பகிர்ந்து கொள்ள வேண்டாமோ...?

ஆடிட்டர்:- ஆங்! என்னுடைய தயவு என்ன சார்! எல்லாம் பகவான் செயல்! அவன் பார்த்து, ஏதோ இந்த [illegible]ழைப்பசங்கள் பிழைத்துப் [illegible]கட்டும் என்று கண்திறந்து க[illegible]சித்திருக்கிறார்! அவ்வளவு [illegible]...!

இராகவன்:- [illegible]டிச் சொல்லுங்கசார்! [illegible]லொரு வார்த்தை!! தத்து[illegible]ப்படியிருக்கும் போது...[illegible] பயல்கள் கூச்சல் போடு[illegible] நாம் என்னமோ பிளாக் [illegible]கட்லே கொள்ளை அடிக்[illegible]ங்......கொள்ளை!!!

இரஞ்சன்:- [illegible] விடப்பா! முட்டாப் [illegible] எப்படியும் பிதற்றிக்கொ[illegible] கிடக்கட்டும்!! [illegible]பகவான் [illegible]ப் படியளக்கிறதை எந்தப்பயலாலே தடுக்க முடியும் என்று கேட்கிறேன்...?

ஆடிட்டர்:-சப் இன்ஸ்பெக்டர் தான் இப்போது தடுக்கிறார்! லாபத்தில் பாதி அவருக்கேவேணுமாம்ப்பா!!

இராகவன்:-அட்டடே...! பிச்சை எடுப்பது பெருமாள்...அதைப் பிடுங்கித் தின்பது அநுமாரோ...?

இரஞ்சன்:- அடக்குரங்கே....! நிறுத்தப்பா! உன் உதாரணத்தை- சார்! நீங்கள் வாருங்கள், இப்போதே நாம் மூவரும் நேரே விஸ்வனிடம் போய் நம்முடைய பங்குகளை மட்டும் பிரித்து வாங்கிக் கொண்டு வந்து விடுவோம்....! அப்புறம் சப் இன்ஸ்பெக்டரும், விஸ்வனும் எப்படியாவது போகட்டும்!

ஆடிட்டர்:- ஆமாம் அப்படித் தான் செய்யவேண்டும்! வாருங்கள் போகலாம்.

காட்சி 22.

[மில்லாபீஸ்]

உறுப்பினர்:-விஸ்வன், இரஞ்சன், இராகவன், ஆடிட்டர்.

கதை அமைப்பு:-[விஸ்வன் தன் நண்பர்களுக்குப் பங்கு கொடுக்காமல் வஞ்சிக்க முயலுகிறான்.]

விஸ்வன்:-[பைல்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறான்]

நண்பர்கள்:-குட்மார்னிங், குட்மார்னிங், குட்மார்னிங்! வாருங்கள் வாருங்கள் உட்காருங்கள்...

இரஞ்சன்:-என்னப்பா விஸ்வா! சௌக்கியமா? கலியாணத்திற்குப் பிறகு, ஆள் கரைந்தே விட்டாயே?

விஸ்வன்:-உம். ஏதோ இருக்கிறேன்...! என்ன ஆடிட்டர் சார்! சப் இன்ஸ்பெக்டர் என்ன சொல்கிறார்?

ஆடிட்டர்:- அவன் ரெம்பப் பேராசைக்காரனாய் இருக்கிறான் சார்! ஒரு லெட்சம் அவனுக்கே வேண்டுமாம்! மீதியைத் தான் நாம் பங்கு போட்டுக்கொள்ளணுமாம்! இல்லையானால், இன்றைக்கே ராஜனை விட்டு விடுவானாம்! உங்களையே அரஸ்ட்செய்வானாம்....!! என்னென்னமோ அவன் பாட்டுக்கு அளக்குறான் சார்...!!!

இரஞ்சன்:- சப் இன்ஸ்பெக்டர் ரெம்பப் பொல்லாதவனப்பா...! அவன் நினைக்கிறபடி எல்லாம் முடித்து விடுவானே...?

இராகவன்:- அவனைக் கவனிக்கத்தான் நீ இருக்கிறாயேப்பா!

இரஞ்சன்:- அவன்பணவிஷயத்தில் கொஞ்சமும் விட்டுக் கொடுக்க மாட்டானே....?

விஸ்வன்:- பணமா! அவனுடைய அப்பன் சம்பாதித்ததோ? ஏதோ லெஞ்சம் வாங்கிற நாய்! நாம் பார்த்துப் போடுகிற எலும்புத்துண்டைக் கௌவிக் கொண்டு போக வேண்டியதுதானே...?

ஆடிட்டர்:- நாமும் நியாயமாகச் சம்பாதித்ததில்லையே....! எல்லாம் 'பிளாக் மார்க்கட்' தானே சார்...?

இராகவன்:- அதனாலே தான்! அது எப்படி வந்ததோ! அப்படியே போகவும் பார்க்கிறது...!

இரஞ்சன்:- சரி! நிறுத்துங்கள் பேச்சை! இதெல்லாம் இப்படி வெளிப்படையாகப் பேசுகிற பேச்சா? உம். விஸ்வா! நீ எங்களுக்குக் கொடுக்கவேண்டிய பங்கை மட்டும் பிரித்துக் கொடுத்து விடப்பா!

விஸ்வன்:- ரஞ்சா! விஷயம் விபரீதமாகப்போய்விட்டதே!

இரஞ்சன்:- என்னப்பா விபரீதம்...?

விஸ்வன்:- நம்முடைய 'பிளாக் மார்கட்' விவரம் முழுதும் என்னுடைய மாமாவுக்குத் தெளிவாகத் தெரிந்து விட்டது! அவர் அந்த ரெண்டு லெட்சமும் மில்லுக்கே சொந்த மென்று வாதிக்கிறார்! நான் உங்களுக்கெல்லாம் பங்கு கொடுக்கவேண்டுமே[illegible]ன்று மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொண்ட

(தொடர்ச்சி 27ம் பக்கம் பார்க்க)



நாம் விரும்பும் தன்மை!

நம் கழகமும் நமது முயற்சியும் பிரசாரமும் எந்த ஒரு தனிப்பட்ட வகுப்பு நலத்துக்கோ, தனிப்பட்ட மனிதனின் சுயநலத்துக்கோ அல்ல என்பதை மக்கள் உணரவேண்டும்.

பொதுவாகவே நம்நாட்டு மனித சமுதாய முன்னேற்றத்தின் அவசியத்திற்காகவே பாடுபடுகிறோம்.

இன்று நாம் நம்மையும், மற்ற வெளிநாட்டு உலக மக்களையும் நோக்கும் போது நமது நிலை எப்படி யிருக்கிறது? மிகமிகத் தாழ்ந்த நிலையாக இல்லையா?

நாமும் நம் நாடும் உலகில் மிகவும் பழமையானவர்களாவோம். மற்ற நாட்டவரைவிட நம் பெருமையும், வாழ்வும் மிகமிக உயர்ந்த தன்மையில் இருந்ததாகும். அப்படிப்பட்ட நிலையில் இருந்த நாம், நமது நாடு, இன்று பழிப்புக்கு இடமான தன்மையில்இருக்கிறோம். அதாவது நாம் சமுதாயத்தில் கீழான மக்களாக்கப்பட்டு, வாழ்வில் அடிமைகளாக இருக்கும்படி செய்யப்பட்டு விட்டோம்.

இன்றைய உலகம் மிகவும் முற்போக்கடைந்திருக்கிறது. மக்கள் அறிவு மிகவும் மேலோங்கி இருக்கிறது. மக்கள் வாழ்வும் எவ்வளவோ மேன்மை அடைந்திருக்கிறது. ஆனால் நாம் மாத்திரம் காட்டுமிராண்டிகளாகவே இருந்து வருகிறோம். இதற்குக் காரணம் எதுவானாலும் நாம் சமுதாயத்தில் கீழ்ஜாதி மக்களாக இருந்து வருவதல்லாமல், நம்முடைய பழக்கம், வழக்கம் முதலிய காரியங்களும், அதற்கேற்ற வண்ணம் உலகோர் பழிக்கும்படியிருக்கிறது.

நம் பெண் மக்கள், தாய்மார்கள் இதை உணரவேண்டும். நாம் சூத்திரர்களாகவும், நம் பெண்கள் சூத்திரச்சிகளாகவும் இருக்கிறோம். நம்மில் 100-க்கு 10-பேருக்குக்கூட கல்வி இல்லை. நாம் 100-க்கு 90-பேர் உடலுழைப்புப் பாட்டாளி மக்களாகக் கீழ் வாழ்வு வாழுகிறோம்.

காரணம் என்ன?

இந்த நிலைக்குக் காரணம் என்ன? நம் இழிவையும் கஷ்டத்தையும் பற்றி நமக்கு ஏன் கவலை இல்லை? பாட்டாளி மக்களாகிய நாம் ஏன் தாழ்ந்த ஜாதிகளாகக் கருதப்பட வேண்டும்? அதுவும் இந்த விஞ்ஞான காலத்தில்? என்று உங்களை, நீங்களே கேட்டுப் பாருங்கள்.

நம்மிடத்தில் எந்த விதமான இயற்கை இழிவோ, இயற்கைக் குறைபாடோ கிடையாது. நாம் சமுதாயத் துறையில் கவலைப்படுவதில்லை. நம் சமுதாய வாழ்வுக்கு ஆன காரியங்களைப்பற்றிச் சிந்திப்பதில்லை. நாம் தனித் தனியாக, தத்தம் நலம் பேணி வெறும் சுயநலக்காரர்களாகி, பொதுவில் தலைதூக்க இடமில்லாமல் போய் விட்டது. நமது சமுதாய வாழ்

வுக்கென்று, இன்று நமக்கு எவ்விதத் திட்டமும் கிடையாது. நம் வாழ்வுக்கு, நமக்கு, பொருத்தமில்லாதவைகளை மதம், கடவுள், தர்மம் என்று சொல்லிக்கொண்டு அவைகளுக்கு அடிமையாகி வாழ்வது தான் நம்மைத் தலையெடுக்க வொட்டாமல் செய்துவிட்டது.

நமக்கு நல்வழிகாட்டவும், அறிவைப் பெருக்கவும், மனிதத் தன்மையடையவும் நல்ல சாதனம் கிடையாது. நம் மதம், கடவுள், தர்மம் என்பவை நமக்குக் கேடானதாக இருந்து வருவதை நாம் உணரவில்லை.

நம்மதம் நம்மை என்றைக்குமே முன்னேற்றாததாக இருந்து வருகிறது. மதத்தின் பயனாகத்தான் நாம் சூத்திரர், சூத்திரச்சி, கடைஜாதியாக இருக்கிறோம்.

நம் கடவுள்கள் நம்மை ஏய்ப்பவைகளாக, நம்மைச் சுரண்டுபவைகளாக, நம்மை மடையர்களாக ஆகும்படியாக ஆக்கிவருகிறது.

நமது தர்மங்கள் என்பவை நம்மை முயற்சி இல்லாதவர்களாக ஆக்கிவிட்டன.

ஆகையால் நாம் இத்துறைகளில் எல்லாம் பொருத்த மாறுதல்களையடையவேண்டும்.

கடவுள் தன்மையிலுள்ளகேடு.

நம் கடவுள் தன்மையில் இருந்து வரும் கேடு என்னவென்றால், கடவுளை ஒரு உருவமாகக் கற்பித்துக் கொண்டு, அதற்கு ஆக வீடு வாசல், (கோவில்) பெண்டு பிள்ளை, சொத்து சுகம், போக போக்கியம் ஆகியவை செய்து கொடுத்து அனுபவிக்கச் செய்கிறோம். அது மாத்திரமல்லாமல் நாம் கற்பனை செய்து, நாம் உண்டாக்கி, நாமே மேல்கண்டபடி வசதியும் செய்து கொடுத்துவிட்டு, அப்படிப்பட்ட கடவுள் நம்மை இழி ஜாதியாய்ச் சிருஷ்டித்தது என்று கூறிய எவனோ அயோக்கியன் பேச்சைக் கேட்டுக் கொண்டு, நம்மையும் நாமே இழி ஜாதியாய்க் கருதிக் கொண்டு, அக்கடவுளைத் தொடவும், நெருங்கவும் செய்வது தோஷம்—கூடாது என்று நம்பி எட்ட நிற்கிறோம். இதனால் நம்மை நாமே கீழ்மைப் படுத்திக் கொண்டோம் என்று ஆகிறதா? இல்லையா? இப்படிப்பட்ட மடத்தனமும், மானமற்றதனமும் உலகில் வேறெங்காவது காணமுடியுமா?

இன்றைய நம் கோவில்கள் எவ்வளவு பெரிய கட்டடங்கள்? எவ்வளவு அருமையான சிற்பங்கள்? அவைகளுக்கு எவ்வளவு கோடி ரூபாய் சொத்துக்கள்? அவைகளுக்கு எவ்வளவு பூசை உற்சவ போக போக்கியங்கள்? இவைகள் யாரால் ஏற்பட்டன? யாரால் கொடுக்கப்பட்டன? ஆனால் அவைகள் மூலம் பயனடைந்து, உயர்ந்த மக்களாக ஆகிறவர்கள் யார்? அவைகளுக்கெல்லாம் அழுது விட்டு, எட்ட நெருங்கக்கூடாதமக்களாய்,

எட்டி நின்று இழிவும் நட்டமும் அடைகின்றவர்கள் யார்?

நீங்கள் உண்மையாய்க் கருதிப் பாருங்கள்!

இந்த நாட்டில் உள்ள பல ஆயிரக்கணக்கான கோவில்களில், ஒரு கோவிலையாவது, மேல் ஜாதிக்காரர் என்று உரிமை கொண்டாடும் பார்ப்பனர்கள் கட்டியிருப்பார்களா? அவைகளுக்கு இன்று இருந்துவரும் நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் பெறுமான சொத்துகளில், ஒரு ரூபாய் பெறுமான சொத்தாவது பார்ப்பனர்களால் கொடுக்கப்பட்டிருக்குமா?

நாம் கோவில்கட்டி, நாம் பணம் கொடுத்து பூஜை உற்சவம் செய்வித்து, இதற்குப் பணம் கொடுத்த நாம் ஈனஜாதி இழி ஜாதி, நாலாஞ் ஜாதி சூத்திர ஜாதி, அய்ந்தாம் ஜாதி கடைஜாதி என்பதாக ஆவானேன்? நம்மைப் பல வழியாலும் ஏய்த்துச் சுரண்டி அயோக்கியத்தனமாகக் கொள்ளை கொண்டு வாழும் பாடுபடாத சோம்பேறிப் பித்தலாட்டப் பார்ப்பனன் மேல் ஜாதியாக இருந்து வருவானேன். இதைச் சிந்தித்தீர்களா? சிந்திக்க யாராவது இதுவரை நமக்குப்புத்தி கூறி இருக்கிறார்களா?

நாமும், நம் கடவுள் மதம் முதலியனவும்.

நாம் ஈனஜாதி, இழி மக்கள் என்று ஆக்கப்பட்டதற்குக் காரணம் இந்தக்கடவுள்கள் தான்என்பதையும், நாம் முட்டாள்கள், மடையர்கள் ஆனதற்குக் காரணம் இந்தக் கடவுள்களுக்குக் கட்டடம் சொத்து போக போக்கியச்செலவு கொடுத்ததுதான் என்பதையும் இப்போதாவது உணருகின்றீர்களா? இல்லையா?

அதுபோலவேதான் நம் தலையில் சுமத்தப்பட்டிருக்கும் இந்து மதம் என்பது நம்மைச் சூத்திரனாகவும், நம்மை ஏய்த்துப் பிழைக்கும் பார்ப்பானை, பிராமணனாகவும் ஆக்கியிருக்கிறதா? இல்லையா?

அதுபோலவேதான் நம் தர்மங்கள் என்று சொல்லப்படும் மனு தர்மம், புராணம், கீதை, இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களில் அல்லாமல் வேறு எதனாலாவது, நம்மைச் சூத்திரன், சூத்திரச்சி, வேசி மகன், தாசி மகன், அடிமை, கீழ் ஜாதி என்று யாராவது சொல்ல இடமிருக்கிறதா? காரண காரியங்கள் இருக்கின்றனவா?

ஆகவே நமது இழிவுக்கும் ஈனத்துக்கும் மேற்கண்ட நம் கடவுள், மதம், தர்ம சாஸ்திரங்கள் என்னப்பட்டவைகள் அல்லாமல், வேறு ஒன்றும் காரணம் அல்ல என்பதை இப்போதாவது உணருகிறீர்களா?

நமது மேன்மைக்கு, நல் வாழ்வுக்கு, நமது இழிவுநீங்கி மனிதத்தன்மை வாழ்வு வாழ்வதற்கு, மனித சமுதாயமே பகுத்தறிவுடன் உயர்ந்த ஜீவப்பிராணி என்பதைக் காட்டிக் கொள்வதற்கு, நமது இன்றைய நிலையில் இருக்கும் கடவுள், மதம், தர்மம், நீதி முதலியவை பெரிய மாற்றமடைந்தாக வேண்டும்.

நமக்குவேண்டிய கடவுளும்மதமும்.

நமது கடவுள்கள் காட்டுமிராண்டி காலத்தில் கற்பிக்கப்பட்டவைகள், அல்லது கண்டுபிடிக்கப்பட்டவைகள், அல்லது நமக்குத் தெரிய வந்தவைகள். நமது மதமும், மனிதனுக்கு நாகரீகம், பகுத்தறிவுத் தெளிவு இல்லாமல் மிருகப் பிராயத்தில் இருந்தபோது, அப்போதுள்ள அநாகரீக மக்களால் உண்டாக்கப்பட்டதாகும். நமது ஒழுக்கம் நீதி என்பவைகளும் அக்காலத்துக்கு ஏற்ப, அக்காலத்தில் உள்ள அறிவுக்கேற்ப ஏற்பட்டவைகளாகும்.

இன்று காலம் மாறிவிட்டது, இயற்கைகூட மாறிவிட்டது. அறிவின் தன்மை, அனுபவத்தன்மை மாறிவிட்டது. மனிதனுடைய மனோ தர்மம், ஆசாபாசம், ஆற்றல் மாறிவிட்டது. இப்படிப்பட்ட இக்காலத்துக்கு, 20ம் நூற்றாண்டுக்கு4000ம் 5000-ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கடவுள், மதம், தர்மம், நீதி செல்லுபடியாக முடியுமா? ஆகவே இன்றைக்கு ஏற்றபடியாக இவைகள் மாற்றப்பட்டாகவேண்டும். இன்று எந்த ஒரு ஒழுக்கத்தை, நீதியை நாம் விரும்புகிறோமோ, மற்றவர்களிடம் எதிர்பார்க்கின்றோமோ அப்படிப்பட்ட நீதியும், ஒழுக்கமும் கொண்ட கடவுள் மதம் வேண்டும். எப்படிப்பட்ட அறிவை முன்னேற்றத்தை விரும்புகிறோமோ, அப்படிப்பட்ட கடவுள், மதம், நீதி, தர்மம் கொண்ட கடவுள், மதம் வேண்டும். இன்று அப்படிப்பட்ட கடவுள், மதம் நமக்குண்டா? நம் கடவுள்களிடம் இல்லாத அயோக்கியத்தனங்கள் இன்று உலகில் எந்த அயோக்கியனிடமாவது உண்டா? நம் மதத்தில் இல்லாத காட்டுமிராண்டித் தனங்கள், மூடநம்பிக்கைகள் எந்தமடையனிடமாவது—குடிக்கைத் தலையனிடமாவது உண்டா? நான் மதத்தின் மீது கடவுள் மீது குற்றம் சொல்லவில்லை. ஆனால் அப்படிப்பட்ட காலத்தில் அப்படிப்பட்ட அறிவுள்ளவர்களால் அவை சிருஷ்டிக்கப்பட்டவைகளாகும். காட்டிக் கொடுக்கப்பட்டவைகளாகும்.

இந்த மதத்தை—கடவுள் தன்மைகளை ஏற்படுத்தின-உண்டாக்கிய—காட்டின பெரியோர்கள் தெய்வப்பிறவிகள்—தெய்வீகத்தன்மை உடையவர்கள் என்கிறதான அந்த மகான்களே இன்று இருப்பார்களேயானால், உடனே மாற்றி விட்டு வேறு வேலை பார்ப்பார்கள். அல்லது வெளியில் வர வெட்கப்படுவார்கள்.

இவை சரிதானா ?

உதாரணமாக இவைகளை நீங்கள் சரி என்கிறீர்களா? அதாவது மூன்று பெரிய கடவுள்கள், அவைகளுக்கு ஈட்டி, மழு முதலிய ஆயுதங்கள். மாடு, பருந்து முதலிய வாகனங்கள். பெண்டாட்டி பிள்ளை குட்டிகள். போதாதற்கு வைப்பாட்டிகள். மேலும் பல குடும்பப்பெண்களை விரும்பி, கட்டிய கணவனுக்குத் தெரியாமல் வேஷம் போட்டு, உருமாறி விபசாரம் செய்வதில் அம்மூவரும் ஒருவரை ஒருவர் போட்டி போடுவதில் சாமர்த்தியம் நிறைந்தவர்கள்.

இம்மூவரையும் தலைவராகக் கொண்ட மதத்தில் நாலைந்து ஜாதிகள். முதல் ஜாதி பார்ப்பன ஜாதி. இந்த ஜாதி பாடுபடாமல் மற்றவர்கள் உழைப்பை சுரண்டியே வாழ்ந்து வரவேண்டும். இவர்களுக்குத்தான் எங்கும் முதலிடம். மற்றவர்கள் எல்லாம் இவர்களுக்குக் குற்றேவல் செய்து, வாயையும் வயிற்றையும் கட்டி அடங்கி

நாட்டுக் கல்வியும்-தாய்மொழியும்.

அறிஞர் கா. அப்பாதுரை

அறிவு வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் எல்லாவற்றையுமே பொதுப்படக் கல்வி என்று கூறலாம். ஆயினும் பள்ளிகளின் வாயிலாகக் கிடைக்கும் வாய்ப்பு ஒன்றை மட்டுமே சிறப்பாகக் கல்வி என்று கூறுகிறோம். இதற்குக் காரணம் இது ஒன்றே செயற்கை முறையான வாய்ப்பு. திட்டப்படுத்தி வளர்ச்சி உண்டு பண்ணுவது பள்ளிக்கல்வியில் மட்டுமே எளிது.

பள்ளியறிவுக்கு முன்னும் பின்னும் உள்ள அறிவு வளர்ச்சியை இயற்கை யறிவு வளர்ச்சி அல்லது இயற்கைக் கல்வி என்னலாம். பள்ளிக்கு முற்பட்ட இயற்கைக் கல்வியும், பள்ளி அல்லது கல்லூரிக்குப் பிற்பட்ட இயற்கைக்கல்வியும், குடும்ப, சமூக வாழ்க்கையினிடையே ஏற்படும் கல்வியாதலால், இரண்டும் வாழ்க்கை மொழியாகிய தாய்மொழியிலன்றி வேறெதிலும் நடைபெற முடியாது என்பது தெளிவு. முதற் படியும் இறுதிப் படியும் ஆன இவ்விரண்டுடன் ஒத்து, அவற்றை இணைக்கத்தக்கதான பள்ளிக்கல்வி அவற்றைப்போல் தாய்மொழி மூலமான கல்வியாயிருந்தாலல்லாமல், அது நாட்டுக் கல்வியாயும் இராது; உண்மைக் கல்வியாயும் இராது என்று கூறத்தேவையில்லை.

பிறமொழி, தாய்மொழியைவிட மிகச் சிறந்ததாய் அமையக்கூடும் இடங்களில் கூட, பிறமொழிக் கல்வியினால் வீண்கால அழிவு ஏற்படுகிறதென்பதில் அய்யமில்லை. ஏனெனில் தாய் மொழி மூலம் ஓர் ஆண்டில் கற்கப்படும் கல்வியைப் பிறமொழி மூலம் மூன்றாண்டுகளில் கூடக் கற்கமுடியாது. அதோடு கற்ற அளவிலும் அது தாய்மொழி போலச் செரித்து அறிவுணவாய் மேலும் வளர்ச்சிக்குரியதாகாமல், தாளால் புனையப்பட்ட செடிகொடி போல் செயலற்றதாகவே இருக்கும். நம் தமிழ் நாட்டில் ஆங்கிலம் ஒன்று நீங்கலாக எந்தப் பிற மொழியும் தாய் மொழியைவிட எத்துறையிலும் சிறப்புடையதன்றாதலால், பிறமொழிக் கல்வி பயனற்றதுமட்டுமன்று; தீமை தருவதும்கூட ஆகும் என்று கூறத்தேவையில்லை.

பள்ளிக்கு முற்பட்ட கல்வி.

பள்ளிக்கு முற்பட்ட கல்வியிலும் மூன்றுபடிகள் உண்டு. முதற்படி இயற்கையாய் ஏற்படுவது. உயிர்கள் வளர்ச்சிப்படியில் (Evolution) பல ஊழிகளாக அடைந்த முன்னேற்ற முழுவதும் மரபுரிமை (பரம்பரை) யாகக்குழந்தைக்கு இயற்கையாகவே சில மாதங்களில் வந்து விடுகிறது. பசித்தபோது அழுதல், பால் குடித்தல், குடித்தபால் செரிக்கும் வகையில் கைகால்களை ஆட்டி விளையாடுதல் ஆகியவை இத்தகையன. கண்ட பொருள்களைப் பிடித்தல், வாயில் வைத்துச் சுவைத்துப்பார்த்தல், கூர்ந்து நோக்குதல் முதலியவை உடல் வளர்ச்சிப் பொருள்கள் பற்றிய இயற்கையறிவு வளர்ச்சி ஆகியவற்றிற்கு உதவுகின்றன.

இரண்டாவது படி தாயின் தொடர்பால் ஏற்படுவதாகும். தாயின் செயலில்லா விட்டால் விலங்குநிலையில்கீழ்ப்படியிலேயே குழந்தை இருக்கவேண்டி யிருக்கும். உணவு நாடுவதுமட்டும் உணர்ந்த குழந்தைக்குத் தக்க உணவைத்தாய் காலவாய்ப்பறிந்து உதவுவது போலவே, அறியும் விருப்பம் மட்டும் உடைய குழந்தைக்கு விரைவில் அறிவு வளர்ச்சி ஏற்படத் தாய் உதவுகிறாள், தாயுடன் குடும்பமும் உதவுகிறது.

குடும்பத்திற்குக் குடும்பம் குழந்தைகள் அறிவு வளர்ச்சி வேறுபடுவதற்குத் தாயின் அறிவு நிலை, குடும்ப நிலை, இரண்டிடத்தும் உள்ள கல்வி, பண்பாடு ஆகியவையே காரணம் ஆகும். தாயின் அறிவுகுறைவுற்ற சமூகங்களிலும், குடும்ப வாழ்க்கைத்தரம் தாழ்வுற்றிருக்கும் சமூகங்களிலும் குழந்தைகள் பிற்காலத்தில் அறிவு

ஒடுக்கி வாழவேண்டும்.

இந்த மதத்தில் உள்ள மக்களுக்குச் சொல்லப்பட்டிருக்கும் நீதி—ஒழுக்கம், ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொருமாதிரி. பார்ப்பான் திருடினால் அவன் தலையைச் சிரைத்து மொட்டையடிப்பதே போதுமான தண்டனை. அதே திருட்டை ஒரு அய்ந்தாவது ஜாதிக்காரன் செய்தால் அவனுடைய கையை வெட்டி விடுவது அதற்கேற்ற தண்டனை என்று சொல்லுகிறது மனுநீதி. அந்த மனுநீதியில் சொல்லப்பட்டிருக்கும் நீதிகள் எல்லாம் இந்த அடிப்படையில்தான் வகுக்கப்பட்டிருக்கின்றன.

ஆகவே அக்காலத்திய கடவுள் மத தர்மங்களை, இக்காலத்துக்கு ஏற்றபடி யமைத்துக் கொள்ளுங்கள் என்பதற்கு ஆகவே இதைக் குறிப்பிடுகிறேன்.

காலம் கருதிக்
காரியம் கொள்ளுமின்!

பெரிய அறிவாளிக்ள்கூட எண்ணெய் விளக்கை இன்று அறவே நீக்கிவிட்டு, எலெட்ரிக் விளக்குப் போட்டுக்கொள்ளவில்லையா?

கட்டை வண்டிப் பிரயாணத்தை நீங்கள் தள்ளிவிட்டு ஏரோப்ளேன்-ஆகாயக்கப்பல் பிரயாணத்தை நீங்கள் விரும்பவில்லையா?

ஆகையால் ஆதிகாலம் என்கின்ற காலத்தில், ஆதிகால மனிதர்கள், மகான்கள் என்பவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆதிகாலத் தன்மையிலிருந்து மாறுபட்டு, இக்கால நிலைக்கு ஏற்றது போல் நடந்து கொள்ளுங்கள்.

காலத்தோடு கலந்து செல்லாதவன் ஞாலத்துள் பயன்படமாட்டான்.

குன்றியிருப்பதற்கு இதுவே காரணம்.

இயற்கைக் கல்வியின் மூன்றாவது படி பிற குழந்தைகள் கூட்டுறவினாலேயே ஏற்படும் அறிவு ஆகும். ஒரு சில ஆண்டு வளர்ச்சி பெற்ற குழந்தை தாய் உறவினும் தன்னொத்த குழந்தைகள், சில சமயம் தனக்கு மூத்த, அல்லது இளைய குழந்தைகள் (பாப்பாக்கள்) கூட்டுறவை நாடுவது காணலாம். ஆகவே குடும்பத்தினுள்ளும், சூழ்ந்துள்ள குடும்பத்திலும் உள்ள குழந்தைகளின் அறிவு நிலையே இந்தப்படியில் குழந்தையின் வளர்ச்சி வேகமாகிறது.

நம் நாட்டில் . தாயின் அறிவு குடும்பத்தின் அறிவாகவும், குடும்பத்தின் அறிவு நிலை, சாதி, சமூகம், இனம் ஆகியவற்றின் அறிவு நிலையாகவும் இருப்பதால் தான், குழந்தையின் அறிவும் நாட்டின் அறிவும் பெரிதும் பெரும்பான்மை இனத்தின் அறிவு நிலையாய் விடுகிறது. நாட்டின் அறிவைவளர்ப்பவர்கள் இப்பெரும்பான்மை இனத்தையும், அதனைச் சார்ந்த பிற்பட்ட சாதி சமூகங்களையும் தனிப்படத் திருத்த முற்பட்டாலல்லாமல், குழந்தை வளர்ச்சியும் நாட்டு வளர்ச்சியும் தடைப்பட்டே இருக்கும்.

பள்ளிக்குப் பிற்பட்ட கல்வி.

பள்ளிக்குப் பிற்பட்ட கல்வியும் முற்பட்ட கல்வியைப் போலவே சமூக, இனப்பண்பாட்டினளவில் நிற்கவேண்டியதாகிறது. அதோடு மற்றும் இருவகைகளிலும் பள்ளிக்குப் பிற்பட்ட கல்வி இனவளர்ச்சியின் அடிப்படையைத் தழுவியதாகிறது. பள்ளிக்கு முற்பட்ட கல்வியைவிடப் பள்ளிக்குப்பிற்பட்ட கல்வியில் வாழ்க்கைத்தரம், வாழ்க்கைப் பொருளாதாரவசதிகள், நல்ல மணவாழ்வு, சமூக அறிவுநிலை ஆகியவை மிகுந்த இடத்தைப் பெறுகின்றன. வாழ்க்கை மொழியாகிய தாய்மொழியின் நிலை, தாய் மொழிக்கல்வி ஆகியவை வாழ்க்கையையும் வளர்ச்சியையும் பாதிக்கும் பருவமும் இதுவே.

பள்ளிக்கல்வி.

நம் நாட்டில் இன்று பள்ளிக் கல்வி மூன்று படிகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவை தொடக்கக் கல்வி (1-5 வகுப்பு அல்லது 1-8 வகுப்பு) இடைக்கல்வி (5-8 அல்லது 5-10 வகுப்பு) உயர் கல்வி (கல்லூரிக்கல்வி) என்பவை. தொடக்கக்கல்வி உண்மையில் இயற்கைக் கல்வியின் பிற்பட்ட படிகளான குடும்ப, சமூகக்கல்விக்குத் துணை தரும் கல்வியேயாகும். இது மட்டுமே எல்லா மனிதர்களுக்கும் உரியதெனக் கொள்ளப்படுகிறது. ஆனால் நம் நாட்டில் எல்லா மனிதர்க்கும் உரிய இம் மனிதத் தன்மை மிகவும் குறுகியிருக்கிறது.

(அ) ஆண்களுக்கு அறிவு உரிமை, 'பெண்களுக்கு அடிமை உரிமைதான்' என்று இந்நாட்டில் கருதப்பட்டு வருகிறது. உண்மை நிலையும் அப்படித்தான் இருந்து வருகிறது. உயர்வகுப்புக்களில் கூடப்பெண்கள் தாழ்ந்தவகுப்பினராகவே உள்ளனர் என்பது மறக்கத் தக்கதன்று. மேல் நாடுகளில் பெண்களுக்குக்கல்வி உரிமை இருந்தும் கூட வாழ்க்கையில் உள்ள அடிமைப்பண்பு அறிவுத்துறையில் அவர்களை முற்றிலும் விட்டபாடில்லை என்று காணலாம். அப்படியிருக்க, பெண்களுக்கு உரிமையும் வசதியும் அளிக்கப்படாத இந்நாட்டில், பெரும்பாலான பெண்கள் சமூகத்திலும் பிற்பட்டு, பெண்கள் என்ற நிலையிலும் பிற்பட்டு இரட்டிப்பு அடிமை நிலையிலுள்ளார்கள் ஆதலால் இங்கு பெண்கள் பிற்பட்டிருப்பதில்வியப்பில்லை.

(ஆ) வாழ்க்கையில் பிற்பட்ட இனத்தவர்கள் செல்வநிலையிலும் பிற்பட்டுத் தொடக்கக்கல்விகூடப் பெறாததால், முற்பட்ட ஓரிரு வகுப்பு, முற்பட்ட இனம் மட்டுமே அனைவருக்கும் உரிய கல்வியை அடைந்து வருகிறது. வரிகொடுக்கும் இனம் பிற்பட்ட இனமாகவும், கல்வி கற்கும்இனம் பிறிதோரு சிறுபான்மை இனமாகவும் இருக்கும் நாடு நம்நாடு தவிர உலகில் வேறு எங்கும் இருக்காதென்று கூறலாம்.

(இ) செல்வநிலை பிற்படாத இடத்திலும் சமூக இன வாழ்க்கைப்பண்பாடு தொடக்கக் கல்வியைக்கூடப் பாதிக்காதிருக்கவில்லை. ஏழை வீட்டுநோய் செல்வர் வீட்டிலும் பரவுவதுபோல் ஏழையின்அறியாமை அதே சமூகத்திலுள்ள செல்வர் பண்பாட்டையும் கெடுத்தே வருகிறது.

மூன்று வகைக் கல்விகள்: மூன்று வகுப்பு மக்கள்

மேற்குறிப்பிட்ட பொது வசதிக் குறைவுமட்டுமல்லாமல், கல்வி மூவகைப்பட்டிருப்பதனால் வேறு ஒரு பெருங்கேடும் நாட்டு மக்களுக்கு உண்டு. எல்லாருக்கும் உரிய கல்வி தொடக்கக்கல்வி; இடைத்தர வகுப்பாருக்குஇடைக்கல்வி (Secondary Education) உயர் (சோம்பல்) வகுப்பாருக்கு உயர் கல்வி என்றிருக்கும் வகுப்பு முறை ஏழைகளுக்கு உதவாத முறை மட்டுமல்ல, அவர்களைப் பூண்டோடு வளர்ச்சியில்லாது அழுத்திவைப்பதும்ஆகும். ஏனெனில் படிப்படியாக மாணவர் சம்பளம் உயர்வது ஒன்றே,ஏழையை அங்கங்கே தடைசெய்யப் போதிய அணையாயிருக்க, அதுபோதாமல் ஒவ்வொருபடியிலும் ஒரு பெரிய தேர்தல் (பரீக்ஷை); ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு தேர்தல்; போதாக்குறைக்குத் தேர்வு (Selection) ஆகியவற்றால், நாட்டின் செல்வத்துக்குக் காரணமான ஓர் இனம், அரிப்புக்கள் கொண்டு அரித்துத்தள்ளப்பட்டுச், சுரண்டும் இனம் அதன் செல்வத்தின் உதவியால் தானே செல்வ வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் பெறுகிறது.

இம்மூவகைக்கல்வியிலும் படிப்படியாகப் பிறமொழிகள் புகுத்தப்படுவதும் மிகுதியாக்கப்படுவதும் ஒரு புறம் நாடு அழிய உதவுவதுடன், மறுபுறம் நாட்டு வாழ்வுக்குத் தொடர்பற்ற, நாட்டுச் செல்வத்தை உண்டுபண்ணுவதில் ஈடுபடாத, உழைக்காத ஓர் அயலினம் வளர மட்டும் உதவுகிறது.

பிறமொழி.

பிறமொழிகளுள் தற்கால நூல் முறை அறிவு (Science) தரும் ஆங்கில அறிவுகூட பாமர மக்களிடையே தொழிலறிவு, பகுத்தறிவு வளர உதவவில்லை. காரணம் நாட்டுப் பொது மக்களிடையே எவரும் அதனையடைய வழியே இருப்பதில்லை. படித்தாலும் பிறமொழியறிவு பிறமொழியாளருடன் ஊடாட உதவுமேயன்றித்

(தொடர்ச்சி 23-ம் பக்கம்)

முத்தைய
லக அறக்கட்டளை

விவசாயத்தில் விஞ்ஞானம்!

அறிஞர் அண்ணாதுரை

★

“வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே, நம் நாட்டு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது” என நம்நாட்டு நிலையைப் பற்றி அறிஞர்கள் கூறுவர். பெரிதும் விவசாயத்தையே உறு துணையாகக் கொண்டு வாழும் நாடு இது. 100-க்கு 80-க்கு மேற்பட்டவர்கள் நம் மாகாணத்தில் கலப்பையையே கருவூலமாக நம்பி வாழுகின்றனர்.

கவிகள் வேண்டுமானால் மேழிச் செல்வத்தைப் பற்றியும், ஏரடிக்கும் சிறு கோலைப்பற்றியும், வெண்பாக்கள் அமைத்துப் பாடலாம். வேளாண்மையின் சீரையும் சிறப்பையும் பற்றிப்பேசி மகிழலாம். ஆனால், விவசாயம் ஒன்றையே நம்பி வாழும் எந்த நாடும், நாகரீக உலகில் நல்லதொரு இடம் பெற்று இனி வாழ முடியாது என்பதை உலக வளர்ச்சிச் சரிதம் விளக்கிக் கூறுகிறது.

விவசாயம் மட்டுமே நடத்தி, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து குவித்து, தொழிலுக்கு உதவும் வேறு உற்பத்திப்பொருள்களை உண்டாக்கி அவைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு, வாழ்ந்துவந்ததே, பொருளாதாரத் துறையில் நம் நாடு நசித்து வருவதற்கு முக்கியமான காரணம். மேனாடுகளில் உள்ளதைப்போலவே, தொழில் வளர்ச்சியும், விவசாயத்தோடு இணைந்து இருந்தால் மட்டுமே, நாட்டுச் செல்வ நிலையைப் பண்படுத்திப் பெருக்க முடியும்.

சரியான நிலையிலுள்ள ஒரு சமுதாயத்திலே, ஏக காலத்தில் விவசாய அபிவிருத்தியும், தொழில் வளர்ச்சியும் ஒரே சமயத்தில் ஏற்படவேண்டும். இதனைப் பெரிதும் நம் நாட்டுக் காப்பாளர்களாக விளம்பரம் பெற்று வாழும் தேசீய வாதிகள் அறிவதில்லை.

விவசாயத் தொழில், இந்தியாவில் உள்ளதைப்போல வேறு எங்கும் மோசமாக இல்லவே இல்லை. இங்குதான், நூற்றாண்டுகளுக்கு முன்பு இருந்ததைப்போன்றே எலும்பும் தோலுமாக உள்ள உழவனும், அவனது இளைத்துப் போன எருதும், மூதாதையர் தந்த கலப்பையும், முதுகை நெரிக்கும் சுமையும் உள்ளன. இந்த நாட்டில்தான் இன்றளவும், வறண்ட நிலமும், வற்றிப்போன குட்டையும் வாழ்க்கையில் இன்பமென்பது எது என அறியாது வறுமையிற் பிறந்து வளர்ந்து, வறுமையின் மடி மீது படுத்துச் சாகும் அடிமைகள் உள்ளனர். ஏர் உழுதல் முதற்கொண்டு அறுவடை வரையில், நம் நாட்டார் மட்டுமே, பன்னெடு நாட்களுக்கு முன்பு இருந்த பழமையான முறைகளையே கையாண்டு வருகின்றனர். பழமையின் கடைசிப் புகலிடம் கிராமங்களே! பழமைப் பித்து முற்றிலும் கொண்டவர்களும் கிராமத்தவரே. ஒன்றரை ஏகர் நிலத்திலே ஒன்பது பாகம்! உழுது பயிரிடுவோரின் உழைப்போ, மிருக உழைப்பு! மிராசுதாரரோ, நிலத்தை உழவனிடமும் நெற் கதிரைத் தம்மிடமும் கொண்டு வாழுபவர்.

மாற்றம், காலப் போக்கின் கண்ணோட்டம், நாகரீகம், கிராமங்களுக்குச் செல்வதில்லை. அன்று இருந்த அவதியே இன்றுமிருக்கிறது. அதே நிலையில் கிராமங்கள் என்றென்றும் இருக்க வேண்டுமென்பதே இன்றைய நிர்மாணத்திட்டம்.

மேனாடுகளில் இதே விவசாயம் நடத்தப்படும் விதத்தையும், அவர்கள் அங்கு கையாளும் முறைகளையும் கண்டவர் நம் நாட்டு விவசாயத்தையும்காணில் இதனை ‘கிராமவாசியின் கர்ம பலன்’ என்று கூறுவரேயன்றி நாட்டின் நல் வாழ்வுச் சாதனம் என்று கூறார்.

இன்றைய விவசாய முறையால் வரும் கேடுகள் யாவை? விவசாய முறை பெரிதும் பழமையை

எதிர்பாருங்கள்!

தமிழன் பெருமை கொள்ள வேண்டிய தனிப்பெரும் நூல் திருக்குறள்.

ஆனால் இன்று குறளின் நிலை என்ன?

மக்களிடையே அது மங்கி விட்டதற்குக் காரணம் என்ன?

அந்த அளவுக்கு அதில் மாசு படர விட்டு விட்டோம்!

அந்த மாசை, நான்போக்குகிறேன் என்கிறார் நண்பர் புலவர் குழந்தையவர்கள். ஆம்! இராவண காவிய ஆசிரியர்.

குறள் விரிவுரையை
நம் குடி அரசில்
எதிர்பாருங்கள்!

பொங்கல் வாழ்த்து!

★

சந்த விருத்தம்.

[1]

உலகிடை நிலவியு றுத்துப சிப்பிணி செத்தோட
உடையிலை யெனவவர் செப்பிடு மப்பிழை யற்றோட
குலமத மடமைசெ ருக்கைய றுத்தினி யிப்பாரில்
கொடுமைசெய் நிறமதொ ழித்துக லப்பும ணத்தாலே
குலவிடு மழலைமொ ழிச்சிக ளித்தவள் மத்தாட
குறுநடை குழவிக ளுக்கவி ளிச்சென முத்தாட
பலசொலி லதிகவி னித்திடு முத்தமி ழொத்தோடு
பலவித கலையைய ளிக்கவு தித்தருள் தைப்பொங்கல்!

[2]

பொலபொல வெனபலர் இக்குக டித்துகு தித்தாட
புலம்விளை மணியினை கட்டிமு டித்துசு மத்தாட
கலகல வெனபலர் நக்கிக ளித்துது டித்தாட
களநிறை மணிதனை சுற்றிக ளித்துகு ளித்தாட
மலரணி மயிலவர் சிக்கல்மு டித்தவ மொக்காட
மதலையர் மலரினை லட்டென விப்பகு தித்தாட
சலசல வெனபுது சட்டிகொ தித்துகொ தித்தாட
தரணியின் கருவுதொ லைக்கவு தித்தருள் தைப்பொங்கல்!

பன்னிருசீர் கழி நெடிலாசிரிய விருத்தம்.

மதர்விழி மாதரின் மலர்மணம் வீச வளைக்கை விழிகூச
வரியுரு வச்சிறை வழிபட லொட்டி வனப்போ டிசைபேச
அதர்கனி கோவையின் நறுநிறங் கண்டதை அருந்தக் கிளிநாட
அதிவேக மதாய் அயலுள கொழுநர் அருந்திக் களிகூர
சதுர்வித கூலமும் சருக்கரை கன்னல் சகத்து மலிந்திடவே
சகலரு மகிழ்ந்து தமிழ்மொழி கற்று சரசமா யாடிடவே
புதிர்விளை இந்தியும் புறமுது கோடிடப் பொங்குக
பால்பொங்கல்!
புவனி தழைத்திட கழனி விளைந்திடப் பொங்குக
பால்பொங்கல்!!

—கோல்லிப்பொருப்பன்.

வளர்த்து, கிராமத்தில் காட்டுமிராண்டித் தன்மையைத் தந்து வருவது மறைமுகமான கேடு என்ற போதிலும், மற்றைய கேடுகளைப் பெற்றெடுத்து வளர்க்கும் தாயகமாக அது விளங்குகிறது. வாழ்க்கையில் கசப்பு, மனச்சோர்வு, தன்னம்பிக்கை அற்ற தன்மையை அது வளர்க்கிறது. ஒருவிதமான பரபரப்பு, சுறுசுறுப்பு, வேகம், எழுச்சி, விழிப்பு வருவதாகக் காணோம். கோழி கூவும்போது கூரைவீட்டில் குறட்டை விட்டுத் தூங்கும் உழவன், எழுந்திருந்து கோணல் கலப்பையைத் தூக்கிக் கொண்டு கொடிவழி நடந்து நிலம் சேர்ந்து நெற்றி வியர்வை நிலமீது சிந்த மாலை இருள் வரும்வரை உழைக்கிறான். நரம்புகள் அத்தனைக்கும் வேலை. கை கால்கள் கசக்கப்படுகின்றன. மேனி கருத்து அவன் ஒரு தனி ஜாதியானோ என அய்யுறுமாறுமாறிவிடுகிறான். இவ்வளவு கஷ்டப்பட்டும், பட்ட பாட்டிற்குத் தக்க பலன் உண்டா? இல்லை. விளைவு முன்னை இருந்ததைவிட வளர்ந்ததா? கிடையாது. முன்பிருந்ததைவிட வேறுவிதமான வகையான பொருள்கள் விளைகிறதோ? அஃதும் இல்லை. ஏன்? இன்னமும் உழவன், பழமையில் நெளிகிறானே தவிர, விஞ்ஞானத்தைத் துணை கொண்டு வாழ முற்படவில்லை. இன்றளவும் அவனைச்சுற்றி அந்தகாரம் இருக்கிறதே யல்லாமல், நவநாகரீகச் சுடர் காணப்படுவதில்லை.

உழைப்பு இந்நாட்டில் மட்டுமே மிக மிக அலட்சியமாகக் கருதப்பட்டு வருகிறது. உழைப்பு மட்டுமா? உயிரும் அப்படியே! ஏதோ மனிதன் பிறந்தான்! மாயப் பிரபஞ்சத்தில் சின்னாள் இருப்பான், பிறகு மறு உலகு சென்று மலரும் மணமும்போல இருப்பான் என்று கருதப்படும் நாடு இஃதே யன்றோ! ஆகவேதான் இந்த மனித உழைப்பு, உழைப்பிற்கேற்ற பலன் பெறாதமுறையில் வகுக்கப்பட்டுள்ள உழவு முறைக்குப் பலியாக்கப்பட்டு வருகிறது.

எத்தனை சேதம்! எவ்வளவு ஆமோகமான உழைப்பு வீணாகிறது! எத்தனை ஆயிரக்கணக்கானவர்கள் எலும்பு நொறுங்க வேலைசெய்து வாழ்க்கையை நடத்துகின்றனர். அவ்வாழ்க்கையிலும், வெறும் நடைப்பிணங்களாகவன்றோ உள்ளனர்.

உழவு பயனற்றதா? அல்ல! உழவு நம் நாட்டவருக்கு பசி போக பண்படுத்தர வல்லதன்றோ! அல்ல! செல்வம் கொழித்து நம் நாட்டவர் சிறுடன் வாழவும், தேயிலைத் தோட்டம் சென்று தேம்பி வாழ்வோர் யாவரும் தமிழகத்திலேயே தன்மதிப்போடு வாழவும் முடியும். எப்போது? உழவு வெறும் உழைப்பாக மட்டுமின்றி உழவுத் தொழிலாக, விஞ்ஞான முறையைத் துணைகொண்டு நடத்தப்படின். என்று வரும் அந்நாள்? எங்ஙனம் வரும்?

★

சிந்தாமணியில் :: :: சிதறியமணிகள்!

“புலவர் தா. அழகுவேலன்”

இலக்கியம் என்பது இன்பப் பொழுதுபோக்கு. அறிவுப்பெருக்கத்திற்குரிய நீரூற்று. இலக்கியம், அக்கால மக்களைப் படம் பிடித்துக் காட்டும் கருவி. இதன் துணையால் அக்கால மக்களின் மொழி நிலை, அறிவு நிலை, நாகரீக நிலை ஆகியவற்றை நன்கு அறியலாம். தமிழில் எழுந்த இலக்கியங்கள் எண்ணற்றன. அவற்றை மூவகையாகப் பகுத்தால் சங்க இலக்கியம், சமய இலக்கியம், விஞ்ஞான இலக்கியம் என்று கூறலாம்.

சங்க இலக்கியங்கள் இயற்கை வழியில் அமைந்தன. சமய இலக்கியங்கள் அந்தந்தச்சமயத்தவரால் எழுந்தன. விஞ்ஞான இலக்கியம் இப்பொழுதுதான் ஆங்கிலக் கூட்டுறவால் அரும்புகிறது. பழைய இலக்கியங்கள் யாவும் வெறும் பாட்டாகவே கிடக்கின்றன. பாட்டின் சுவையைத் துய்க்க இலக்கண அறிவுவேண்டும். இலக்கணம் சிதையும் இக்காலத்தில், அதன் பெருமையைக் குலைக்காமல், சமய கால இலக்கியத்திலொன்றாகிய சிந்தாமணியைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

செய்யுள் வடிவில் அமைந்த கதையைக் காதை என்றனர். அதுவே காவியமாகும். அக்காவியங்கள் பெருங்காவியங்கள் சிறு காவியங்கள் என இரண்டு வகையுள் அடங்கும். இரண்டிலும் ஐந்தைந்து காவியங்களை எடுத்து ஐம்பெருங்காவியம், ஐஞ்சிறுகாவியம் என்று கூறினர் புலவர். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐந்தும் ஐம்பெருங் காவியங்கள். நீலகேசி, சூளாமணி, உதயணன் கதை, யசோதர காவியம், நாககுமார காவியம் என்னும் ஐந்தும் ஐஞ்சிறு காவியங்கள் ஆகும்.

சீவகன் தோன்றிய கால நிலை!

காலத்தால் பிற்பட்ட (கி. பி. 900) சிந்தாமணி, இலக்கியச் சுவையால் ஏனைய நூல்களை வென்று முதலிடம் பெற்றிருக்கிறது. சிந்தாமணி என்ற நூலின் தலைவன் (கதாநாயகன்) சீவகன். அவன் வரலாற்றைக் கூறுவதே இந்நூல். தமிழின் இடைக்கால இலக்கியங்களில் இன்பச்சுவை சொட்டச்சொட்ட, உதட்டை மடித்துச் சுவைக்கக் கூடிய அளவுக்கு இனிமை நிறைந்தது சிந்தாமணியே. தமிழகத்தில் சிந்தாமணியின் சுவையைக் கண்டவர், துய்த்தவர் பேராசிரியர் பண்டிதமணியார் என்றால் மிகையாகாது. இந்நூலை மணநூல் என்றுங்கூறுவர். காமரசந்ததும்பும்—இந்நூலின் வழிநூலே கம்பரசமாகும். காமநூலாகிய சிந்தாமணி சமண சமயத்தைச் சார்ந்தது. இந்நூலிலும் மூடக்கொள்கைகள் இருக்கின்றன ஆனாலும் இது மனித நூல். இதனை மிஞ்ச எழுந்த கம்பரின் இன்பநூல்—கடவுள் நூல் என்று சொல்லி—மக்கள் நம்பி-அறிவைக் கெடுக்கும் ஆபாசக் களஞ்சியமாகி விட்டது. மதியிழந்த மக்களைக் குரங்காக்கி, அசுரராக்கி விலங்கினும் இழிந்த காட்டுமிராண்டி காலத்திற்கு அழைத்துச்சென்று விட்டது. அஃது ஒழிக! சிந்தாமணியின் காலம்; சமயவாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்த காலம். செல்வம் நிலைக்காது! இளமை நிலையாது! யாக்கை நிலையாது! தேகமனித்தியம்! மரணம் நிச்சயம்! அவனை மறவாதே! என்று கூறி மக்களை முயற்சியில் ஈடுபட்டு முன்னேறாமல் அழுத்திய சூழ்ச்சிக்காலம். எல்லாம் அவன் செயல் (பிள்ளையைப் பெறுவதுகூட) என்று நம்பச் செய்த காலம்! அக்காலத்தில் எழுந்தவனே சீவகன் என்னுஞ் செம்மல்.

துறவா? கரவா?

சீவகன் தன்னந்தனியனாக ஒரு மலைச் சாரலின் வழியே வருகின்றான். வழியில் சில ஆரிய முனிவர்களைக் கண்டான். அவர்கள் நாட்டைத்துறந்தவர்கள், வீட்டை மறந்தவர்களல்ல. ஒவ்வொரு துறவியும் இரண்டுமூன்று (பெண்) உருப்படியோடு அதரபானம் பருகி, ஆடல் பாடலில் மூழ்கி, பேரின்ப வழியை நாடிக்கொண்டிருந்தனர். இதைக்கண்ட சீவகன் சிலிர்த்தான். துறவிகளின் வேடத்தைக் கண்டு வெறுப்படைந்தான். அவர்கள் அழைப்பிற்கிணங்கி விருந்தானான். காய், கனி, கிழங்கு, உணவை அருந்தி நீரைப்பருகினான். வழிநடைக்களைப்புத் தீர்ந்ததும் முனிவர்களோடு சிறிது உரையாடல்மேற்கொண்டான். அப்போது அவர்களை நோக்கிச் சிலகேள்விகள் கேட்டான்?

“அய்யா! கடலைக்கடக்க எண்ணிக் கழுத்தில் கல்லைக் கட்டிக் கொண்டு இறங்குவார்களா? பரமபதத்தை நாடும் நீங்கள் மெல்லியல் பாவையர் பதத்தை நாடுவது ஏன்?

தவமறைந்து அல்லவை செய்தல் தகுதியா? எதற்காக இந்த வேடங்கள்?

சடைமுடி வளர்த்தால் மோட்சம் வந்துவிடுமென்று நினைக்கிறீர்களா? அப்படியானால் உடம்பு முழுதும் மயிர் நிறைந்துள்ள கரடி அதனை அடையக் காணோமே.

நீர்மூழ்குவதாலென்றால்—மீன், தவளை, பாம்பு ஆகியவையெல்லாம் இன்னும் இந்த உலகத்தில் தானே இருக்கின்றன.

மரக்கிளையில் உறியைக் கட்டி, உட்கார்ந்தால் போதுமா? அப்படியானால் வழிவழியாகத் தொங்கிக்கொண்டிருக்கும் வௌவாலுக்கு என்ன வழி?”

வேடம் போட்டுக்கொள்வதெல்லாம் பிறரை ஏய்ப்பதற்காகத்தானே! பெரும்பழியைச் செய்தவன் அது வெளிப்பட்டு அதனால் தான் பிடிபட்டு அடிப்பட்டு அவதி அடையாமல் இருப்பதற்கு

என்ன செய்கின்றான்? மாற்றுரு வம் படைத்து [அமைத்துக் கொண்டு] வெளிச்செல்வதைத் தானே பார்க்கின்றோம். அந்தக் காலத்திலேயே சீவகன் தவவேடந் தரித்து வாழ்ந்த பேயர்களை இழித்து, அவர்கள் குட்டை அம்பலப்படுத்தினான்; என்றால் இன்னமுமா 20ம் நூற்றாண்டிலும் மடாதிபதிகளுக்குப் பல்லக்கு, தீவட்டி, ஆள், அம்பாரம்! சீவகனைப்போன்ற வீர இளைஞர்கள் இன்று எத்தனை பேர்வேண்டும்?

அறி! தேளி! நட!

உண்மையைஉணர்வது ஞானம். உணர்ந்ததைத் தெளிவது காட்சி. நேர்மையாய் நடப்பதே ஒழுக்கம். இவையே மெய்ந்நெறி. பிறநெறியெல்லாம் பொய்ந்நெறியே. இவ்வுலக வாழ்க்கைக்கு நம் பெரியார் நமக்கு உரைப்பனவெல்லாம் இவையே; அறி, தெளி, நட என்றுதான் கட்டளையிட்டு வருகின்றார். இத்தகைய பகுத்தறிவின் பழமையாகவும் ஒருபுறம் விளங்குவதே சிந்தாமணி.

சிந்தாமணியிலிருந்து சில பொறுக்கு மணிகளைக் காண்போம். பயிர்த்தொழிலில் பழமை பெற்றது நம் நாடு. ஆசிரியர் திருத்தக்கதேவர், பிறர் கூறியதைவிடக் கூர்ந்து கவனித்துப் பிறர் கூறாத நயங்களைக் கூறுகின்றார்.

கதிர் காட்டும் பாடம்!

நெற்பயிர் விளைவில் கதிர் ஈனுங்காலத்தைக் காணுகின்றார் புலவர். தொண்டையில் உள்ளீடு பெறாத மணி பசிய பாலோடு வெளிவருகிறது. அக் கதிரை மறைத்து மேற்போர்வையாகப் பச்சைத்தாள் படிந்திருக்கின்றது. அந்தத் தோற்றம் புலவர்க்குப் புதிய நினைவை உண்டாக்கிற்று. இதற்கு முன் ஒரு தடவை பச்சைப் பாம்பொன்றைப் பார்த்திருந்தார். அதன் வயிற்றை நன்றாக கவனித்திருந்தார். அந்த நினைவு இப்பசிய கதிரீனும் பயிரைக் காணும்பொழுது இரண்டிற்கும் அமைந்தஒற்றுமையைத் தானறிந்தவாறு உலகறிய எண்ணினார். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று அதனை இலக்கியத்தில் இடம்பெறச்செய்தார்.

கதிர் வெளிவருங் காலத்தில் பயிர் தலைநிமிர்ந்து நிற்கும். கதிரில் மணிநிறைந்து முற்றிய காலத்தில் தலைசாய்ந்து படிந்து கிடக்கும். இதனைத் தன் குறிப்பில் ஏற்றிக் கூறுகின்றார். உலகில் நற்குடிப் பிறவாத மக்களிடத்தில் செல்வம் ஏற்பட்டால் அடக்கமின்றித் தலைநிமிர்ந்து செம்மாந்து இருப்பர்; முற்றாத, உள்ளீடு பெறாத நெற்பயிரைப் போல எனவும்; முற்றிக் கதிர் நிறைந்த பயிரைப்போல கல்வியறிவுடைய மக்கள் அடங்கிப் பணிவுடன் காணப்படுவர் எனவும் கூறுகின்றார். குறைகுடம் தளும்பும்; நிறைகுடம் தளும்பாது. வற்றிய ஓலை கலகலக்கும்; பச்சோலைக்கு ஒலியில்லை என்று இப்பொருளைப்பற்றிப் பிறர் கூறியுள்ளனர். திருத்தக்கதேவர்;

"சொல்லருஞ் சூற்பசும் பாம்
 பின் தோற்றம் போல்
மெல்லவே கருவிருந்து ஈன்று
 மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித்
 தேர்ந்தநூற்
கல்விசேர்மாந்தரின் இறைஞ்சிக்
 காய்த்தவே"
 (சிந்தாமணி-53)

[சொல்—நெல்; அரு—சூல் உண்டு என்று சொல்லுதற்கு அரிய, மெல்ல—ஒழுக; தேர்ந்த—மெய்ப்பொருளை ஆராய்ந்த.]

கிணற்று மீன் கிளத்துவது?

சுற்றிக் காண்டல் என்ற முறை அக்காலத்திலும் சிறந்த ஒன்றாக இருந்தது. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியுமா? என்ற பழமொழி பிற்காலத்தில் எழுந்துள்ளது. சிந்தாமணியில்,கிணற்று மீன் என்று கூறப்பட்டுள்ளது. தவளை கிணற்றுக்கு வெளியில் வந்து தரையிலும் வாழலாம்-முடியும். ஆனால் மீனுக்கு இயலாது. எனவே மீனை உவமை கூறிய தன்மையே சிறந்ததல்லவா?

மலை, காடு, கடல் அவற்றை யடுத்த நிலங்கள் ஆகியவற்றைச் சுற்றிக்காண விரும்பி சீவகன் தன் நண்பனிடம்கூறுகின்றான். கிணற்றில் கிடக்கும் மீனைப்போல தங்கள் பிறந்த ஊரிலேயே திரிந்து மடிகின்றவர்கள்—வேறு நாடு சென்று—புதிய பொருள்களைக் கண்டு எய்தும் இன்பத்தை இழந்து விடுகின்றனர். அவர்களைப்போல யானும் வாழ்நாளை வீணாளாக்குவேனா? என்றுகூறி விட்டுப் புறப்படுகின்றான் சுற்றிக் காண. இதனை திருத்தக்க தேவர்:-

"ஊற்றுநீர்க் கூவலுள்
 உறையும் மீன் அனார்
வேற்றுநா டதன்சுவை
 விடுத்தல் மேயினார்
போற்றுநீ போவல்யான்
 என்று கூறினான்"

[கூவல்-கிணறு. அனார்-போன்றவர். மேயினார்—பொருந்தினார், யான் போவல்-யான்போவேன்]

இதனைப் படிக்கும் இளைஞனுக்குப் பல ஊர்களைத் தானுஞ் சுற்றிக் காண விருப்பமுண்டாகுமல்லவா? விடுமுறை நாட்களில் விரும்பிய ஊர்களுக்குச்சென்று ஏட்டில் படித்தவற்றிற்கேற்ப நேரில் காணுகின்றான் .ஒரு புதிய தெளிந்த அறிவைப்பெறுகின்றான். இப்படித்தான் கல்வியின் பயன் இருக்கவேண்டும்.

பாலைவனத்தில் பறவையும் விலங்கும்!

சீவகன் மலை, காடு, கடல் முதலியவற்றைப் பார்த்து ஒரு பாலைவன வழியாக வருகின்றான். அப்பாலைவனத் தன்மையின் கொடுமையைக் கூறும் ஆசிரியர்; சொன்னால் சொல்பவரின் வாயும் வெந்து விடுமென்று அப்பாலைவனத்தின் தன்மையைக் கூறும் சிறப்பு உணர வேண்டிய ஒன்றேயாகும்.

அதிற் கண்டகாட்சி மனைவாழ்க்கைக்கு நல்ல மாண்பளிப்பதாக இருக்கின்றது.

இரண்டு யானைகள். எண்ணுவீர்கள் அவை ஆணா? பெண்ணா என்று. இரண்டுந்தான். பெண் யானையைப் பிடி என்றும்; ஆண் யானையைக் களிறு என்றும் அழைத்தல் மரபு. பிடி கருவுற்றிருக்கிறது: களிறு அதனைக் காப்பாற்றுகிறது. பாலைவன வெப்பத்தில் களிறு தான் அடையுந்துன்பத்துடன் பிடியின் வெப்பத்திலும் பங்குபெறுகின்றது.

மற்றோரிடத்தில், சேவல் சிறகை விரித்து வெப்பத்தை ஏற்றுப் பெடையைக் காப்பாற்றுகின்றது.

கைலைநாதரும்-ஏசுநாதரும்

(தோழர் எஸ். குருசாமி)

[பரமசிவன் விரித்த சடையோடு புலித்தோலை யுடுத்திக்கொண்டு, நெற்றிக் கண்ணில் நெருப்புக் கிளம்ப, விபூதி நெற்றிக் கண்ணில் உதிர்ந்து நெருப்பை அணைத்து விடாதபடி ஒரே வரியாகக் குழைத்து அப்பியபடியே கையில் உடுக்கு, சூலம் முதலியவைகளோடு அரைப்பாகம் பெண் உருவமாய் சுடுகாட்டில் சாம்பல் ஆசனத்தில் படுத்துக் கொண்டிருக்கிறார். ஏசுநாதர் கோவணதாரியாய் சிலுவையில் அறையப்பட்டபடியே பக்கத்தில் படுத்திருக்கிறார். ஏசுநாதருக்கு சுவாசம் மாத்திரம் போய் வந்துகொண்டிருக்கிறது. கைகாலைத் தூக்க முடியவில்லை, ஆனால் வாயைத் திறந்து சில வார்த்தைகள் மாத்திரம் பேசக்கூடியவராய் இருக்கிறார். இருவரும் பேச ஆரம்பிக்கிறார்கள். அடடா! ஒரு அபத்தம்! எந்தப்பாஷையில் பேசுவது? பரமசிவன் தமிழில் பேசுகிறார். ஏசுநாதர் ஹீப்ரு—அல்ல—இங்கிலீஷில் பேசுகிறார். ஆனால் ஒருவர் பேசுவது மற்றொருவருக்கு விளங்கவில்லை. ஆகையால் சிறு மலையடிகள் என்ற ஒரு சைவ சிந்தாந்தி இருவருக்கும் மொழி பெயர்த்துச் சொல்கிறார்.]

கைலை நாதன்:—ஓய்! ஏசுவே! உம் போக்கிரித் தனத்திற்குத் தகுந்த தண்டனை விதித்துக்கூட உம் கொழுப்பு அடங்கவில்லை பார்த்தீரா?

ஏசு:—நிறுத்துங்காணும்! உமது வண்டவாளத்தைக் கிளப்பினால் ஊரெல்லாம் சிரிக்குமே! உம் ஜம்பம் தான் பலிக்காமல் போய்விட்டதே! "செத்த நாய் செருப்பைக் கடித்த" மாதிரி கிடக்கும் பொழுதே, உமக்கு வாய்வீச்சு வேறு இருந்தால், நீர் இன்னும் சரியான நிலையில் இருந்தால் தலைகீழாகத்தான் நிற்பீர்.

கை:-(கண்ணில் நெருப்புப் பொறிபறக்க) அதிகமாய்ப் பேச வேண்டாம். ஓய்! உமது வால்தனத்தை, என் தேசமான இந்தியாவிலும் கொண்டுவந்து விட்டு என்னுடைய ஆட்களையும் உம் கட்சியில் சேர்த்தீரே, அதற்குத் தண்டனை வெகு சீக்கிரம் அனுபவிப்பீர். "தகப்பன் பெயர் தெரியாத" நீர், ஏதோ யோக்கியன் மாதிரிப் பேசுகிறீரே! கலியாணமாகாத கன்னிப்பெண்ணுக்குப் பிறந்த பிள்ளையாம்! பேஷ்! கன்னிப்பெண்ணுக்கு எந்த அவயவம் வழியாகப் பிறந்தீரோ! வெட்கங்கெட்ட பிழைப்பு! இந்த லட்சணத்தில் நல்ல மாடு உள்ளூரில் விலை போகாமல் இந்தியாவுக்கு வேறு வந்து விட்டீரே!

ஏ-ஓய்! அதிகப்பிரசங்கி! நிறுத்தும் உமது பேச்சை! உம் நாற்றம் தான் ஊர்முழுதும் நாறுகிறதே! என்னைத்தான் தகப்பன் பெயர் தெரியாதவன் என்றீர். உமக்குத் தாயார் பெயர்கூடத் தெரியாதே! தந்தையுமில்லாமல் தாயாருமில்லாமல் எப்படி முளைத்தீரோ! உம்முடைய பாதி உடலில் உமது சம்சாரத்தையும் நிர்வாணமாய் ஒட்ட

அதுமட்டுமா? கலை [ஆண்மான்] பிணை [பெண்மான்]க்கு நிழலளிக்கும் காட்சி ஓவியத்தில் வரையவேண்டியதேயாகும். கருவுற்ற பெண்மான் பாலைவனத்தின் வெப்பத்தால் பரிதவிக்கின்றது. அதன் துன்பத்தைக்காணச் சகியாத ஆண்மான் அவ்வெய்யலில் தானின்று தன் நிழலை அப்பெண்மானுக்கு அளிக்கின்றது என்று கூறும் சிந்தாமணிச் செய்யுட்கள் இன்பபுரிக்கே இழுத்துச் செல்வனவாகும். அன்புவாழ்வே இன்பமாகும். கானுறைகடு விலங்கும் தன்பெடையிடம் வாழும் அன்பு வாழ்வையறிகின்றோம். பாலைவன விலங்குகளே தாம் விரும்பிய பெடையோடுகூடி, ஒன்றற் கொன்று உதவி உயிர் வாழ்கின்றன என்று அறிந்தால் மனித வாழ்க்கை எப்படி இருக்க வேண்டுமென்று சொல்லவாவேண்டும்?

தம்பியுள்ளான் படைக்கஞ்சான்!

சீவகனுக்கு நண்பனாக ஒரு தம்பி கிடைத்தான். உடன் பிறப்பாக ஏற்ற சீவகனின் உள்ளம் அவனிடத்தில் கொண்ட பேரன்பைப் புலவர் எடுத்துக் காட்டுகின்றார்.

அரிய பொருளை முயற்சியால் அடையலாம்! பகைவரை வென்று விடலாம் பெருமிதத்தால்! நண்பர் மனைவி, மக்கள் யாவரையும் அடையலாம்! ஆக்கமுடியாத ஒளி பொருந்திய பொருள் எது வென்றால் அது உடன் பிறப்பு! என்று கூறுஞ் சிறப்பைப் பாருங்கள்.

"திண்பொருள் எய்தல் ஆகும்
தெவ்வரைச் செருக்கலாகும்
நண்பொடு பெண்டிர் மக்கள்
யாவையும் நண்ணலாகும்
ஒண்பொரு ளாவதையா
உடன்பிறப்பு ஆக்கல் ஆகா
எம்பியை ஈங்குப் பெற்றேன்
என்னெனக் கரிய தையா!"

என்று காணும் பகுதி உடன் பிறப்பின் மேன்மையை உணர்த்துவது எவ்வளவு சிறப்பாக இருக்கின்றது. இதிலிருந்து கடன் வாங்கித்தான் கம்பன் தன்னூலில், குகனின் கூட்டுறவைக் கூறுகின்றான் என்பது இங்கு எண்ணிப் பார்க்கவேண்டியதாகும்.

இக்கட்டுரையில், காவியத்தில் சிறந்த சிந்தாமணியின் சிறப்பும், வேடதாரியாகிய ஆரிய முனிவர்களின் கடைகெட்ட போக்கைக் கண்டிக்கும் சீவகனின் பகுத்தறிவும், இயற்கைப் பொருள்களையும்-செயற்கைப் பொருள்களையுஞ் சென்று காணவேண்டுமென்னும் சிந்தனையும், பாலைவனக் காட்சியால் — மனையாளுடன் அன்பு முறையில் இல்லறம் நடத்தவேண்டுமென்ற அறிவும், உடன்பிறப்பாளரிடம் கொள்ள வேண்டிய அன்பும்-பிறவும் கற்பவர் உள்ளங்கவர வேண்டுவனவாகும்.

வைத்துக்கொண்டிருக்கிறீரே! உலகத்தார் பார்த்து உம்மைக் கிறுக்கன் என்று நகைக்கிறார்களே! உடலோடு ஒரு பாதி பெண்ணும், தலையில் ஒரு பெண்ணும் இருக்கும், ரிஷி பத்தினிகளைக் காதலித்து அவமானப் பட்டது எனக்குத் தெரியாதா? உனது அடியார்களின் மனைவியிடத்திலும், அவளுடைய மயிரிடத்திலும் காதல் கொண்டு கேட்டு வாங்கிய ஆபாசச் செய்கை எனக்குத் தெரியாதா? தாயாரைப் புணர்ந்தவனுக்கு மோட்சம் கொடுத்த விந்தை எனக்குத் தெரியாதா? உன் பெயரே அடியோடு இந்தியாவில் ஒழிந்து போகவேண்டுமென்று தானே நான் சதா வேலை செய்துகொண்டிருக்கிறேன். இப்பொழுதே லட்சக்கணக்கானவர்களை உன் கட்சியிலிருந்து என்கட்சிக்குச் சேர்த்துவிட்டேன். இன்னும் சில வருஷங்களுக்குள் பார்! உன்பெயர் சொல்லக்கூட ஆள் இல்லாதபடி செய்துவிடுகிறேன்.

கை—ஓய்! ஏசுவே! ரொம்ப ரொம்ப விரட்டாதேயும். உம் கட்சிக்காரர்களே ஐரோப்பாவில் இரண்டு பாகமாகப் பிரிந்து பலத்த சண்டையிட்டு ரத்த ஆறாக ஓடும்படி செய்தார்கள். இப்போதுங்கூட கத்தோலிக்கர்—பிராட்டஸ்டெண்ட் என்றால் எலியும், பூனையுமாக இருக்கிறார்களென்பதைப் பார்க்கஉமக்குக் கண்ணில்லைபோலிருக்கிறது. உம் வால்தனமெல்லாம் என்னுடைய தேசத்தில் முடியவே முடியாது என்பது ஞாபகத்திலிருக்கட்டும். கிருஸ்தவர்களுக்குள்ளேகூட என் சிஷ்யர்கள் ஜாதி என்பதை நுழைத்து விட்டார்களே! எல்லாரும் சமம் என்பதற்காக உம்மதம் ஏற்பட்டதாகப் பீத்திக்கொள்ளுகிறீரே! நாக்கைப்பிடுங்கிக்கொண்டு சாகவேண்டாமா? உம் மதத்தில் கூட என் ஆட்கள் விஷமம்செய்து விட்டார்களே! என் தேசத்தில் உமக்கு இருக்கும் சிறு தொகையில் 100-க்கு 90-பேர், பறையக் கிறிஸ்துவர், பள்ளக் கிறிஸ்துவர், நாடார் கிறிஸ்துவர், நயினார் கிறிஸ்துவர், உடையார் கிறிஸ்துவர், பிள்ளை கிறிஸ்துவர், முதலி கிறிஸ்துவர், பார்ப்பாரக் கிறிஸ்துவர், நாயர் கிறிஸ்துவர் என்று தானே சொல்லிக்கொள்ளுகிறார்கள். "நீண்டப்படாத கிருஸ்தவர் மகாநாடு" என்று எல்லாம் கூடப் பல பக்கங்களில் நடத்தினார்கள்! உமக்கு வெட்கமில்லை? மானமில்லை; சுயமரியாதை இல்லை என்னமோ இந்தியர்களை ஜெயித்து விட்டதும்போல் பெருமைப் படுத்திக்கொள்ளுகிறீர்! எங்கள் ஆட்களை ஜெயிக்க உம்மால் முடியுமா ஓய்!

ஏ:—அதெல்லாம் சரிதான் காணும் எத்தனை பேர் உம் ஆட்களிலேயே சாம்பலைப் பூசிக்கொள்ளவே வெட்கப்படுகிறார்கள்? இதெல்லாம் யார் வேலை? என் ஆட்கள் சொல்லிக் கொடுத்தபடியும் நாகரீகமுமல்லவா காரணம்? உம்ம கோவில்களைத்தான் உம் ஆள் காந்தியே "விபசார விடுதி" என்றாரே! உமக்கு ஏதாவது ரோஷமிருந்தால் அல்லவா இதெல்லாம் யோசித்துப் பார்க்க நேரமிருக்கும்? உம் கோவிலில் உமது சிலையின் பேரில் வௌவால்தானே புழுக்கை போடுகிறது! வேறு என்ன அங்கே இருக்கிறது?—அதெல்லாம் போகட்டும்.

எது நாடு?

நாடு என்று சொன்னால், அது தன்னிடத்தே வாழும் மக்களின் தேவைக்காக மற்ற நாடுகளை நாடாதவாறு எல்லா வகையான வளத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கவேண்டும்! மற்ற நாடுகளின் தயவை எதிர்பார்த்து வாழவேண்டிய நிலையிலிருந்தால் அது நாடு ஆகவே மாட்டாது!

திருவள்ளுவர்.

உம்மை அடியோடு அழிப்பதற்குத்தான் சுயமரியாதைக்காரர்கள் புறப்பட்டிருக்கிறார்களே! சுபார் மூன்றரை லட்சத்திற்கு மேல் தென் இந்தியாவிலும் மலேயாவிலும் சிலோனிலும் இருக்கிறார்களே? அவர்கள்தான் உன் ஆணிவேரையே வெட்டிக்கொண்டிருக்கிறார்களே! அந்த மூன்றரை லட்சம் பேரும் உன்னை மதிப்பதே கிடையாது உன் கோவிலுக்குப்போவதும் கிடையாது. உன் சாம்பலைப் பூசிக்கொள்வதே கிடையாது. அவர்கள் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே உங்கள் ஆட்களெல்லாம் பயந்து நடுங்குகிறார்கள் 'திருஞான சம்பந்தர்' அவதாரம் செய்வார்; 'சுயமரியாதை இயக்கத்தை ஒரே வருஷத்தில் கருவறுப்பதற்குத் தவங் கிடக்கிறேன்; என்று சொன்ன படேபடே ஆசாமிகளெல்லாம் கேட்பாரற்று மூலையில் பதுங்கி அடங்கி ஒடுங்கி பழுதைபோல் படுத்துக்கிடக்கிறார்களே! இன்னும் சில வருஷங்களில் இந்த மூன்றரை லட்சம் ஆட்களும் இந்தியா முழுவதும் உனக்கு எதிரியாக ஆகிவிடுவார்களே! பம்பாயில் கூட ஒரு சங்கம் உண்டாக்கி விட்டார்களே! இங்கிலீஷில்கூட பத்திரிகை போடுகிறார்களே உன் யோக்கியதை நிமிஷத்துக்கு நிமிஷம் வெளியாகிக்கொண்டு தானே இருக்கிறது!

கை:- (சூலத்தை ஆட்டிக் கொண்டு,) போதும்! போதும்!! உமது நிலைமை எனக்குத் தெரியாதா? உம் செல்வாக்கு ருஷியாவில் எப்படி அய்யா இருக்கிறது? என்கோவில்களிலாவதுவௌவால் அடைந்திருக்கிறது என்கிறீர், உம் கோவில்களை இடித்துவிட்டு தொழிற்சாலைகள் கட்டிவிட்டார்களே! இங்கிலாந்தில் கூட லண்டன் 4, 6-ஜான்சன்ஸ் கோர்ட், ப்ளீட்ஸ்டிரீட்டில் உம் குட்டு தினம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறதே! அமெரிக்காவில் நியூயார்க் வீதித் தெருவில் உம் வேருக்கு வெந்நீர் ஊற்றிக் கொண்டிருக்கிறார்களே! பிரான்சில் வெகு மும்முரமாக உமக்குக் குழிதோண்டிக்கொண்டிருக்கிறார்களே! அதெல்லாம் போகட்டும் ருஷியா என்று சொல்லும் போது ஏன் உமது முகம் சிவத்தது? ஒரே வேர்வையாக வேர்த்ததே அது ஏன்? உடம்பு ஆடிற்றே அது ஏன்?

பல குரல்கள் கேட்கின்றன;—எங்கே ஏசு? எங்கே சிவன்? மனிதர்களைப் பிரித்த மாபாதகர்கள் எங்கே? கொண்டா அவர்களை! பொசுக்கு அவர்களை ஹோ! ஹோ! சிவனும், ஏசுவும்:—

திருச்சிற்றம்பலம்-Amen.

காதல்

இன்பமா? துன்பமா?

“ஜர்னல்”

காதல் என்பது அற்புதமான பெரிய இன்பத்தை அளிக்கக்கூடியது. அதுபோலவே மிக இழிவான துன்பத்தையும் தரவல்லது. விஞ்ஞானிகளும் மனோதர்ம சாஸ்திரிகளும் காதலின் தோற்றத்தை விவரிக்க முயன்றிருக்கிறார்கள். காதலை அவர்கள் ஒருவித விதிவாய்ப்பாட்டுக்குள் அடக்கப்பிரயத்தனப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அப்படிச்செய்ய சாத்தியப்படவில்லை. காதல் பகுத்தறிவைப் பொறுத்ததல்ல. அது ஒருவித இயற்கை உணர்ச்சியைச் சார்ந்தது. அவ்வுணர்ச்சி ஒருவகை பைத்தியத்தைப் போன்றது. பலமான காதற்கவர்ச்சியால் எழும் மனோவிகாரம் பகுத்தறிவின் தொடர்பை இழந்து விடுகிறது.

காதலற்ற கலியாணம்.

காதலற்ற கலியாணத்தில் உண்மையான இன்பம் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். காதல் முற்றிய அநேகர் கலியாணம் செய்துகொள்கிறார்கள். ஆனாலும் அதே சதிபதிகள் விவாகரத்துக்கு மனுப்போட்டு விடுகிறார்கள். மேனாட்டில்விவாக ரத்தைவிரும்புகிறவர்களின் எண்ணிக்கையைப்பார்க்கும்போது காதல் உறவில் பெருந்தவறுகள் ஏற்படுகின்றனவென்றுசுவாகிறது. விவாகம் என்பது ஒரு சூதாட்டம் போன்றது என்பது உண்மைதான். அதில் வெற்றி கிடைப்பது நிச்சயமில்லை. என்றாலும் விவாகத் தோல்வியின் அபாயத்தை பெரிய அளவுக்கு நாம் குறைத்துக்கொள்ள முடியும்.

காதல் லட்சணம்.

“காதல் என்றால் வாழ்க்கை லட்சணத்தின் திவ்யப் பிரகாசம் எனலாம். வாழ்க்கையின் இன்ப துன்பங்கள் முழுவதையும் ஒருவரே தனித்திருந்து அனுபவிக்க முடியாது. நம்மால் அன்னியோன்னியமாய் நேசிக்கப்படும் பிறரோடும் சேர்ந்து அவைகளை அனுபவித்தால்தான் பூரணதிருப்தியேற்படும்” என்று ஆவ்பரி என்ற அறிஞர் கூறியிருக்கிறார். உயர்ந்த முறையில் காதலுக்கு அர்த்தம் சொல்லவேண்டுமானால் அது அன்பளாவிய தோழமை என்றே சொல்லவேண்டும். அத்தகைய தோழமைக்குரிய கவர்ச்சி நேசமனோதத்துவங்களின் இணக்கச் சமநிலையிலிருந்து தோன்றுகிறது. வெறும் தேகலட்சண மேம்பாட்டால் உண்டாகும் கவர்ச்சியைக் காதல் என்று சொல்ல முடியாது. காதல் அளவிலா காலத்திற்கு நீடித்திருக்கும் இயல்புபெற்றது. ஆனால் தேக லட்சணக் கவர்ச்சி வெகுகாலம் நிலைத்திருக்க முடியாது. எதில் ஜெயம் பெறவேண்டுமானாலும் சம நிலையும் நிதானமும் வேண்டும். காதல் ஒருவருடைய மனோதத்துவ சம நிலையை அழித்துவிடக்கூடியது. மனதிற்கு காதலைவிட அதிக தீங்கிழைக்கத்தக்கது வேறெதுவுமில்லை; அதற்கு சுயநலக்கொள்கை அதிகமுண்டு. அது ஒருவருடைய சொந்தப் பொறுப்புகளை மறக்கச்செய்யும் தன்மையுடையது. ஒருவருக்கு மூடத்தனமான விசித்திரமனப்பான்மையை அதுஉண்டாக்கிவிடும்.வருந்தீங்கை உணராது ஒருவர் மற்றொருவர்மீது அதிகமான காதல் கொள்ளலாம் ஆனால் அது காரணமாக அவர்கள் தங்கள் தங்கள் குற்றங்களை உணராதிருந்துவிடக் கூடாது. அநேக காதலர்கள் உண்மைகளை அறிந்துகொள்ளச் சிரத்தை கொள்ளாக் காரணத்தால் தங்கள் மண வாழ்க்கையின் இன்பத்தைக் கெடுத்துக்கொள்கிறார்கள், ஒருவர் உண்மையை ஒருவர் அறிந்துகொள்ளாமல், ஏதேதோ மனோபாவனை செய்துகொண்டு வழிதப்பிப் போய்விடுகிறார்கள். பெண்கள் தங்கள் காதலர்களின் உண்மை விஷயங்களை அறியாது போவதால் குடும்பங்களில் அநேக துக்க சம்பவங்கள் நேர்ந்துவிடுகின்றன.

காதலில் தோல்வியேன்?

அநேக பெண்கள் காதலில் இன்பங்காணத் தவறிவிடுகிறார்கள். ஏனென்றால் அவர்கள் காதலைப்பெற விரும்புகிறார்களே தவிர அதை அவர்கள் திருப்பிக் கொடுப்பதேயில்லை. அதனால் தான் தோல்வி ஏற்பட்டுப் போகிறது. காதல் என்றால் ஊழியம் என்றுகொள்ளவேண்டும். பரஸ்பரமாய் ஒருவரை ஒருவர் காதலிக்கும்போது, அக்காதலர்கள் ஒருவருக்கொருவர் ஊழியஞ் செய்துகொள்ளத் தயாராயிருக்க வேண்டும். ஒருவர் மற்றொருவரிடம் தன்னலம், பொறாமை ஆகியவைகளைக் காட்டினால், அவரிடம் சுயநலமும் பொறாமையுந்தான் திரும்பக் காட்டப்படும். ஒருவர் எத்தகைய தன்மை பெற்றிருக்கிறாரோ, அதைப்பொறுத்தே அவருடைய வாழ்க்கைப் பலனும் நிர்ணயிக்கப்படுகிறது.

இணக்கம் என்பது வாழ்க்கையின் சட்டம். ஆகவே அது காதல் சட்டமுமாகும். ஒருவருக்கு விவாகத்தில் திருப்தி ஏற்படவேண்டுமானால், சதிபதிகள் நேர்மையான ஒற்றுமை இருக்கவேண்டும். காதலர் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து கொள்வதின் மூலமாயே அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுகிறது. கணவனும் மனைவியும் தங்கள் தங்கள் குணபாவவித்தியாசங்களைப்புத்திசாலித்தனமாய்ச்சரிக்கட்டிக்கொள்ளும் சக்தி பெற்றிருக்கவேண்டும். காதலின் வெற்றி பக்களின் அத்தகைய சக்தியையே பொறுத்திருக்கிறது. காதலர்கள் தம்முள் மனமொத்துப்போகவே முயற்சிக்கவேண்டும். அதன்பொருட்டு ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துக் கொள்ளவும் வேண்டும். சில சமயங்களில் கோபத்தி

(தொடர்ச்சி 18-ம் பக்கம்)

குடி அரசு

15—1—49 சனிக்கிழமை.

பொங்கல் நாள்!

—o—

உழுது பாடுபட்ட பாட்டாளி உழுபயன் காணும் நாள்! உலகம் மகிழும் நாள்!!

மழையென்றும் வெய்யல் என்றும் பாராமல், மனைவி மக்கள் ஆகிய முழுக் குடும்பத்துடனும் மாட்டுடன் போட்டி போட்டுழைத்து, எதிர்பார்த்தும்—எதிர்பாராமலும் வரும் எல்லாவகைக் கேட்டினையும்சமாளித்து, இரத்தத்தை வியர்வையாகப் பிழிந்து, அது போதாமல் அட்டைகளுக்கும் பாம்புகளுக்கும் பச்சை ரத்தம் பரிமாறிய உழவன், நெளியும் நெற்குலைகண்டு நீண்ட நெட்டுயிர்ப்போடு, ஆனந்த பரவசனாய் அடையும் அமைதிக்கு எதனைத்தான் எடுத்துக்காட்டாகச்சொல்ல முடியும்?

இரட்டைப் பிள்ளைகளைச் சுமந்து வருந்திய தாய், பின் ஈன்றபோது, அவற்றின் இன்முகம் கண்டு மகிழும் மகிழ்ச்சியைக்கூட, உழவனின் மகிழ்ச்சிக்கு ஒப்பாகச் சொல்லமுடியாது.

ஆம்! தாய்மை யுணர்ச்சியில் ஒரு தனிப்பெரும் இன்பம் உண்டென்றால், அந்தத் தாய்மை உணர்ச்சி என்பது, உழவனின் தாய்மை உணர்ச்சியின் முன்பு ஒரு மிகச் சிறிய பகுதியே யாகும். “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” அல்லவா? வரப்புயர்ந்தால்தான் மற்றவை யுயர முடியுமல்லவா? எங்கு சுற்றியும் உழவனின் காலடியை நோக்கித்தானே இவ்வுலகம் கிடக்கின்றது? அதனால் தான் உழவனின் உள்ளப்பூரிப்பைத் தன் பூரிப்பாக, உழவனின் புது வருவாயைத் தன் புது வருவாயாக, அவன் அகத்தின் புத்துணர்ச்சியைத் தன் புத்துணர்ச்சியாக, புறமும் அகமும் புதுமை பொலிந்து நாடு கொண்டாடிட, பொங்கல் புதுநாள் தோன்றியிருக்கிறது—தோன்றியிருக்கவேண்டும்.

உழவனின் பாட்டுக்கு ஒரு பெரும்துணையாய் நின்று உழைக்கும், அவனின் ஒப்பற்ற செல்வமாகிய ஆவினத்தை அவன் எப்படி மறந்துவிட முடியும்?

“சாரத்தைக் கொடுத்து விட்டுச் சக்கையையுண்டு வாழும் உன் உழைப்பல்லவா, உன்னுடைய ஒத்துழைப்பல்லவா என்னை இன்று உலகம் கொண்டாடுகிறது! உன்னை நான் மறந்தால் உய்வேனா? உனது பாட்டால் அல்லவா நான் பெருமையடைகிறேன்! ஆகவே நான் உன்னைப் போற்றுகிறேன், உன்நன்றியை ஒருநாளும் மறவேன்” என்கிறான் உழவன் ஆவினத்தை நோக்கி. அவனுக்குப் பின்பாட்டுப் பாடுகிறது உலகம் “மாட்டுப்பொங்கல்” வைத்து. ஏன் அவன் வழிதானே உலகம் செல்லமுடியும்?

உழைப்போன் உறுபயன் காணும் நாள்! உலகம் மறுமலர்ச்சியடையும் நாள்! உழைப்புக்கு நன்றி செலுத்தும் பொங்கல்நாள்!

சரி, இன்று உழவனின் நிலை என்ன? உழவு வேலையைச் செய்பவன், மன்னனுக்கு மன்னன் என்ற நிலைவேண்டாம். மனிதனாகவாவது மதிக்கப்படுகிறானா? மிருகத்தினிடத்துக் காட்டும் ஒரு பரிவு-விசுவாசம்--இரக்கவுணர்ச்சியைக்கூட அவனிடம் காட்டுவதற்குத் தயங்குகிறது இன்றைய உலகம். உழவுத் தொழில் செய்வோர் “சண்டாளர்கள்” என்று உறிஞ்சிப் பிழைக்கும் பார்ப்பனர்கள் எழுதிவைத்துக் கொண்டிருப்பது போல, இன்று எவரும் எழுதும்படியான அநாகரீகக் காட்டுமிராண்டி நிலையில் இல்லாவிட்டாலும், அதற்கு மாறாக, “உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்” என்று முழக்கும்படியான நாகரீக நிலையில் இருக்கின்றார்கள் என்றாலும், உழவன் தன்னைத்தானே “சண்டாள்” நிலையில் வைத்துக்கொள்ளும்படியாக அதாவது அறிவுத் துறையை அணுகும் வாய்ப்பில்லாதவனாய், அனுபவிக்கும் பண்பாடு அணுவளவும் அற்றவனாய், குறுகிய அளவுக்குள் குட்டையான உலகத்தில் கிடந்து உழல்பவனாய் இருந்து வருகிறான். அவன் அப்படி இருந்து வரவேண்டியதை என்றைக்குமே சர்வ ஜாக்கிரதையாகப்பார்த்துகொள்கிறது, அதாவது அறிவோ பொருளோ அவனை நெருங்க விடாதபடி, நெருங்கினாலும் பறிமுதல்செய்து விடும்படியாய் இருந்து வந்திருக்கிறது அவனைச் சுற்றிச் சூழ்ந்துறையாடும் சமூகம். இருந்தும் நயவஞ்சக நரிக்குணம் படைத்த சமுதாயம், பொங்கல் விழாவிலே பங்குகொள்ளத்தான் செய்கிறது!

உழவை, உழவுத் தொழில் செய்பவனைப் போற்றும் இந்த நாள் உண்மையில் பாவனையாக, சடங்காக, பரம்ரைப் பழக்கமாக கொண்டாடப்பட்டு வருகிறதே தவிர, மேலும் இந்தச் செய்ந்நன்றிநாளுக்கு மிகமிக ஆபாசமான கதைகள் வேறு பின் நாட்களில் கற்பிக்கப்பட்டு இருக்கிறதே தவிர வேறு என்ன?

இன்று யார் யார் உழவுத்தொழிலைச் செய்கின்றார்களோ, சேற்றிலும் பனியிலும் கிடந்து சீரழிகின்றார்களோ அவர்களுக்கு நிலத்திலே உரிமையில்லை. ஒரு சிலருக்கு, ஏதோ ஒரு அளவுக்கு உண்டு என்றாலும் அது இறங்குமுகமாக, நாளுக்குநாள் கரைந்துகொண்டுதான் வருகிறது. ஏன் இந்த நிலை? என்றைக்குமே இவர்களுக்கு நிலத்தில் உரிமையிருந்ததில்லையா? இல்லைஎன்று எவராவது கூற முன்வரமுடியுமா? காடு திருத்தி வயலாக்கிக் கழனியாகக் கண்டவன்—அவன் பரம்பரை—பின் சந்ததிக்கு எதனால் அந்தக்கழனியில் உரிமை இல்லாது போயிற்று? வயல் வரப்பையே மிதித்தறியாத, வாடாத மேனியருக்கு அந்த வுரிமை எப்படி வந்தது? ஏமாந்த காலத்தில் சிலர் ஏற்றங்கொண்டுவிட்டார்கள் என்றால், எப்படிச் சிலர் ஏமாற்றினார்கள், பலர் ஏமாந்தார்கள்?

கேள்வி-பதில்

கேள்வி: நாம் பாடுபட்டாலும் வயிற்றுக்குப் போதும்படியான ஆகாரம்கூடக் கிடைப்பதில்லை. ஆனால் பார்ப்பனர்கள் பாடுபடாவிட்டாலும் அவர்களுக்கு வயிறு புடைக்கக் கிடைக்கின்றது. இதற்கு என்ன காரணம்?

பதில்: நமது மதமும் ஜாதியும்.

* *

கே: நாம் பாடுபட்டுச்சம்பாதித்தும் நம்ம பிள்ளைகள் படிக்க முடியாமல் நம்மில் 100க்கு 90 பேருக்கு மேலாக தற்குறியாயிருக்கிறோம். ஆனால் பாடுபட்டுச் சம்பாதிக்காமல் பிச்சை எடுக்கும் பார்ப்பனர்களில் 100க்கு 100பேர் படித்திருக்கிறார்கள். இதன் காரணம் என்ன?

ப: மதமும் ஜாதியும்.

* *

கே: நமது பணக்காரக் குடும்பங்கள் வரவர பாப்பராய்க் கொண்டே வருவதற்குக் காரணமென்ன?

ப: வினையின் பயன். அதாவது நம்மவர்கள் தங்கள் சமூகத்தார் பட்டினி கிடப்பதையும், கல்வி அறிவு இல்லாமல் இருப்பதையும் சிறிதும் கவனியாமல்பார்ப்பானுக்கே போட்டு அவர்களுக்கே படிப்புக்குப் பணமும் கொடுத்து வந்த "பாவமானது" அந்தப் பார்ப்பனர்களே வக்கீலாகவும், ஜட்ஜிகளாகவும் வந்து மேற்படி

பார்ப்பனரல்லாதார்களைப் பாப்பராக்குகிறார்கள். அதற்கு யார் என்ன செய்யலாம்?

* *

கே: எந்தவிதமான விபசாரம் குற்றம் சொல்லத் தகுந்ததாகும்?

ப: வெளியார்க்குத் தெரியும்படியாகச் செய்த விபசாரம் குற்றம் சொல்லத்தகுந்ததாகும்.

* *

கே: கிறிஸ்தவனாகப் போவதில் என்ன கெடுதி?

ப: ஒரு கெடுதியும் இல்லை. ஆனால் மதத்தின்பேரால் குடிக்க வேண்டாம்.

* *

கே: மகம்மதியனாவதில் என்ன கெடுதி?

ப: ஒரு கெடுதியுமில்லை. ஆனால் பெண்களுக்கு மூடி போடாதே.

* *

கே: உண்மையான கற்பு எது?

ப: தனக்கு இஷ்டப்பட்டவனிடம் இணங்கிஇருப்பதே, உண்மையான கற்பு.

* *

கே: போலிகற்பு என்றால்எது?

ப: ஊராருக்கோ, சாமிக்கோ, நரகத்திற்கோ, அடிக்கோ உதைக்கோ, பணத்திற்கோ பயந்து மனதிற்குப் பிடித்தமில்லாதபோது இணங்கிஇருப்பதே போலிக்கற்பு.

* *

கே: மதம் என்றால் என்ன?

ப: இயற்கையுடன் போராடுவதும் அதைக் கட்டுப்படுத்துவதும் தான் மதம்.

* *

கே: தொழிலாளர்களுக்கு பண்டிகை நாள்களில் ஏன் ஒய்வு(லீவு) கொடுக்கப்படுகின்றது.

ப: பாடுபட்டுச்சம்பாதித்த மீதி வைத்ததைப் பாழாக்குவதற்காக.

* *

கே: பெண்களைப் படிக்கக் கூடாது என்று ஏன் கட்டுப்பாடு ஏற்படுத்தினார்கள்?

ப: அவர்களுக்கு அறிவு இல்லை, ஆற்றல் இல்லை என்று சொல்லிச் சுதந்திரம் கொடாமல் அடிமையாக்குவதற்காக.

* *

கே: மனிதனுக்குக் கவலையும் பொறுப்பும் குறைய வேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

ப: பெண் அடிமையை ஒழித்து அவர்களுக்கு முழுச்சுதந்தரம் கொடுத்து விட்டால் ஆண்களுக்கு அநேக தொல்லைகள் ஒழிந்து போகும்.

* *

கே: பெண்களுக்கு நேரம் மீதியாகவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

ப: தலைமயிரை வெட்டி விட்டால் அதிக நேரம் மீதியாகும்.

* *

கே: பெண்கள் கைக்கு ஓய்வு கொடுக்கவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

ப: அவர்களுக்கு ஒரு குப்பாயம் (மேல்சட்டை) போட்டு விட்டால் கைக்கு ஓய்வு கிடைத்துவிடும். (இல்லா விட்டால் அடிக்கடி மார்புச் சேலையை இழுத்திழுத்துப் போடுவதே வேலையாகும்.)

*

உரிமையற்ற உழவனுக்கு உழைப்பால் விளைந்த பெரும் பயன் எப்படி உவகையை உண்டாக்கும் — உள்ளம் பூரிப்பால் பொங்கும்? எண்ணிப்பார்க்கும் இயல்பையுடையவன் என்றால் எரிமலையை யல்லவா அவன் உள்ளம் தோற்கடிக்கும்—தோற்கடிக்க வேண்டும்! "உழைத்தேன்! உறு பயன் கண்டேன்!!" என்று அவன் உள்ளம் ஆனந்தப்பள்ளுப்பாட முடியுமா இந்தப் பொங்கல் நாளில்?

இன்று உழவனின் நிலை என்னவோ, அதுதான் இந்நாட்டுப் பெரும்பாலோரின் நிலை! உழவன் எதனால் எப்போது எப்படி ஏமாற்றப்பட்டானோ, அப்படித் தான் மற்ற பெரும்பாலோரும் ஏமாற்றப்பட்டனர்! உழவன் நிலை—உழைப்போன் நிலை என்றைக்கு உயர்வு அடையுமோ, அன்றுதான் மற்றையோரின் நிலையும் வளம்பெற முடியும்! உழவனும், அவன் நிலையிலுள்ள மற்றையோரும் இப் பொங்கல் நாளில் இதற்கு மாற்றம் காண, பொங்கல் நாள் பயன்படட்டும்!

இப் பொங்கல் இதழுக்கென, நம் குறைந்த கால வேண்டுகோளை ஏற்றுப் பேரன்போடு பெரியாரவர்களும் மற்றும் பல அறிஞர்களும் பல சிறந்த—தேவையான கருத்துகளைத் தந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு நம் நன்றி!

கே: எல்லோருக்கும் போதுமான அளவு ஆகாரம் இருக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

ப: ஒருவனும் தன் தேவைக்கு மேல் எடுத்துக் கொள்ளாவிட்டால் எல்லோருக்கும் வேண்டிய அளவு கிடைத்துவிடும்.

* *

கே: பெரிய மூடன் யார்?

ப: தனது புத்திக்கும், பிரத்தியக்ஷ அனுபவத்திற்கும் தோன்றுவதை நம்பாமல் எவனோ ஒருவன் எப்போதோ சொன்னதை நம்பி வாழ்வை நடத்துபவன் பெரிய மூடன்.

* *

கே: ஒழுக்கம் என்பது என்ன?

ப: ஒழுக்கம் என்பது தனக்கும், அன்னியனுக்கும் துன்பம் தராமல் நடந்துகொள்வதாகும்.

* *

கே: சமயக் கட்டுப்பாடு ஜாதிக் கட்டுப்பாடு என்றால் என்ன?

ப: மனிதனை தன்மனச்சாக்ஷிக்கும், உண்மைக்கும் நேராய் நடக்க முடியாமல் கட்டுப்படுத்துவதுதான் சாதி சமயக் கட்டுப்பாடாய் இருக்கின்றது.

* *

கே: உண்மையான கடவுள் நம்பிக்கை என்றால் என்ன?

ப: கடவுள் எங்கு மறைந்து போவாரோ, என்று பயந்து அவரைக்காக்க பிரயத்தனம் செய்வது தான் உண்மையான கடவுள் நம்பிக்கையாகக் காணப்படுகிறது.

* *

கே: ஜனநாயக ஆட்சி என்றால் என்ன?

ப: தடி எடுத்தவன் தண்டக்காரனென்பதுதான் ஜனநாயக ஆட்சி.

* *

கே: நம் நாட்டில் ஜனசங்கை பெருகவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

ப: அதிகமாக பிள்ளை பெறுவதை நிறுத்தி விதவைகளுக்கு மறுமணம் செய்தால் நல்ல திடகாத்திரமுள்ள ஜனசங்கை பெருகும்.

* *

கே: நம் நாடு சீர்ப்பட என்ன வேண்டும்?

ப: நம் நாடு சீர்ப்பட்டு நாமும் மனிதர்கள் என்று உலகத்தோர் முன்னிலையில் சிறந்து நிற்க வேண்டுமானால் நாஸ்திகமும், நிபந்தனையற்ற பெண்கள் விடுதலையும் வேண்டியதாகும்.

* *

கே: இந்தியா அடிமையானதற்குக் காரணம் என்ன?

ப: இந்தியா கெட்டு நாசமாய் என்றும் விடுபட முடியாத அடிமையாய்ப் போனதற்குக் காரணம் அவர்கள் மதமும், கடவுள்களுமேயாகும்

* *

கே: கிறிஸ்தவ மதத்தில் சில ஆபாசக் கொள்கைகள் இருந்தும் அவர்கள் எப்படி உலகை ஆளுகிறார்கள்?

ப: கிறிஸ்தவமதத்தில் எவ்வளவு ஆபாசமும் முட்டாள் தனமுமான கொள்கைகளும் இருந்த போதிலும் அதைப்பற்றி நமக்கு கவலை இல்லை. ஏனெனில் அவர்கள் பெருந்தனமும் பகுத்தறிவுப் பெருமதிப்பு கொண்டவர்களாகி விட்டார்கள். அவர்கள் வாழ்க்கைக்கோ, மன உணர்ச்சிக்கோ சிறிதும் மதத்தை லட்சியம் செய்வதில்லை. ஆதலால் அவர்கள் மதத்தைப்பற்றி நாம் பேசுவது பயனற்றதும் முட்டாள் தனமுமாகும்.

செய்யாதே!

இவ்வுலகில் ஒரு மனிதனுக்குச் சிறந்தவர் யார் என்றால் பெற்று வளர்த்த தாயைத்தவிர வேறு எவரைக் கூற முடியும்? அந்தப் பெற்றதாய் பெரும் வறுமையில் மூழ்கிப் பசித்துன்பத்தால் துடிதுடிப்பதை நீ கண்ணால் கண்டாலும், அதை நீக்குவதற்காக நல்ல மனத்தோர் பழிக்கத் தகுந்த நாசகாரியங்களைச் செய்யாதே!

திருவள்ளுவர்.

* *

கே: பார்ப்பான் மாத்திரம் எப்படி இவ்வளவு பெரிய பதவிக்கு வர முடிந்தது?

ப: மத விஷயத்தில் அவர்களுக்கு கிடைத்துள்ள உயர்ந்த நிலையால் அவர்கள் (பார்ப்பார்கள்) எல்லோரையும்விட முன்னேறியிருக்க முடிந்தது. மதவிஷயதில் பார்ப்பனர்களுக்குள்ள பெருமை போய்விட்டால் அவர்கள் இழிவான மனிதர்களுக்கும் இழிவான மனிதர்களாகி விடுவார்கள். ஏனெனில் அவர்களுக்குப் பாடுபடத் தெரியாது. ஆகவே சோம்பேறிகளின் கதியே அடைய வேண்டியவர்களாவார்கள்.

* *

கே: ஆண் வியபசாரர்கள் விபூதி பூசுவதின் மூலம் மோக்ஷத்திற்குப் போக நேர்ந்து விட்டால், அங்கு போய் தங்கள் வியபசாரத்திற்கு என் செய்வார்கள்?

ப: அதற்காக எந்த விபசாரகனும் விபூதிபூசுபவரும் பயப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் அங்கு இந்த விபூதிப் பக்தர்களுக்கென்றே ஊர்வசி, மேனகை, திலோர்த்தமை முதலிய தேவரம்பையர்கள் இருக்கிறார்கள். அன்றியும் சமையல் செய்யவேண்டிய வேலைகூட இல்லாமல் இதேவேலையாய் இருக்கலாம். ஏனென்றால், காமதேனு, கற்பக விருக்ஷம் கேட்டதெல்லாம் கொடுத்துவிடும்.

* *

கே: பார்ப்பனர்களில் ஒருவகையாருக்கு ஏன் முகம் சூப்பையாயிருக்கின்றது.

ப: அவர்கள் அனுமந்த தேவரை பூஜிக்கிறார்கள். படுக்கைவீட்டில் அனுமார்படம் வைத்திருக்கின்றார்கள். அதனால் அவர்கள் முகம் சூப்பையாய் இருக்கின்றது.

* *

கே: பெண் விபசாரிகள் விபூதி பூசியதன்மூலம் மோட்சத்திற்குப் போய்விட்டால் அங்கு அவர்களுக்கு வழி என்ன?

ப: கடவுள் இருக்கிறார், மேல் தாக்குதலைக்கு அங்குள்ள மற்ற தேவர்களைக்கொண்டு சரிப்படுத்திக்கொள்ளவேண்டியதுதான்.

* *

கே: கடவுள் ஏன் காணமுடியாதவராயிருக்கிறார்?

ப: அவர் பண்ணும் அக்கிரமத்திற்கு யார்கைக்காவது கிடைத்தால் நல்ல உதைகிடைக்குமென்றுதான்.

கே: கடவுள் செய்த அக்கிரமம் என்ன?

ப: ஏன்? மூட்டை, கொசு இரண்டையும் அவர் உற்பத்திசெய்த அக்கிரமம் ஒன்றே போதாதா?

★

சோவியத் நாட்டில் சுகாதாரம்!

மு. ராஜமாணிக்கம்

"வைத்தியர்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று பிரபல அமரிக்க பத்திரிக்கை ஒன்று அறிஞர் பெர்னாட்ஷா அவர்களைக் கேட்டதாம். அதற்கு அறிஞர் பெர்னாட்ஷா, அவர்கள் வைத்தியர்களில் இருசாரார் உண்டு. அரசாங்க வைத்தியர்களைப் பற்றியா? தனி 'டிஸ்பென்சரி' வைத்து நடத்தும் வைத்தியர்களையா? என்று கேட்டாராம்!

இருசாரரையும் பற்றித்தான் என்று பத்திரிக்கை பதிலளித்ததாம். "நோய் குணமாகு முன்னமே வெளியே துரத்திவிடுகிறார்கள் அரசாங்க வைத்தியர்கள். நோயை அதிகப்படுத்தி, உள்ள பொருளையும் உறிஞ்சிக் கொண்டு, கொடுக்க சக்தியில்லாதபோது வெளியே துரத்துகிறார்கள் தனி 'டிஸ்பென்சரி' வைத்து நடத்தும் வைத்தியர்கள். ஆகவே இருசாரரும் பெரும்பான்மையான மக்களுக்கு நல்லது செய்கிறார்கள் என்று எப்படி நம்ப முடியும்?" என்று பதிலளித்தாராம் அறிஞர் ஷா அவர்கள். அறிஞர் ஷா அவர்களின் வாக்கை இன்று நம் நாட்டிலுள்ள வைத்தியர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது எவ்வளவு உண்மை! என்றுவிளங்காமல் போகாது.

ஒரு தோழர், தனக்குத் தெரிந்த வைத்தியர் ஒருவரிடம் சென்று தனக்கு உடம்பு சுகமில்லை; பரிட்சை பார்க்கும்படி கேட்டாராம்! அந்த வைத்தியர் பல வழிகளில் பார்த்து விட்டு என்ன வியாதி என்றே கண்டு பிடிக்க முடியவில்லை என்று கூறி விட்டாராம்! அந்த தோழர் வேறு ஒரு வைத்தியரிடம் சென்று பரிட்சை பார்த்து விட்டு வந்து, இன்ன வியாதி என்று அந்த வைத்தியர் சொன்னார் என்று சொன்னாராம் அந்த பழக்கப்பட்ட வைத்தியரிடம். அந்த பழக்கப்பட்ட வைத்தியர், அதே வைத்தியரிடம் சென்று என்ன மருந்து அந்த வியாதிக்குக்கொடுப்பது என்று கேட்டு வரும்படி அந்த வியாதியஸ்தரையே திருப்பியனுப்பி, தெரிந்து வந்த பிறகு, குணப்படுத்த மருந்து கொடுத்தாராம்! எப்படி இருக்கிறது வைத்தியரின் நிபுணத்துவம்! மனிதனின் இருதயத்தையே மாற்றி வைக்கும் வைத்திய நிபுணர்கள் மேல் நாடுகளிலுண்டு. நோய் தெரிந்தும் என்ன மருந்து கொடுப்பது என்று தெரியாத வைத்திய நிபுணர்கள் நம் நாட்டிலுண்டு! இதுபோன்ற வைத்தியர்கள் நம் நாட்டில் எல்லா ஊர்களிலுமிருக்கிறார்கள். இவர்கள் மக்களின் நோய் போக்க ஏற்பட்ட வைத்தியர்களா? இல்லை-வைத்தியத் துறையை வாணிபத் துறையாக ஆக்கிக்கொண்ட வாய் உருட்டுக்காரர்களா? அய்யகோ! இந்தப்போலிகளால், இன்று நாட்டில் மடிந்துவரும் மக்கள் எண்ணிக்கையைக் கணித்தால், இறப்பவர்களில் முப்பது சத விகிதத்தினருக்கு மேல் இருக்கும். இந்த ஆட்கொல்லிகளையுந்தான் இந்த அரசாங்கம் விட்டுவைத்திருக்கிறது. ஒருவன் பகைகாரணமாகவோ, பழிகாரணமாகவோ ஒருவனைக் கொலை செய்து விடுவானேயாகில் அவனை சட்டப்படி தூக்குமரத்திலே நிறுத்தும் அரசாங்கம், கொலைக் களத்தை, வைத்தியசாலை என்று போர்டுபோட்டுக் கொண்டு, மக்களைப் பலிவாங்கும் போலி வைத்தியர்களை விட்டு வைப்பது ஏனோ தெரியவில்லை?

"தெருவை அசுத்தம் செய்யாதே. அசுத்தமே வியாதிக்குக் காரணம்" என்ற போர்டை முனிசிபாலிட்டியார் மாட்டி விடுகிறார்கள் ஓரிடத்தில். அந்த முனிசிபாலிட்டியாரால் நகர சுத்திக்கென்று வைக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் அந்த போர்டு இருக்குமிடத்தில்தான் தெருக்குப்பைகளையெல்லாம் கொட்டி வைத்து, மூன்று நாட்களுக்கொருதடவை அல்லது ஒரு வாரத்துக்கு ஒரு தடவை ஒரு லாரி கொண்டு வந்து எடுத்துக் கொண்டு போகிறார்கள். பின் அந்த போர்டைப் போடுவதின் நோக்கமென்ன? அந்தப் போர்டைப் போட்டு விடுவதாலேயே தங்களின் கடமை முடிந்து விட்டதென்று முனிசிபாலிட்டி சுகாதார அதிகாரி நினைத்துக் கொண்டு விடுகிறார் போலும். நம் நாட்டிலுள்ள சுகாதாரத்தின் சீர்கேட்டையும், அந்த இலாகாவில் நடக்கும் நாசகார்யத்தையும் எடுத்தியம்பினால்—அந்த வைத்திய நிபுணர்கள் நம்மை பைத்தியம் என்று கூடக் கூறி கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப யோசனை செய்யலாமல்லவா?

ஆஸ்பத்திரிகளெல்லாம் பிணியைத் தீர்ப்பதற்காகக் கட்டப்பட்டவை. மக்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்கும் பணத்தின் ஒரு பகுதி அதற்குச் செலவிடப்படுகிறது. [illegible] வேலை கொடுப்பதற்கென்று [illegible] தரும் ஸ்தாபனம் அது! "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பொன்மொழிக்கு இணங்க நோயின்றி மக்கள் வாழ்வதே குறையாத செல்வத்தைக் கொண்டதாகும். ஆகவே சுகாதார இலாகாவில் வேலை செய்வோரனைவரும் அதனைப் பொதுத் தொழிலாக, சமூக சேவையாக, உயிரற்றவனுக்கு உயிர் கொடுப்பதாகக் கருதவேண்டும். இல்லையேல் அங்கு நடக்கும் ஒழுக்கமற்ற செயல்களைப் போக்கமார்க்கமில்லை.

இப்போது ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளுக்கு படுக்க ஓலைப்பாய் கொடுக்கப்படுகிறது. சிலருக்கு அதுகூடக் கொடுக்கப்படுவதில்லை— இன்னும் பலரை அங்கு இருக்கவே அனுமதிப்பதில்லை. ஸ்பெஷல் வார்டுகள் என்று கட்டியிருப்பவைகளில் ஒருவர்கூட இருப்பதில்லை. அவைகளில் மற்றவர்களையும் அனுமதிப்பதில்லை. ஆஸ்பத்திரி வெராண்டாக்களில் பாய் கூட இல்லாமல் படுக்கப்போட்டு, குளிரினாலும், கவனிப்பாரற்றதாலும் இறந்து கிடக்கும் பிணங்களைக் கண்டதுண்டமாக வெட்டிக் குழியில் போட்டுப் புதைப்பதா சுகாதாரஇலாகா செய்யும் வேலை? கேட்க இந்த நாட்டில் நாதியில்லையா? நாதியற்ற நாடே! இதோ சோவியத் நாட்டைப் பார்!

சுகாதாரத் துறையில் மக்களின் நலனுக்காக மற்ற நாடுகளைவிட சோவியத் ரஷியா மிகமிக முன்னேறிவிட்டது. சோவியத்நாடு பனிப்பிரதேசங்களை அதிகமாகக்கொண்டது. அங்கு மக்களின் தேவைக்கேற்ற வகையில் சுகாதாரத்தில் மாற்றம் ஏற்படுத்துவதென்பது மிகமிகக் கடினம். ஆனால் சோவியத் அரசாங்கம் கடினமாகக் கருதவில்லை.

ஆண்டு தோறும் சோவியத் அரசாங்கம் சுகாதாரத்திற்கென்று ஏராளமான பொருள் செலவிடுகிறது. கல்விக்கு அடுத்தபடி சுகாதாரத்திற்குத்தான். 1948 ஆம் ஆண்டில் மக்களின் சுகாதாரத்திற்காக வேண்டி, 20,500 மிலியன் அதாவது, 2050 கோடி ரூபிள்கள் செலவிடப்பட்டது. ஜார் காலத்து ரஷியாவில் 1913ல் 49,087 படுக்கைகள்தான் சோவியத் நாட்டிலேயே இருந்தன. சுகாதாரத்தில் சீர்திருத்தம் செய்ய ஆரம்பித்த பிறகு 1941ல் பட்டணங்களையன்றி, கிராமந்திரங்களில் மட்டும் 1 70.000 வரை ஆஸ்பத்திரி படுக்கைகள் அதிகரித்தன. பட்டணவாசிகளுக்குத்தான் சுகாதார வசதி என்ற பழி சோவியத் நாட்டி

வில்லை. கிராமாந்திரங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுகாதார வசதி எந்த விதத்திலும் பட்டணங்களுக்கு மட்டமானவையல்ல என்பதைக்காணுவது சோவியத் நாட்டில்தான். 1941ல் 1,70,000 ஆஸ்பத்திரி படுக்கைகள் 1948ல் 2,00,000 வரைக்கும் அதிகரித்தது. சோவியத் நாட்டின் சுகாதாரத் திட்டப்படி 1950ல் 3,00,000 மாகப் பெருகவேண்டுமென்பது.

இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன் 37,511 ஆஸ்பத்திரிகள் சோவியத் நாட்டிலிருந்தன. புரட்சிக்கு முன் ஜார் ரஷியாவில் 4168 ஆஸ்பத்திரிகள் மட்டிலுமிருந்தன. அதாவது ஒன்பது மடங்கு யுத்தத்திற்கு முன் வரையில் அதிகரித்தது. இரண்டாவது உலக யுத்தம் இப்போக்கை மாற்றிவிடவில்லை. 1946ல் ஆஸ்பத்திரிகள் 45,000 வரையில் அதிகரித்தது; 1948ல் 50,000 மாக உயர்ந்தது. வெஜ்பெக்ஸ்தான் என்ற பிரதேசத்தில் ஜார்ஜ் காலத்து ஆட்சியின்போது நான்கு ஆஸ்பத்திரிகள் மட்டிலுமேயிருந்தன. சில செல்வவான்களும், உத்யோகஸ்தர்களுமே அவற்றை உபயோகித்தனர். தொழிலாளா பெருத்த அந்தப் பகுதியில் அவர்கள் வியாதியால் பீடிக்கப்பட்டு ஈக்களைப் போல மடிந்துகொண்டிருந்தனர். இப்போது அந்தப் பிரதேசத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் ஆஸ்பத்திரி உண்டு.

சோவியத்நாட்டில் சுகாதாரம், மக்களின் பொதுச்சேவையாகக் கருதப்படுகிறது. பெரும்பாலும் பெண்கள் இந்த வேலையைத் தங்கள் விருப்பத் தொழிலாகக் கொள்கின்றனர். கிராமங்களிலுள்ள இளம் பெண்கள், தங்களின் மத்தியதரக் கல்வியை முடித்தபின் அந்தந்த கிராமத்தின் சுகாதாரத்தைச் சீர்திருத்தும் பணியிலிறங்குகின்றனர். அவர்கள் சுகாதாரத் தொழிலைக் கொண்டு, தொண்டு செய்து வருவதால், அத்தொழிலை மிகவும் நுட்பமாகக் கற்றுக்கொள்ளவும், நல்ல முறையில் தொண்டு செய்யவும் அவர்களால் முடிகிறது.

ஒரு கிராமத்திலுள்ள ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளியின் பிணிதீர்க்க முடியாவிடில், அந்த நோயாளியைக் குணப்படுத்தவேண்டிய முழுபொறுப்பையும், வைத்திய இலாகாவுக்கே கொடுத்து, பிணிதீர்க்கப்படுகிற வரையில் அரசாங்கமே கவனித்து வருகிறது. மிகவும் அபாயகரமானதாகவும், உடனடியாகக் கவனிக்கப்படுவதாயுமான நோயாளிகள் விமானங்களில் ஏற்றப்பட்டு, குறிப்பிட்ட துறையில் வசதி ஏற்பட்டுள்ள இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். சில சமயங்களில் நோயாளிகளைக் கவனிப்பதற்கென்று திறமையான டாக்டர்களைக் கொண்ட பல கோஷ்டிகள் நாட்டிலுள்ள கிராம ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று நோயாளிகளைப் பார்வையிட்டு, சிகிச்சை செய்து வருகின்றன.

அசுத்தத்தினால் ஏற்படும் கேடுகளைப், படமூலமாகவும், பிரச்சார மூலமாகவும், தனி வகுப்புகள் நடத்தியும் மக்களுக்கு எடுத்துக் காட்டுகின்றனர். காட்சிகள் மூலம் காட்டப்படுவது கவர்ச்சியாகவிருப்பதால் மக்கள் சுலபமாகத் தெரிந்து கொள்ளமுடிகிறது.

[13ம் பக்கத் தொடர்ச்சி]

னால் ஒருவர் மற்றொருவர் மனதை நோகச் செய்யத்தக்க மூடச் செயல்களைச் செய்வதுமுண்டு. இழிவாய்ப் பேசுதலுமுண்டு. இத்தகைய ஆத்திர சுபாவத்திற்காக விட்டுக் கொடுத்தலே மேல். ஆனால் விட்டுக் கொடுத்தலுக்கும், வேணுமென்றே மூடத்தனமாய்ப் பரிஷ்காரமாகத் தோன்றும் குறைகளைக் கண்டு கொள்ளாதிருப்பதற்கும் மிகுந்த வித்தியாசமுண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். காதலர்கள் தங்கள் இஷ்ட பூர்த்தி செய்து கொள்ள குற்ற மற்ற முறையில் தந்திரமாய் நடந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். அநேக ஆடவர்கள் அவர்களுடைய காதலிகளின் சொற்படியே நடந்துகொள்ளுகிறார்கள். ஆனாலும்மனைவிகள் தங்கள் கணவன்மார்களுக்கு அடங்கி நடப்பதாகவே காட்டிக்கொள்ள வேண்டும். கணவன்மார்களையும் அப்படியே நினைக்கச் செய்ய வேண்டும்.

உண்மைக் காதலின் உயர்வு.

காதலில் சந்தோஷத்திற்கடிப்படையானது யதார்த்தமான தோழமைதான். ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்துகொண்டு வஞ்சகமின்றி நடந்துகொள்ள வேண்டும். விவாகம் ஆனதற்குப் பிறகு ஒருவரை ஒருவர் கண்மூடித்தனமாக மதித்துக் கொள்ளக்கூடாது. உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் தவறுதல் ஏற்படாது. காதலை எப்போதும் போற்றக்கூடிய சிறு விஷயங்களையும் அலட்சியம் செய்தல் கூடாது. காதலன், வெளியிலிருந்து வீட்டுக்குள் நுழையும் போது தன் காதலியின் சந்தோஷப் புன்னகையே அவனுக்கு மனக்களிப்பைக் கொடுக்கிறது. மற்ற வீட்டுக்காரியங்களைப் பற்றிய செய்திகள் அவ்வளவாக அவனுக்கு அச்சமயம் சந்தோஷமளிப்பதில்லை.

ஆகையால் காதலர்கள் இனிமையாகவும், தமாஷாகவும் பேசும் மனப்பான்மையைத் தம்முள் வளர்க்கவேண்டும். இல்வாழ்க்கையில் சதிபதிகளுக்குள் பேத உணர்ச்சிகள் ஏற்பட்டு சமாதானக் குறைவு உண்டானால் அதற்கு இருவருமே காரணம் என்று கருதி நிலைமை கண்டு தங்களைத் தாங்களே திருத்திக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். அப்போது விஷயங்கள் சீர்பட்டுப் போம்.

காதலர் பொறுப்பு.

கணவன் மனைவியர் இருவரும் ஒருவர் வாழ்வை ஒருவர் ஆக்கவும் அழிக்கவும் சக்திபெற்றிருக்கிறார்கள். காதல் பொறுப்பு மிகுந்தது என்பதை அறியவேண்டும். அதை யாரும் எளிதாய் மதிக்கக்கூடாது. ஒருவரையொருவர் இயல்பறிந்து தொண்டாற்றிக்கொள்வதோடு நில்லாமல், அவர்கள் தங்களையும் நன்கறிந்து கொள்ளப் பழகவேண்டும். அப்போதுதான் சமயத்திற்கேற்ப சமநிலை நிர்வகித்துக் கொள்ள முடியும். காதலிக்கப்பட்ட ஒருவரிடம் காதலிக்கும் ஒருவர் வெறுக்கக்கூடிய பெரிய குறைகள் இருப்பதாகக் கண்டால் அவ்விருவரும் விவாகமே செய்து கொள்ளாதிருத்தல் நல்லது. ஒருவர் தன் மணவாழ்க்கை இன்பத்தைக் கெடுக்கும் என்று நம்பக்கூடிய துர்க்குணமுடைய ஒருவரை விவாகம் செய்துகொள்வது ஒரு சிறிதும் விரும்பத்தக்கதல்ல. அத்தகைய இன்பமற்ற மண வாழ்க்கை நடத்துவதை விட தனி வாழ்க்கையிலிருப்பதே மேலானது. மனோ விகாரத்தினால் பகுத்தறிவை இழந்துவிடக் கூடாது. காதல் போக்கியமானதாக இருக்கவேண்டும். அநுபவத்திற்கேற்றதாக இருக்கவேண்டும். உண்மையானதாகவும், பயனற்றதாகவும் இருக்கவேண்டும். அத்தகைய குற்றமற்ற காதல்தான் பூரண ஒற்றுமையும், இன்பமும், நிறைந்த மண வாழ்க்கைக்கு நல்ல அஸ்திவாரமாகும்.

★

★ கூண்டுக்கிளி! ★

(அறிவழகன்)

"அய்யோ!....அப்பா!...உம்! ......வலிக்கிறதே!...உம்...உம்..." என அழும் குரல் கேட்டது.

நான் மண்வெட்டுதலை நிறுத்தி, சற்று காதுகொடுத்துக் கேட்டேன்; அழுகைக்குரல் நன்றாக—கொஞ்சம் உரத்துக் கேட்டது. யாரோ பக்கத்துத் தோட்டத்தில் அழுவது போன்றிருந்தது. மண்வெட்டியைப் போட்டுவிட்டு 'ஓட்டோட்டமாக' ஓடினேன், குரல் வந்த திசை நோக்கி!

வள்ளி—பரமசிவனின் மருமகளல்ல—தேம்பித்தேம்பி அழுது கொண்டு ரோஜாச்செடியின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். அவள் கண்களினின்றும் நீர், 'தாரை தாரை'யாக வழிந்து ஓடிக்கொண்டிருந்தது.

"அம்மா! யார் அடித்தார்கள்? எனிப்படி அழுகிறாய்?—என்று கேட்டவாறே, பெருக்கெடுத்தோடிக் கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்தேன்.

அவள் மேலும் மேலும் தேம்பித் தேம்பி அழுதாள்; பேசவில்லை!

"அம்மா! என்ன நேர்ந்தது? சொல்லேன்!—கெஞ்சிக்கேட்டேன்.

அப்பொழுதும் அவள் வாய் திறந்து பேசவில்லை; அழுதாள்!

இந்தப்பெண்களே இப்படித்தான்!

வெல்லத்தைப் பாகாக்கிவிடலாம்; பாவையரைப்பாகாக்க முடியுமா? அவ்வளவு உறுதியும் உரமும் படைத்த நெஞ்சினர்! மலை நிலை குலையினும் இவர்கள் உள்ளம் நிலைகுலையாது! எதையாவது உள்ளத்துள் நினைத்து, உருகி, கருகிப்போகும் 'பேதை'கள்!

எனக்குக்கொஞ்சம் மனம் விட்டுப் போயிற்று. யாது செய்வதெனப் புலப்படாமல் திகைத்தேன்.

சிந்தனைக் கடலுள் மூழ்கி எழுந்தேன். இன்னுமொரு தடவைதான் கேட்டுத் தொலைவோமே என்ற எண்ணம் பிறந்தது—கேட்டேன்!

கை விரலைக் காட்டினாள்! அதனின்றும் செங்குருதி பீறிட்டு வெளி வந்துகொண்டிருந்தது. அப்பொழுதும் அவள் ஏற்பட்ட இன்னலைச் சொல்லித் தொலைக்கவில்லை!

"ஊக்கினால் குத்திக்கொண்டாயா, என்ன? எனிப்படி இரத்தம் வருகிறது?"

"இல்லை, முருகா! இதோ பாருங்கள், ரோஜா செடி,............"

"ஆம்! இருக்கிறது! பார்த்தேன்!"

"அதில் பூப்பறித்தேன்.........!"

"உம்.........! பறித்தாய்.........பிறகு?"

"அதிலுள்ள முட்களுள் ஒன்று குத்திவிட்டது"

"இதுக்காகவா, இவ்வளவு அழுகை?"

"இல்லை, முருகா! என்ன வலி வலிக்கிறது தெரியுமா?"

"எங்கே, கொண்டா, பார்க்கலாம்?" விரல்பற்றி அதன் சுவை பருகினேன். சிறிது நேரமாயிற்று—'வெடுக்'கென்று பறித்தாள்.

"ஏன்? இப்போது வலி இல்லையோ?"

"போங்களத்தான்! சும்மா விளையாடாமே!"

* *

ஆமாம்—!

எத்தனையோ ஆண்டுகளுக்குப்பின் இன்றைக்குஎண்ணின், இந்தஇளமைப் பருவ நிகழ்ச்சிகள் மின்னல்போலத் தோன்றித் தோன்றி மறைகின்றன! கேலி செய்கின்றன!! அலைக்கழிக்கின்றன!!!

அறியாப் பருவம்!—அப்பொழுதுதான் நான் அவருடன் இப்படி விளையாடினேன். அன்று என் அப்பாவும், அம்மாவும் இருந்தார்கள். எங்கள் விளையாட்டு அப்பொழுது, அவர்களுக்குச்'சிறுபிள்ளை விளையாட்டாகத் தான்' பட்டிருக்கவேண்டும்! அதனால் தான் 'விளையாடிவிட்டுப் போகிறார்கள்' என்று பேசாதிருந்துவிட்டார்கள். அவர்கள் பேசாதிருந்தது என்னவோ, ஒருமட்டும் சரியானதுதான்! நாங்களும் அதுவரைக்கும்'சிறுபிள்ளை விளையாட்'டாக்வே கருதி வந்தோம்!

ஆனால், காலவேகம்......?

காலம் ஓடி விட்டது—

இப்பொழுது நான் முன்னைப்போல அப்பா, அம்மா, பிறர்—யாருக்குந்தெரிய அவருடன் விளையாட முடியாது. பெற்றோர்கள் மேற்பார்வையில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டிய பருவம் என்னைச் சுற்றித் தானாகவே வளைத்துக்கொண்டு விட்டது.

இந்தப் 'பருவ வளைய'த்திற்குள் சிக்கி நான்கு நாட்கள் ஆயின!

என்னைப் பத்துத் திங்கள் வயிற்றில் சுமந்து, பெற்று, பாலூட்டி, சீராட்டி, தாலாட்டி வளர்த்த என் தாயை இயற்கை தனக்குத் துணையாக அழைத்துக்கொண்டது. ஆமாம்! எனது துணை பறிபோயிற்று!

அப்பாவும், அம்மாவும் சேர்ந்து, உழைத்து ஈட்டிய பொருள்கொண்டு நான் வாழ்ந்து வந்தேன்! மலரை விட்டு மணமும், மணியைவிட்டு ஒளியும் பிரிந்த பின்னர் என் அப்பா வாழ்வையறியாராயினார். அப்பா இருக்கத்தான் இருக்கிறார்.........என்ன தான் இருந்தாலும் அம்மாவைப்போல் ஆவாரா?

இப்பொழுது நான் என் அத்தானைக் காணாது இருப்பதில்லை. அவரும் என்னைப்போலத்தானே! கனிச்சாறும், கன்னல்சாறும் கலந்து விட்டால் பிரித்துவிட முடியுமா என்ன? எப்படியோ நட்பு எல்லை மீறி, கள்ளத்தனமாக வளர்ந்து கொண்டேயிருந்தது.

தந்தை அறிந்தாரில்லை; ஊருக்குத் தெரியவுமில்லை; வளர்ந்தது!

ஒரு கோரப் பஞ்சப் புயல்காற்று அடித்து நாட்டையே குழப்பத்திலாக்கிவிட்டது. அகவிலைகள் அளவு கடந்து ஏறிவிட்டன. 'மனித ஜீவனம்', 'மரண சைனாப் பிரேத'மாக ஆயிற்று!

என் வயிற்றைக் கழுவுவது கிடக்கட்டும், என் அப்பாவின் வயிற்றைக் கழுவிக்கொள்ளவே, அவருக்கு வழியில்லையே!—அவ்வளவு பெரிய பஞ்சப்புயல்!

நான் காலப்போக்கில் சூல்கொண்ட மேகமானேன்—அது எனது களவை வெளிக் காட்டிற்று!

உள்ளபடியே நான் மாற்றார் யாருடனும் தொடர்பு கொள்ள வில்லை; முறைமையில் சொந்தக் கணவர்தான் முருகர் அவருடன்தான் பழகினேன்.

பரம்பரை பரம்பரையாக வறுமையும் எங்களின் நிழலை விட்டுப் பிரியவில்லை; தொடர்ந்தது!

மணமகன் 'பேரம்' தரகர் மூலம் நடந்தது!!

மாமன் வீட்டார் தக்க இயல்புடையவர்கள். அதனாலே எனது அத்தானை தக்க இயல்பினருக்குத்தான் தருவோம் என்று கூறிவிட்டார்கள்.

பணக்காரர் ஒழிய வேண்டுமென்று, மேடை ஏறி, நாவெல்லாம் நாவலிக்கக் கத்துவோர் மட்டும் பணக்காரர்கள் காலடியில் கிடக்காமலா இருக்கிறார்கள். அப்படிக் கத்தினவர் வீட்டுக்கு பணக்காரர் வந்து விட்டால், அங்கு பார்க்கவேண்டுமே, அந்த அமர்க்களத்தை, மாலை மரியாதையை, பாராட்டுக்களை! பணமென்றால் பிணமும் வாய்திறக்குமாமே!

"எப்படியும் உன்னைக் கைவிடேன்; பிரியேன்!" என்று வாக்குறுதி செய்துகொடுத்த என் அத்தானும்

பணத்திற்கு அடிமையானார்.

மணம் முறிந்தது.

தாழ்ந்த தந்தை வழி, வகை, துறையற்றவளாய் என்னைப் புறக்கணித்து பட்டணஞ் சென்று விட்டார், வயிற்றைக் கழுவுவதற்காக! 'கெட்டும் பட்டணஞ் சேர்!'—என்று சொல்லியிருக்கிறார்களே, பெரியவர்கள்!

நான் கொடியானேன்; படரத்தான் கொழு கொம்பில்லை! அனாதை!!

நானே என் அத்தானைக் கேட்டுப் பார்க்கலாமென்று நினைத்தேன்; கேட்டும் விட்டேன். இசைவுதான் இல்லை!

*   *

உற்றார், உறவினர் வீட்டிற்குச் சென்று தஞ்சம் பெறலாமென்ற எண்ணம் எல்லைப் போட்டுத் துளைத்தது!

சின்னம்மா வீட்டுக்குச் சென்றேன்—

"எங்களுக்குத் தெரியாமல், எப்படியம்மா! வள்ளி! கலியாணமாயிற்று?"—முதல 'வெகுமதி' இந்த மாதிரியாக இருந்தது.

தலை குனிந்து அங்கிருந்து மீண்டு, சின்னப்பா வீடு சென்றேன்.

"வாம்மா, வா! இப்பொழுதுதானா வருகிறாய்?" என்ற விதமாக வரவேற்புக் கிடைத்தது. என் உள்ளம் குளிர்ந்தது; வெப்பம் தணிந்து 'குளுகுளு'ப் படைந்தேன்.

"இப்பொழுதுதான் வருகிறேன்" என்றேன்.

"நீ மட்டுந்தானா வருகிறாய்? உன் வீட்டுக்காரர் வரவில்லையா?"—விருந்துக்குப் பின் இந்த மருந்து! இங்கும் என்னால் பொறுத்திருக்க முடியவில்லை. தலை நிமிர்வது என்பது இயலாத காரியமாக ஆகி விட்டது.

வேறு கதி......?

'அறிமுகமில்லாத ஊருக்குப் போய் விடு' என்று அந்தக் கேள்வி எனக்கு விடையளித்தது.

சித்தேரி—எனது சொந்த ஊர்! அது எனக்கு இன்றைக்கு வெறுத் தேரியாகி விட்டது! ஆமாம்! அப்படியாக்கி விட்டார்கள்!

முப்பது கல் தொலைவிற்கு அப்பாலுள்ள புத்தேரி புகலாமென முடிவு கொண்டு புறப்பட்டுச் சென்றேன். அவ்வூர் வழியே வந்தேன், பண்டரிபுரத்துப் பரதேசி போல! வானவெளியிலே சஞ்சரித்துச் சென்ற மேகம் என் சஞ்சாரத்தைப் பார்த்துச் சிரித்தது!

"வள்ளி! எங்கேடி போகிறாய்? கூட யாரும் வரவில்லையா?"—என் றாள் நீர்க்குடமேந்தி வந்த நிர்மலா!

மேலும் நடந்தேன்—

"ஏண்டி, தனம்! இவளுக்கு எப்போடி கலியாணமாச்சு? மசக்கைக்காரி மாதிரியிருக்கிறாளே!"

"கலியாணமாவது, ஆகிறதாவது? பச்சைத் தட்டுவாணிடி அவ, அனவம்!"

—நீரெடுத்து வந்த இரு பெண்கள் இப்படிப் பேசிக்கொண்டார்கள்.

காதடைத்து மேலும் நடந்தேன்—

"அடி, தட்டுக்கெட்ட கழுதை! இப்படி எங்கேயடி போகிறாய்?"—என்று விறகுச் சுமையைத் தலையில் வைத்துத் தள்ளாடி நடந்து வந்த 'பாட்டி' கேட்டாள்.

இப்படியாகப் பலர் ஏசலுக்குப்பின் புத்தேரி தென்பட்டது.

புத்தேரி—எனக்குப் புதிய ஏரிதான்!

அங்கு சென்ற நான் ஐந்து நாட்களில் நடமாட முடியாத 'ஜீவ'னாக ஆகிவிட்டேன்!

ஒரு பெரிய ஆலமரம்! எனக்கு நிழல் தருவதற்கென்றே வளர்ந்திருந்தது போலும்! அங்கு தங்கிவிட்டேன்.

பெருத்த உடல் வலித்தொல்லைக்குப் பின், எனது 'பாரம்' குறைந்தது! 'குலமாமணி' பிறந்திருக்கிறானே யென்று கொஞ்சுவாரில்லை. சித்தேரியாக விருந்தால் இத்தனை நேரம் தற்கொலை செய்துகொள்ள வைத்திருப்பார்கள், சமுதாயக் கருங்காலிகள்!

கிணறு வற்றிவிட்டது, மழையில்லாத காரணத்தால்! நாளெல்லாம் பட்டினியாகக் கிடந்தே காலங் கழிக்க வேண்டியதாயிற்று! குழந்தை வளரப் பாலுமில்லை! அது இருக்க, நான் பிழைத்து இரை தேடவு முடியவில்லை—இத்தனை தொல்லைகள்!

'தந்தை பெயர் சொல்லியழைக்க முடியாத குழந்தை இருந்தென்ன, இறந்தென்ன?"— இக் கருத்து என் உள்ளத்துட் குடிபுகுந்து சிந்தனையைக் கிளறிவிட்டது!

*   *

அந்தி நேரம்! ஊர் ஓரத்தில் ஒரு பாழ் கிணறு! ஆள் நடமாட்டமென்பதே இல்லாத இடம்!

ஒரு உருவம்! அதோ, தலைவிரி கோலமாகப் பையப் பைய அந்தக் கிணற்றண்டை போகிறது! 'மேனகா'வைப் போலத்தான் போகிறாள்!

அதோ! அந்த உருவம் இங்கு மங்கும் சுற்றிப் பார்க்கிறது. ஒன்றையுங் காணோம்! கை சற்று முன் நீள்கிறது; அடியோடு பின் வாங்குகிறது! ஆமாம்! அந்தச் செயலைச் செய்யத் துணிவில்லைதான்!

கால், கைகள் கொஞ்சம் விறுவிறுப்படைகின்றன. நரம்பு கொஞ்சம் முறுக்கேறித் துடிக்கிறது! துணிவு தானாகவே ஏற்படுகிறது!

மீண்டும் அந்தக் கை நீள்கிறது!—

சற்று நேரம்! 'பொத்' என்ற சப்தம் தண்ணீரை மேலெழுப்பிக் கேட்கிறது.

நிர்மலமான அந்தக் கிணற்றுத்தண்ணீர் இத்தனை கொந்தளிப்பை என்றைக்குமே பெற்றிருக்காது! அவ்வளவு கொந்தளிப்பு! அலறல்!

ஆமாம்! அந்த வள்ளியின் குழந்தை அந்தக் கிணற்றுக்கு இரையாகவே பிறந்தான் போலும்!

—இத்தனை கஷ்டத்துக்கும், இன்னலுக்கும், அவச்சொல்லுக்கும் 'காரணப் பொருளா'யிருந்த அந்தப் பிண்டம் தன்னை விட்டு நீங்கியதால் அவள் மகிழ்ச்சிக் கடலில் குளித்துத் திளைத்தெழுகிறாள்.

அதோ, அவள் புன்னகை பூக்கிறாள்; பொலிவு பெறுகிறாள்! எல்லாக் கவலையும் அகன்று விட்டதாக எண்ணுகிறாள். இளமை தானாக அவளை முறுக்கேற்றுகிறது!

அந்தப் புது முறுக்கு அவளை 'வேலை தேடு படலத்'தில் ஈடுபடச் செய்தது!

*   *

மறுநாள்—

புலனறி போலீசார் 'ஆள் தேடு படல'த்திலிறங்கி, கடைவீதி உலாப் போந்தனர்.

வள்ளி அங்கொரு கடையில் வேலை கேட்டுக்கொண்டிருந்தாள்!

மறைந்திருந்து ஒற்றுக்கேட்ட அந்தப் போலீசார் அவளைப் பிடித்து நீதிபதிமுன் கொண்டு வந்து நிறுத்திக் கொலைக் குற்றம் சாட்டினர். அவள் அபலை! கண்ணீருங் கம்பலையுமாக நின்று கொண்டிருந்தாள்.

"நீ கொலை செய்தது உண்மையென்று உறுதிப்படுவதால் உனக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறேன்"—எனத் தீர்ப்புக்கூறினார், நீதிபதி!

அவள் கருணை கோரினாள்.

நீதிபதி உள்ளம் இளகிற்று!

உயர்நீதி மன்றத்துக்கு வழக்கை அனுப்பிவைத்தார்.

*   *

"நீ, உனது சமூகத்தைச் சேர்ந்தவர்களால் தூற்றப்பட்டிருக்கிறாய்! கள்ள நட்புக் கொண்டிருந்தவர் உன்னைக் கைவிட்டிருக்கிறார்! உன் தந்தையும் 'உன்னைப் புறக்கணித்திருக்கிறார்' ஊரார், சுற்றத்தார்—இவர்களின் அலருக்கும், கேலிக்கும் ஆட்பட்டிருக்கிறாய்! இப்படிப்பட்ட 'துர் அதிர்ஷ்ட' நிலைமையின் கொடுமையால் நீ உனது குழந்தையைக் கொல்லத் துணிந்திருக்கிறாய்! எனவே எங்கள் கருணையின்படி உனது ஆயுள் தண்டனையை இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனையாகக் குறைத்திருக்கிறோம்"—என உயர் நீதிமன்ற நீதிபதிகள் உரைத்தனர்—அவள் உள்ளத்தில் குடி கொண்டிருந்த பெரும் பயங்கரம் சிறிது குறைந்துகாணப்பட்டது!

*   *

அதோ, பாருங்கள்! ஆறடி பத்தந்

ரோஜர் முத்தையா

அவசரக்கோலம் - அலங்கோலம்

"மணியம்"

"அய்ந்து வந்தாலும்-அல்ல-அய்ம்பதே வந்தாலும் அவசரம் ஆகாது" என்பது நம் நாட்டில் வழங்கும் ஒரு பழமொழி. எளியமக்களிடையேயுமிருந்து வரும் பழமொழி. தமிழன் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் ஊறிக்கிடக்கும் பழமொழி. பாமரனும் பின்பற்ற விரும்பும்—முயலும்—பழமொழி. அப்படியிருக்க இன்றிருக்கும் ஆட்சியாளர் இதனைக் காற்றில் பறக்கவிட்டுக் காரியம் செய்ய விரும்புகின்றனர்—செய்கின்றனர். தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன் என்ற கதையாகத் தாங்கள் கூறுவதைக் கேட்டுத் தலையாட்டும் பொம்மைகளாக உள்ளவர்களைக் கொண்ட சட்டசபையிலும், பொதுமக்கள் வரவிரும்பாத—வராத—அய்ம்பதின்மர்—நூற்றுவர் கொண்ட மாபெரும் மாநாடுகளிலும் அவர்கள் செய்யும் ஆரவாரங்கட்கும் அளவில்லை. தட்டிக் கேட்டால் வெட்டிப் பேசுகிறானென்பார்; வெட்டிப்பேசென்பார். குழப்பம் செய்கிறானென்பார். குட்டிக்கரணங்கள் போடுவார் பேச்சிலேயே—கூலிகளின் அட்டகாசம் என்று கொட்டை எழுத்தில் செய்தி வெளியிடும் அவர்களைத் தாங்குவது போன்று நடித்துத் தங்கள் கூட்டத்திற்கு ஆக்கந்தேடும் பஞ்சாங்க ஏடுகள். இதுதான் இன்றைய ஆட்சியின் பொதுவான நிலை. பொது மக்கள் இந்நிலையை ஓரளவிற்கு உணர்ந்தே வருகின்றனர்.

ஒரு நாட்டினுடைய—நாட்டு மக்களுடைய முற்போக்கிற்கு அடிப்படையானது கல்வியேயாகும். அக்கல்வி தானும் அறிவைப் பெருக்குதற்கும்—அறியாமையைப் போக்குதற்கும் ஏற்ற வகையிலமைந்ததாயும், எளியவர் முதல் எல்லோருக்கும் வேறுபாடற்ற வகையிலே பெறக்கூடியதாகவும் அமைக்கப்படுதல் வேண்டும். ஆனால் இன்றுள்ள முறையோ இதற்கு முற்றிலும் முரண்பட்டதாகும். இப்படியிருப்பதற்குப் பல காரணங்கள் அடிப்படையாயிருப்பினும் தற்போது கல்வியமைச்சராயிருப்பவர்தம் செயலும்—போக்குமே முதன்மைவாய்ந்தவையாகும். அன்பர் அவினாசியார் பெரிய குடும்பத்துப்பிள்ளை. நன்கு கற்றவர். உண்மைத் தமிழன்புடையவர். கல்வியிற் கருத்துடையவர். அத்தகையவர் அமைச்சராயிருந்தும் கல்வித்துறையில் இத்துணைப் பெரிய குறைபாடுகள் நேரக்காரணம், பலர் பலவாறாகக் கூறினும் நாம் எடுத்துக்காட்ட விரும்புவது அவர்தம் ஆத்திர—அவசரப் புத்தியேயாம். அதனாலேயே கல்வித் துறையில் இன்றுள்ள குறைபாடுகள் யாவும் நிகழ்கின்றன. இரண்டொன்றைமட்டும் இப்போது காணுவோம்.

பள்ளிக்கூடங்களிலே இடநெருக்கடி ஏற்பட்டது. அதுவும் சென்னை நகரிலேதான் மிகுதியும் ஏற்பட்டது. உடனே அரசாங்கத்தார், "தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது போன்று மாற்று - முறையை (Shift System) என் பள்ளிக்கூடங்களிலும் மேற்கொள்ளக்கூடாது" என்று பள்ளிக்கூடப் பொறுப்பாளர்களையும், (Manager) தலைமையாசிரியர்களையும் கேட்டார்கள். உடனே நிர்வாகத்திற்கு நல்ல பிள்ளைகளாக நடக்கும் தலைமையாசிரியர்களும், அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளைகளாக நடக்கும் பள்ளிக்கூடப் பொறுப்பாளர்களும் சேர்ந்து அதனை நடத்திவைக்க முடியும் என்று அமைச்சரிடம் கூறினர். அதிகாரிகளின் சம்மதத்தையும் பெற்றனர். பஞ்சாங்கக்கூட்டத்தினரே முன்னணியிலிருந்து தொடக்க விழாவும் செய்தனர். அம்முறையும் தொத்துநோய் போல் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கும், பின்னர் வேறொரு பள்ளிக்குமாகத் தொடர்ந்து போய்க்கொண்டே இருக்கின்றது. இதனால் யாருக்காவது நன்மையுண்டா? ஆசிரியர், மாணவருக்கும், பெற்றோருக்கும், மற்றோரும் படும் தொல்லை கொஞ்ச நஞ்சமா?

அடுத்த வீட்டிலிருக்கும் ஆஞ்சநேய சர்மா ஹைகோர்ட்டிலே வேலை பார்க்கிறார். சரியாகப் பதினோரு மணிக்கெல்லாம் கச்சேரிக்குப் போய்ச்சேராவிட்டாலும் புறப்படவாவது வேண்டும். அவர் உற்றார் உறவினரின் உதவிகொண்டு ஓரளவிற்கு ஊதியத்தை உயர்த்திக்கொண்டார். அதுபோலவே அமைச்சர் சொல்லுகிறபடியே 'ஆண்டவனருளாலே' குழந்தை குட்டிகளும் வீட்டில் பெருகிவிட்டன. அருமை மகள் அஞ்சலிதேவியோ உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பில் (S. S. L. C.) படிக்கிறாள். அவளுக்குப் பள்ளிக்கூடம் சரியாக ஒன்பதே முக்காலுக்குத் தொடங்குகிறது. அடுத்தபையன் மாருதியோ அய்ந்தாம் பாரம் படிக்கிறான். அவனுக்கடுத்த பையன் வான்மீகியோ இரண்டாம் பாரம் படிக்கிறான். இவர்களிருவரும் படிக்கும் பள்ளிக்கூடமோ மாற்றுமுறையில் (Shift System) நடைபெறுகிறது. வான்மீகிக்குச் சரியாகக் காலை ஏழேமுக்காலுக்குப் பள்ளிக்கூடந் தொடங்குகிறது. மாருதிக்கோ சரியாக நடுப்பகல் பன்னிரண்டேகாலுக்குத் தொடங்குகிறது. குழந்தை ஜானகியோ சக்ரதாரித் தொடக்கப் பள்ளியில் படிக்கிறாள். அவளுக்குச் சரியாகக் காலை எட்டேமுக்காலுக்குப் பள்ளிக்கூடந் தொடங்குகின்றது. ஒவ்வொருவருக்கும் தொடங்கும் நேரம் போலவே, இடைவேளையும், முடியும் நேரமும் வெவ்வேறாயிருக்கின்றன. வீட்டிலோ இவர்களின் தாயார் அஞ்சனாதேவி தவிர வேறு யாருமில்லை. உடலும் தளர்ந்துவிட்டது. உதவிக்கோ யாருமில்லை. பாவம்! அவர் என்ன செய்யக்கூடும். காலை நான்கு மணிமுதல் இரவு 8-மணிக்கு மேலும் அலுவலிருக்கிறது. உட்காரவும் நேரமில்லை. இது அடுத்த வீட்டிலுள்ள நிலை.

இதைக் காட்டிலும் மிக மிக மோசமான, சிக்கலான வாழ்க்கையுடைய குடும்பங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவர்களின் நிலையென்ன? இவையாவும் அன்பர் அவினாசியாருக்குத் தெரிய நியாயமில்லை தானே! அவரைக் குறைகூறுவதிற் பயனில்லை. அவரை அந்த இடத்திற்குத் தெரிந்தெடுத்தார்களே அவர்களையல்லவோ சொல்லவேண்டும்.

பெற்றோர் பாடு எப்படியோ போகட்டுமென்றுவிட்டுவிடுவோம். பிள்ளைகளை எடுத்துக்கொள்ளுவோம். காலையில் பள்ளி முடிந்தவர்கள் எப்படியோ ஏற்பாடு செய்து கொண்டு நாள்தோறும் படம் பார்க்கச் செல்லு [illegible]

குல அளவில் இரும்புக் கம்பி பொருத்தப்பட்ட பெருங்கூண்டு! ஆம்! அதில் ஒரு கிளியும் இருக்கிறது!

பரந்த வெளியில் சுற்றித் திரிந்து பயன் அடைய வேண்டிய கிளி! பாழும் சமூகக்கொடுங்கோலர்கள், குறிப்பிட்ட அளவுக்குள் அந்தக் கிளியை உலவச் செய்திருக்கிறார்கள், கொலைக் கிளி எனப் பட்டம் சூட்டி! ஆம் அந்தக் கிளிதான் கிடந்து உழல்கிறது!

கிறார்கள். மாலையில் பள்ளிக்கூடம் உள்ளவர்களோ முற்பகல் முழுவதும் வெய்யலில் திரிந்து வீண் காலம் போக்குவதுடன் உடலையுங் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

ஆசிரியர்களோ காலை நான்கு மணிக்கே எழுந்து குளித்து உணவுண்டும், அடுத்த வாரத்தில் பன்னிரண்டு மணிக்குமேல் உணவுண்டும், இது போன்று பல மாற்றங்களுக்கு ஆளாகி உடல்நலக் குறைவு ஏற்பட்டு வருந்துகின்றார். இன்னும் எத்தனையோ சிக்கல்கள்.

"நாட்டு மொழியையே முதன் மொழியாக ஆக்கிவிட்டோம். இனி அதுவே கல்வித் திட்டத்தில் முதலிடம் பெறும்." இது அமைச்சருடைய, அரசியலாருடைய அறிக்கை. நடைமுறையில் உள்ளதென்ன? அது முன்னிருந்த இரண்டாம் மொழி என்ற நிலையையுந் தாண்டி மூன்றாம் மொழியாக ஆக்கப்பட்டு விட்டது. எப்படி? முன்பு அது இரண்டாம் மொழியாக இருந்தபோது அதற்கு வாரத்திற்கு ஏழு அல்லது எட்டுப் பாடநேரங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. மிஷன்பள்ளிக்கூடங்களில் மட்டும் மிக்கதாராள மனப்பான்மையுடன் அய்ந்து அல்லது ஆறு பாட நேரங்கள் கொடுத்தார்கள். வேதபாடம் படிப்பதற்கு வேறு வழியில்லையல்லவா? தாய்மொழியின் தலையில்தான் கை வைக்கமுடிந்தது. எப்படியோ போகட்டும். இப்போதுள்ள திட்டப்படி நான்காம்பாரம் முதல் வாரத்திற்கு நான்கு பாடநேரந்தான் கிடைக்கும். ஏன்? நான்கு பாடநேரம் அந்த சொந்தமொழியைக் கெடுக்க வந்திருக்கும் தேசிய மொழியெனப்படும் இந்திக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. தாய்மொழியாசிரியர் ஊதிய உயர்வுக்கு வழியில்லை. வயிற்றில் மண்ணைப் போடுகிறார்கள். ஆனால் இந்திமொழி ஆசிரியர் பயிற்சிக்கும், அவர்தம் ஊதியத்திற்குமாக வாரி வாரி இறைக்கின்றார்கள்! யார்? காருண்யம் மிக்க காங்கிரஸ் சர்க்கார்! பொதுமக்கள் சர்க்கார்!! உண்மைதானே! இங்கு ஊரிலுள்ளோருக்கு உள்ள பங்கீட்டையுங் குறைக்கின்றனர். ஆனால் அகதிகள் என்ற பேரால் வடவருக்கு அவர்தம்பிள்ளை குட்டிகளுடன் கொண்டுவந்து வைத்துக்கொண்டு நூறாயிரக் கணக்கில் பணத்தை வாரி வாரி இறைக்கிறார்கள். கேள்வியேது! முறை ஏது இந்நாட்டில்? வடவருக்கு அடிமையாகியாவது, தன்னினத்தவனைக் காட்டிக் கொடுத்தாவது, தன்னாட்டைக் கொள்ளையடிக்க விட்டாவது அட்டைபோல் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என்ற அளவுக்கு வளர்ந்து விட்டது அவர்கள்தம் பதவிப்பித்து. நடக்கட்டும். அணையும் விளக்கு அதிகமாக எரியத்தானே செய்யும்.

சில்க் பைப்பிங் டஜன் 6—0—0

வியாபாரிகளுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்

குறைந்த விலை ★ உயர்ந்தசரக்கு

தேர்ந்த ஆட்களைக்கொண்டு மெஷினரியாலும் எலக்டிரிக் பவர்களினாலும் மேல் நாட்டு சரக்குகளைப்போல் பல வர்ணங்களில் சில்க் பைபிங் தயாரித்து ஜனங்களின் சௌகரியத்தை முன்னிட்டு விலையையும் குறைத்திருப்பதால் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம். 100க்கு 100 கலர் கியாராண்டி.

	சில்க் பைபிங் Dz.	6—0—0
No. 80	கிடா மார்க்	5—4—0
No. 60	கோல்டன் சுவான் Dz.	4—4—0
No. 40	சிங்கம் மார்க்	3—4—0

ஸ்டாக்கிஸ்ட் ஏஜண்டுகள் எங்கும் தேவை!

எல்லெண்டி பியாவ்ஸ் பைடிங் கம்பெனி,
அக்ராரம் தெரு, ஈரோடு.

சில்க் பைப்பிங் டஜன் 6—0—0

மாணவர்கள் இதுவரையும் வாலாற்றையும் நில நூலையுந் தனித்தனியே படித்து வந்தனர். அதனால் இரண்டையும் ஓரளவிற்காவது உண்மையாயாகவே அறிந்து கொள்ள முடிந்தது. அறிவும் வளர்ந்தது. ஆனால் இப்போதோ இரண்டையும் ஒன்றாக்கி, மாணவர்க்கு எதும் விளங்காத நிலையைச் செய்து விட்டார்கள். அதன் பின்னர் குடிமைப் பயிற்சி என்ற ஒரு புதுப் பெயரால் ஒரு பாடத்திட்டத்தை வகுத்துள்ளனர். இதனால் மாணவர்களுடைய நேரம் வீணாவதுடன், ஒரு தம்படிக்குக்கூடப் பயனில்லை என்பதையும் கூடிய விரைவில் மக்கள் அறிந்து கொள்ள முடியும். சாரணர் பயிற்சி என்ற பெயரால் இருந்து வந்ததையே "புதிய மொந்தையில் பழைய கள்" என்ற முறையிலமைத்து, ஏமாற்று வித்தை செய்திருக்கிறார்களேயன்றி வேறில்லை.

சுருங்கக் கூறுமிடத்துப் புதிய கல்வித் திட்டத்தால் எந்தவித நன்மையும் இல்லையென்பது மாத்திரமல்ல. என்றென்றைக்கும் நீக்கமுடியாத தீமைகளும் நிறைந்துள்ளன. பின்னர் ஒரு சமயம் அவற்றை விளக்கிக் காட்டுவோம். இத்தனை அலங்கோலங்களுக்கும் காரணம் என்ன? அவசரம்! அவசரம்! அதுவன்றி வேறில்லை. அவசரம் ஏன்? அமைச்சர்கட்கே தங்கள் நிலைமை நீடிப்பதில் உறுதியில்லை. ஆதலால் தங்களை ஆட்சிப்பீடம் கீழே தள்ளி விடுவதற்குள்ளாகவே தாங்கள் ஏதோ சாதித்துவிட்டதாகப் பொதுமக்கள் நம்பவேண்டும் என்பதற்காகவே தீர யோசித்துச் செய்ய வேண்டிய—மக்களின் கண்ணாகவுள்ள-கல்வித்திட்டத்தை இவ்வாறு குட்டிச்சுவராக்கி விட்டார்கள். இத்திட்டம் இருந்தவிடம் தெரியாமற் போங்காலம் நெடுந்தூரத்திலில்லையென்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ளவேண்டுமாய் விரும்புகின்றோம். அவசரக்கோலம் அலங்கோலமாகி அழிந்து ஒழிக்கப்படுவதைப் போலவே இந்த அவசரத் திட்டமும் அழிக்கப்பட்டுப் புதிய திட்டம், நம் நாட்டுக்கேற்ற கல்வித் திட்டம் விரைவிலே ஏற்படுவதாக! வியாபார நிலையிலுள்ள இன்றையக் கல்வித் துறை முறையும், அரசாங்கத்தாருக்குச் செல்லப்பிள்ளைகளாகித் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்வதொன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ள சுயநலக்கூட்டமும் ஒழிவதாக!

★

இந்த இதழ்!

உள் நாட்டில்	0	4	0.
வெளி நாட்டில்	0	5	0.

கதை கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

சாதித்திமிர்!

போட்டி

எண் 5.

கப்பற்படை கலைக்கப்பட்டதால், எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, கடம்பன் மீண்டும் தனது பறைச்சேரியிலுள்ள பாழடைந்த குடிசைக்குள் வந்து நுழைந்தான். நாகரிகமான உடை அணிந்திருக்கும் அவ்வாலிபனை, அவனுடைய நண்பர்களாகிய கருப்பனும், இருளனுமே அடையாளந் தெரிந்துகொள்ளச் சில வினாடிகளானதில் வியப்பில்லை.

கடம்பனுக்கு ஒரு தங்கை உண்டு; அவள் இப்போது எங்கே இருக்கிறாள் என்பதைத்தெரிந்துகொள்ளவே அவனுக்கு மூன்று மாதங்களாயின. ஆனால், அவ்வளவு காலம் அவன் ஆவலோடு தேடி அலைந்து கண்டுபிடித்த அவனுடைய அருமைத்தங்கை வசிக்கும் இடத்திற்குப் போகவோ, அவளோடு உறவாடவோ அவன் தகுதியற்றவனாகக் கருதப்பட்டான்.

ஒரு நாள் மாலை வழக்கம் போல் அவன் கடற்கரைக்குத் தூண்டிலோடு சென்று மீன் பிடிக்கும் முயற்சியிலீடுபட்டுக்கொண்டிருந்தான். அவன் அருகில் அழகிய இரு மங்கைகள் கடல் அலைகளோடு விளையாட வந்தனர். அவ்வழகிகளில் ஒருத்திதான் அவனுடைய தங்கை என்றால், தூண்டில் முள்ளைக் கடலில் போட்டு விட்டுக் கரையில் நிற்கும் அவனுக்கு, இனி மிதப்புக்கட்டைமீது கண்ணேனும், கருத்தேனும் இருக்க முடியுமா?

சற்று நேரத்திற்குள் தங்கையின் கூக்குரல் கேட்டு அவன் திடுக்கிட்டான். கடல் அலைகளால் இழுத்துக் கொண்டு போகப்பட்ட தங்கையின் தோழி, சற்று தூரத்தில் கடலில் மூழ்கிக்கொண்டிருப்பதைக் கண்டான். உடனே கடலில் பாய்ந்து நீந்திச் சென்று அவளைக் கைப்பற்றிக் காப்பாற்றிக் கரை ஏற்றினான்.

* *

சில நாட்களுக்குப் பிறகு, அதே கடற்கரையில் மாலை நேரத்தில் உலாவ வந்த அவ்விரு மங்கைகளின் உரையாடலைச் சற்று கேளுங்கள்:

“ஏண்டி மேனு! உன்னிடம் ஒன்று கேட்டால், ஒளிக்காமல் சொல்கிறாயா?”

“என்னடி கலாவதி!! பீடிகையே பலமாக இருக்கே? உம். எதைவேண்டுமானாலும் கேள்! நான் ஏன் உன்னிடம் ஒளிக்கப்போகிறேன்.”

“நீ ஒரு நாள் கடலில் மூழ்கப்பார்த்தாயே! அதற்கு மறுநாளிலிருந்து தினந்தோறும் இரவில் வெகு நேரங் கழித்து வீட்டுக்கு வருகிறாயே......! அப்படி எங்கேடி போயிட்டு வருகிறாய்?”

“அப்...பாடா! அதுதானா? நானும் என்னமோ ஏதோவென்று பயந்து விட்டேனே! உம். எங்கேயாவது சுற்றித் திரிந்து விட்டு வந்திருப்பேன்! இதில் உனக்கேண்டி சந்தேகம்?”

“ஊம்...!‘சந்தேகம்’ பார்த்தாயாடி! என் மனதில் உதித்த சந்தேகத்தை உன் மனதும் உணர்ந்து விட்டது! ஆனால்......! உன் நாவு மட்டும் இன்னும் மறைக்கவே பார்க்கிறது! அப்படித்தானேடி?”

“கலாவதி! நீ என் உயிருக்குயிரான தோழி! உன்னிடம் உண்மையைச் சொல்வதற்கென்ன! காதல் குளமாகிய என் உள்ளத்தில், இன்ப எண்ணங்கள் கிளம்பி அலை மோதும்போது, நீ அதைக் கள்ளத்தனமாகக் கவனித்து விட்டாய் போலிருக்கிறது! ஆனால், ஒருவரிடமும் சொல்லமாட்டாயே...?”

“ஏண்டி மேனு! ஒரு வேளை நீ என்னை உன் காதலரிடம் தூதாக அனுப்ப நேர்ந்தால், அப்போது அவரிடமேனும் சொல்லலாமோல்லியோடி...?”

“அடிக்கலாவதி! நான் உன்னை ஏவினாலும் நீ அவரிடம் தூது செல்லக்கூடச் சம்மதிக்கமாட்டாயேடி!”

“ஏண்டி! உன் காதலர் அவ்வளவு அவலட்சணமானவரோ?”

“இல்லை! நாளெல்லாம் பார்த்துக் கொண்டே இருந்தாலும் சலிக்காதடி, அப்பருவகாலத் திருவுருவில் இளமை கொழிக்கும் அழகை! அவ்வழகன் மதிவதனத் திருவாய்திறந்து, சாதாரணத் தமிழ் நடையில், பகுத்தறிவுச் சுடர் ‘பளிச்சுப் பளிச்’ சென்று மின்னப், பொழியும் மொழிகளைப் பாவலர் கேட்டிடில் ஆவலோடு, பாமாலைகள் தொடுக்கத் துடியாய்த் துடிப்பாரடி!! கல்லாமல் கற்ற ஓர் இயற்கைக் கலைஞரடி!!! என் இன்பக் களஞ்சியமடி......இன்னும் என்னென்னமோ சொல்லத்தோணுதடி! ஆனால்......! அவர் ஒரு ஆதித்திராவிடர். நீ அவரிடம் எனக்காகத் தூதேனும் செல்லச் சம்மதிப்பாயாடி...?”

“ஆ...! ஆதித்திராவிடரா.........? அவரை நான் எப்போதாவது பார்த்திருக்கிறேனாம்மா......?”

“அம்மாவா...? கலாவதி! ஏண்டி இப்படித் திடுக்கிட்டு உளறுகிறாய்...? அவர் வேறு யாருமில்லேடி, அன்று என்னை கடல் ஆபத்திலிருந்து காப்பாற்றினாரே, அவரேதாண்டி!”

“மேனு! அந்த...க் கடம்பனா...?”

“ஆம். அவரேதான்! ஏன்...நீயும் அவரையே காதலித்திருக்கிறாயா...?”

“இல்லை. அவர் என்...அண்ணா!”

“ஓ! அப்படியானால் அவரும் ஒரு பார்ப்பனரேதானா...?”

“இல்லை. அவர் பார்ப்பனருமில்லை, நான் பார்ப்பனத்தியுமில்லை! நானும் ஒரு பறைச்சியேதான்.”

“கலாவதி! நீ பறைச்சியா...?”

“ஆம்! நான் பறைச்சியாக இருக்கும்போது என் பெயர் கலாவதியல்ல, காத்தாயி!”

“காத்தாயியா? அப்படியானால் நீ டாக்டர் கோபால்சாமி அய்யங்கார் மகளில்லையா?...?”

“மேனு! நான் உண்மையில் ஒரு

[6ம் பக்கத் தொடர்ச்சி]

தாமே சிந்திக்க, தம் இனத்தார், தம் மக்கள் வளர்ச்சிக்கு உழைக்க உதவாது. தவிர அரசியல்உயர்வு, நாகரிக உயர்வுக்குப் பிறமொழிக் கல்வி உதவும் வரை, பிறமொழி அறிவுடையார்க்கே உயர் சம்பளம் என்றிருக்கும் வரை, உயர் குடியினர் எனத்தருக்கி அரசியல்சூதாட்டமாடும் சோம்பல் வகுப்புக்கள் அன்றி, நாட்டு மக்கள் எவரும் முன்னேற முடியாது.

ஆகவே ‘நாட்டுக்கல்வி’ உண்மையில் ‘நாட்டுக்கல்வி’ ‘நாட்டு மக்கள் கல்வி’ ஆக வேண்டுமானால், அது முழுவதும் தாய்மொழி அடிப்படையில் அமைவது இன்றியமையாதது ஆகும். பிறமொழிக் கல்வி, பிறநாட்டுத் தொடர்பு வேண்டும் அளவு உயர்ந்துவிட்ட இனத்தவர்க்கு, நாட்டுக்கல்விக்கு மேற்பட்ட ஒரு துணையாக முடியுமேயல்லாமல், நாட்டுக் கல்வியின் ஒரு பகுதியாக முடியாது.

நாட்டுக் கல்வி வாழ்க! தமிழ் வாழ்க!!

ரோஜா முத்தையா

பறையனுக்கும், பறைச்சிக்கும் பிறந்தவளே தான். நான் பிறந்த சில ஆண்டிற்குள் என் தந்தை இறந்து விட்டாராம்; என் அண்ணன் கடம்பனும் கப்பல்படையில் போய்ச்சேர்ந்து விட்டாராம்; அனாதையாக இருந்த என் தாயாருக்கு டாக்டர் கோபால்சாமி அய்யங்காருடைய ஆஸ்பத்திரியில் ஆயாள் வேலை கிடைத்ததாம்; என் தாயார்வேலைக்கு வந்த அன்றே டாக்டருடைய மனைவி மோட்டார் விபத்தில் சிக்கிப்பலத்த காயத்துடன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டாளாம்; அப்போது அவளுடைய உடம்பிலுள்ள இரத்தம் பெரும்பாலும் விரயமாகி விட்டபடியால், உடனே வேறொருவருடைய நல்ல இரத்தம் அவள் உடம்பில் செலுத்தப்பட்டாலொழிய அவள் பிழைப்பது அரிது என்றிருந்ததாம்; அதைஅறிந்த என் தாயார் டாக்டர் மனைவிக்குத் தன் இரத்தத்தைத் தருவதாகச் சொன்னாளாம்; உடனே டாக்டர் என் தாயாரை அவர் மனைவிக்கு அருகில் படுக்கப்போட்டு ரப்பர் குழாய்க் கருவி மூலம் என் தாயார் இரத்தத்தை டாக்டர் மனைவிக்குப் பாய்ச்சினாராம்; டாக்டர் மனைவி பிழைத்துக்கொண்டாளாம்; என் தாயார் அதனால் பலஹீனமுற்றுத் திடீரென்று மரண தருவாயை அடைந்து விட்டாளாம்; அப்போது டாக்டர் மிக்க நன்றியும், துக்கமும் உடையவராய் என் தாயாரின் மரணப் படுக்கை அருகே நின்று கொண்டிருக்கும்போது,என் தாயார் என்னை அவருக்குக்காட்டி 'இதை உங்க...புள்ளையைப்போல காப்பாத்துங்க...' என்று சொல்லி வாயை மூடினாளாம்; அதுதான் அவளுடைய கடைசி வார்த்தையாம்; அன்று முதல் நான் டாக்டர் கோபால்சாமி அய்யங்காரின் செல்வக் குமாரி கலாவதி ஆனேனாம்; அதன் பிறகு, கல்லூரி வாழ்வும் கிடைத்தது, அன்பின் வடிவமாகிய உன்னைத் தோழியாகவும் அடைந்தேன். ஒரு நாள் மாலை இதே கடற்கரையில் தான், என் அண்ணன் கடம்பன், எப்படியோ என்னை அடையாளங் கண்டு பிடித்து விசாரித்து, விவரம்தெரிந்து கொண்டு விலகிப் போய்விட்டார். அவரை நானே பகிரங்கமாகப்பார்த்து அண்ணா என்று அழைக்க அஞ்சிக் கொண்டிருக்கும்போது, நீ அவரையே காதலித்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறாயே...! மேனு! இது வெளியானால், உன் கதி என்னவாகும்?''

''கலாவதி! நீ பறைச்சியின் வயிற்றிலிருந்து பிறந்தாய்! எனினும் பார்ப்பனரால் வளர்க்கப்பட்டதால், பார்ப்பனத்தி ஆகிவிட்டாயல்லவா? அதுபோலவே, ஒரு பார்ப்பனச் சிறுமி பறைச்சியால் வளர்க்கப்பட்டால், அவளும் பறைச்சியாகத்தானே ஆகிவிடுவாள்? இதை எனது மூடச்சமுதாயம் என்றைக்கு உணரப்போகிறதோ...? ஆனால், அதுவரைக்கும் நான் பொறுத்திருக்கப் போவதில்லை! சரி, கலாவதி! அவர் வருகிற நேரமாச்சுது; நீ உங்காத்துக்குப்போ, நான் அவரிடம் போகிறேன்...''

என்று கூறிவிட்டுக் கலாவதியின் பதிலைக்கூட எதிர்பார்க்காமல் மேனகை எழுந்து போய்க்கொண்டிருந்தாள்.

* *

கடம்பனை மேனகை காதலிக்கும் சங்கதி எப்படியோ அக்ரகாரம் முழுதும் பரவிவிட்டது. மேனகையின் பெற்றோர்களாகிய வைத்தியநாதய்யரும், மீனாம்பாளும் மேனுவை எவ்வளவோ கண்டித்தும் பயனில்லை. காரியம் மிஞ்சிவிட்டது.

ஒரு நாள் அந்த அக்ரகாரம், கொலைக்காரர் குடி இருக்கும் பட்டியைப் போல் விளங்கியது. அங்கு வசிக்கும் பார்ப்பனர் முகமெல்லாம் களை இழந்து காணப்பட்டன. ஒன்றிரண்டு வீட்டுத் திண்ணையில் சிலர் கூடிக் 'குசுகுசு' வென்றும் பேசிக்கொண்டிருந்தனர்.

வைத்திய நாதய்யர், வீட்டுக்கதவைத் தாளிட்டு விட்டு மனைவியோடு வாதித்துக் கொண்டிருக்கிறார்.

''திருடன் காலில் தேள் கொட்டிண்டாப்போல, நீயே என்னைக்காட்டிக் கொடுத்துடுவே போலனா இருக்கு...?''

'நானா காட்டிக் கொடுக்கணும்! நாளைக்குக் கலாவதி குணமாகி ஆஸ்பத்திரிலேந்து வந்ததும் அவள் வாயை மூடிண்டிருப்பாள் என்பது என்ன நிச்சயம்?''

''போடிபோ! கலாவதிமண்டை ஒட்டையே உடைச்சு நொறுக்கிட்டோமே! அவள் இனிப் பிழைக்கவா போகிறாள்? டாக்டர் கோபால்சாமி அய்யங்காரே அவளுக்கு மருந்து கொடுக்கிறேனு, விஷம்னா கொடுப்பார்!''

''சரி. உங்க மனசுப்படியே வெச்சுண்டாலும்! நம்ம மேனு என்ன செய்வாளென்பது யாருக்குத்தெரியும்...?''

''அது ஒன்றுதான் இப்போ என் மனதையும் வதைச்சுண்டிருக்கு. அவள் எங்கே போனாள் என்ன ஆனாள் என்பதுகூடத் தெரியலையேடி...?''

''மேனுவைச் கடைசியா எப்போத் தான் பார்த்தேள்?''

''அந்தக் கருமத்தை என்டி கேட்கிறே! அவள் அந்தப் பறையன் மடியில் உட்கார்ந்து, அவனைக் கட்டி அணைத்து முத்தம் கொஞ்சிக் கொண்டிருக்கும் போது பார்த்தோம்! அடியாட்கள் கடம்பனைப் பிடித்துத் தடியால் தாக்குவதற்கு முன்பே, மேனு அங்கிருந்து மாயமா மறைந்து விட்டாள். எவ்வளவோ தேடியும் கண்டு பிடிக்க முடியவில்லையே என்னடி செய்யலாம்...?''

* *

மறுநாள் மாலை, தினசரிகளில் மூன்று தனித்தனிச் செய்திகள் மூலைக்கொன்றாய்ப் பிரசுரிக்கப்பட்டிருந்தன. ஒன்று, 'கப்பல்படையிலிருந்து திரும்பிவந்த கடம்பன் எனும் பறையன் தன் குடிசைக்குள் தூக்குப் போட்டுக் கொண்டு தன்னைத்தானே தற்கொலை செய்து கொண்டான் என்று தெரியவருகிறது.' மற்றொன்று 'டாக்டர் கோபால்சாமி அய்யங்காரின் வளர்ப்புக்குமாரி கலாவதி, மச்சுப்படிக் கட்டில் இறங்கும் போது கால்தவறி விழுந்து விட்டதால், மண்டையில் பலமான காயங்கள்ஏற்பட்டு, ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்ட ஒரு மணி நேரத்துக்குள் மாண்டுவிட்டாள்.'; இன்னொன்று, ''வைத்திய நாதய்யர் மகள் மேனகையின் பிரேதம் கடல் அலைகளால் ஒதுக்கப்பட்டுக்கரையில் கிடந்ததைப் போலீஸார் கண்டு பிடித்துப் பிரேத விசாரணை செய்ததில், அசம்பாவிதமாகக் கடல் அலைகளால் இழுத்துக்கொண்டு போகப்பட்டுமூழ்கி மடிந்திருக்கவேண்டும் என்று தீர்மானித்தனர்.' என்பவைகளாகும்.

★

வாடிக்கைக்காரர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்

பொங்கல் புத்தாண்டு
வாழ்த்துக்கள்!

★

K. P. கேஸ்டர் ஆயில் ஒர்க்ஸ்,

ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

Phon. No. 127. Gram. KEPEECY.

இன்பவாழ்வு

கங்கையின் காதல்!

(மு. கருணாநிதி)

கைலாயத்தில் சிவபெருமான் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். கழுத்திலிருந்த பாம்பு கீழே யிறங்கி மான் குட்டியோடு விளையாடிக் கொண்டிருந்தது. அருகில் ஆழ்ந்த நித்திரையிலிருந்த பார்வதி தேவிக்கு பாதங்களை...காளை மாடு சொரசொரப்பான நாக்கால் நக்கிக்கொண்டிருந்தது கூட தெரியவில்லை. தேவலோகத்துப் பெண்களுக்கே தூக்கத்தில் இடி விழுந்தாலும் தெரியாது போலிருக்கிறது; இல்லாவிட்டால் சீதா பிராட்டி தூங்கும்போது அவள் மேனியை இந்திரன் மகன் காக்கை உருவில் ரசித்திருக்க முடியுமா? பார்வதியின் முகத்தில் வியர்வை அரும்பு கட்டி இருந்தது. பரம சிவனாரின் உடலும் தூக்கத்தில் அசைவற்றுக் கிடந்தது. மகேஸ்வரனுக்கு அய்ந்து தலைகள் அல்லவா? நான்கு தலைகளைக் கழற்றி மான் தோலில் சுருட்டி ஒரு மூலையில் வைத்திருந்தார். இல்லா விட்டால் தூங்குவதற்கு வசதிப்படாதே!

ஆழ்ந்த உறக்கம்—அமைதி—அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு கிளம்பும் சிவன் தம்பதிகளின் பெரிய மூச்சுக்கள்.

சிவனின் தலையிலே ஒரு ஜடை சற்று வேகமாக அசைந்தது. அந்த அசைவைத்தொடர்ந்து கங்கா நடந்து கொண்டிருந்தாள். பூனையைப் போன்ற....பஞ்சுப் பாதங்களை சிவனின் தலையில் வெகு லாவகமாக வைத்து, சுற்று முற்றும் பார்த்தபடி எங்கேயோ போய்க்கொண்டிருந்தாள்.

ஒரு ஜடையின் அடியில் போய் நின்றுகொண்டு, தங்கக்கரங்களை கிளைகளில் நீட்டியபடி யாரையோ எதிர்பார்த்திருந்தாள். அவள் நீலக் கருவிழிகளை கிளைகளின் நடுவே நீண்ட இரண்டு கரங்கள் பொத்தின.

கங்கையின் கைகள் அவளையறியாமல் அந்தக் கைகளைப் பிடித்துக் கொண்டன. அல்லித்தண்டில் ரோஜாமலரைப் பொருத்தி வைத்தது போலிருந்தது அந்தக் கைகலப்பு.

'சந்திரா!' தேனுண்ட மயக்கத்தில்—களைப்புற்ற வண்டின், கீழ் ஸ்தாயி ரீங்காரம் போலிருந்தது அந்த அழைப்பு.

சந்திரா...ஆம் சந்திரன்தான். சிவனாரின் தலையில் குடியிருக்கும் அந்த வாலிபன்தான். பஞ்சோடு நெருப்பை வைத்தலாகாது என்பார்கள். முருகனின் மயிலோடு...பாம்பை வைத்திருப்பவர்தானே பரமேஸ்வரன். கங்கையைத் தலையில் கொண்டவர் சந்திரனை காலிலாவது வைத்திருக்கலாம்; என்னமோ 'பாவம்' அவர் தலை எழுத்து!

"கங்கா! கண்ணே!"

"சந்திரா!...சல்லாப ரூபா!..."

"அன்பே!...நேற்று ஏண்டி வரவில்லை?"

"நேற்று என்முறை. இன்று பார்வதி முறை."

"மெதுவாகப்பேசு...சிவன் விழித்து விடப்போகிறார்"

"நல்லவேளை...தலையில் கண்ணில்லை. விழித்தாலும் பயமில்லை..."

"நீ கிண்டல்காரி கங்கா!"

"நீமட்டும் என்னவாம்"

"கங்கா...! உனக்கு அந்தக் கிழவனோடு பேசப் பிடிக்கிறதா?"

"பிடித்திருந்தால் ... சந்திரனை ஏன் தேடுகிறேன்..."

"தாரை பேசுகிற மெட்டில் பேசுகிறாயே...அவளும் இப்படித்தான். அவள் புருஷன் தாடியும் மீசையுமாய் தள்ளாத காலத்தில் அவளைக் கஷ்டப்படுத்துகிறானாம்"

"எங்களைப்போல தாரையும் கங்கையும் தள்ளாத கிழவன்களுக்கு வந்து சேர்ந்தால், உன்னைப் போலச் சந்திரர்களுக்கு வேட்டைதான்"

"என்ன இருந்தாலும் நாம் செய்வது பாவந்தான்...இல்லையா?"

"சந்திரா...! பூலோகத்திலே பாவம் செய்தல் கைலாசத்துக்கு வரமுடியாது. நாம்தான் கைலாசத்திலேயே இருக்கிறோமே. இதைவிட பெரிய பாபம் இருந்தாலும் கண்டுபிடிக்கவேண்டும் தெரியுமா? இந்த பாபத்துக்கெல்லாம் நாமா பொறுப்பாளி? தாரை உன்னை நேசித்தாள். கணவனுக்குத் துரோகம் செய்தாள் என்கிறார்கள் மூடர்கள். தாரைக்கு நெஞ்சம்—அதில் ஆவல்—ஆனந்தவாழ்வைச் சுவைக்கும் துடிப்பு—இதையெல்லாம் உண்டாக்கிவிட்டு...அவளை விபசாரி என்றால்யார்கேட்பது....? நீ குருபத்தினியைக் கூடியது பாபமாம், பைத்தியக்காரரின் உளறல். குருவுக்குச் செய்யவேண்டிய தொண்டு; அவர் மனைவியின் கவலையைப் போக்கினாயே அது பெரிய தொண்டல்லவா?

நான்தான் என்ன செய்துவிட்டேன்!

ஆகாயத்திலிருந்த என்னைப் பகீரதன் கூப்பிட்டான். பகீரதனுடைய அழகைக்கண்டு என் மேனி குலுங்கிற்று, மேனி மட்டுமா? இதயமே குலுங்கிற்று. அந்தக் காம தாகத்தை வர்ணிக்க என்னால் முடியாது சந்திரா...! கம்பன் பிறந்துவரவேண்டும்; அவ்வளவு எல்லை மீறிவிட்டது என் உணர்ச்சி. ஒரு நாட்டு மன்னன். சகல போக போக்கியமுமுள்ள சக்ரவர்த்தி. அவனோடு சரசசல்லாபமாடி...ஜென்ம சாபல்யமடையலாம் என்று கனவு கண்டேன். ஆனால் அந்தக் கையாலாகாதவன்...என்னை இந்தக் கைலாசக் கிழவனிடம் தள்ளிவிட்டான். இவனோ கிழவன்...கிழவன் மட்டுமா...தாருகாவனத்து ரிஷிகளின் மனைவிகளுக்காக...... உடலையே தேய்த்துவிட்ட எலும்புக்கூடு. அதுமட்டுமா சந்திரா...! பக்கத்திலே பார்வதி. இன்பக் கேளிக்கைக்கு காலஅட்டவணை. ஒருத்திக்கு ஒருநாள் முறை. என்னால் முடியுமா?...என்போன்ற யுவதிகளால் முடியுமா?...ஏன்...பார்வதியால் தான் முடிந்ததா?...பிர்மாவையல்லவா கேட்கவேண்டும் அந்தக் கதையை."

"இரண்டு பெண்டாட்டிக்காரன் பாடெல்லாம் இப்படித்தான்..."

"சந்திரா! தினந்தினம் பூலோகத்துக்குப் போகிறாயே...அந்த மக்களிடம் இந்த ஒரு வார்த்தையை உபதேசம் செய்வாயா?"

"என்ன கங்கா?"

போர்ப்பாதை?

"அரங்கண்ணல்,,

முதலாளித்துவம்—பொதுவுடைமை.

இரண்டு கூடாரங்கள்!

முதல் கூடாரத்தில் பரபரப்பும், படாடோபமும், பயமும், மந்திராலோசனையும் நடைபெறுகிறது. இரண்டாவதில் அமைதியும், சாந்தமும் உறுதியும் தவழ்ந்து கிடக்கிறது. ஏகபோக உரிமை பறிபோய் விடுமோ என்ற ஏக்கமும், 'என்ன செய்வது?' என்ற பயமும் முதலிடத்தில். 'எதுவரினும் சரி. அஞ்சோம்!' என்ற வீர முழக்கம் இரண்டாம் இடத்தில்.

உலகத்தில் இரண்டு கூடாரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன—அமைந்து விட்டன!

மார்ஷல் உதவித்திட்டம். ஐக்கிய ஐரோப்பா. மேற்கு ஐரோப்பா யூனியன்—இவைகள் முதல் கூடாரம் தயாரிக்கும் மோகனச்சாமான்கள். ஆளை ஏமாற்றி தம் பக்கம் இழுத்துக்கொள்ளும் தந்திரவலைகள்!

'சுதந்தரம்—பொதுவுடைமை-பாகுபாடின்மை மனிதனாக வாழ்தல்' இரண்டாம் கூடாரத்திலே நிலவும் நிதான எண்ணங்கள்!

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, இன்ன பிற முதலாளித்துவ நாடுகள் முதல் கூடாரத்தில்...

இரண்டாவதில் உலகெங்கும் இருக்கும் பாட்டாளிகள்.

* *

மாடமாளிகை வாழ்வு, மதோன்மத்த நிலை, மக்களை அடிமையாகவே வைத்திருக்கும் ஏகபோகச் சொந்தம்—இன்ன பிற்போக்கு எண்ணங்களின் உச்சியிலே உட்கார்ந்து கிடக்கும் முதலாளித்துவ முதலைகள் தங்கள் தங்கள் சர்க்காரைக் கொண்டு, உலகில் எங்கணும் வெகு வேகமாகப்பரவிவரும் பொதுவுடைமை மணத்தைக் கண்டு, கிலி கொண்டு 'எப்படி எதிர்ப்பது? ஒழிப்பது?' என்பதற்காக சிருஷ்டித்துக் கொண்ட சதியாலோசனைக் கூடமே முதல் கூடாரம்!

முதல் கூடாரத்திலே கிலியும், பயமும் தாண்டவமாடுவதன் காரணம், தாங்கள் அனுபவித்துவரும் ஆதிபத்திய நிலை, இரண்டாம் கூடாரத்தில் இருந்து கிளம்பும் ஒலியில் மண்தூள்களாக ஆகிவிடுமே என்பதுதான்!

இந்தப்பயம் அதிகரிக்க அதிகரிக்க முதலாளித்துவ 'பூதம்' தனது மகேந்திர ஜாலங்களையெல்லாம் செய்யத் தொடங்கிவிட்டது. இதன் விளைவுகள் தான் ஜப்பானில் அமெரிக்க நிர்வாகம் நீடிப்பது. ஜெர்மனியைத் துண்டாடி ரூர் பிரதேசத்தைத் தங்கள் கண்காணிப்பில் (சர்வதேசக் கண்காணிப்பு (!)) வைத்துக் கொள்ளுவது, வசதியற்ற நாடுகளுக்குப் பொருள் உதவி செய்வது என்ற கூப்பாடுகளெல்லாம்!

இரண்டாம் கூடாரமாகக்காட்சியளிக்கும் ரஷ்யாவைக் கண்டு—அதன் கொள்கை வளர்ச்சியைக் கண்டு—கலங்கும் முதலாளித்துவ மூட்டைகள் தங்கள் காலடியில் கிடக்கும் தங்கள் அரசாங்கங்களின் மூலம் இந்தஏற்பாடுகளைச் செய்து வருகிறது. முதல் கூடாரத்தில் இருப்பவைகளின் கண்களெல்லாம் — பொதுவுடைமைக் கருத்தை, கொள்கையைக் காண்பதற்குப் பதில், கண்டு சிந்தித்து 'சரியா?' என்று முடிவு கட்டுவதற்குப் பதில்—ரஷ்யாவின் மீதே பதிந்து கிடக்கின்றன! ரஷ்யாவின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் தங்கள் சர்வாதிகாரக் கோட்டைக்கு வெடிகுண்டுகள் வைக்கப்படுவதாகக் கருதும் முதலாளித்துவ நாடுகள், ரஷ்யாவைத் தரைமட்டமாக்கிவிட ஆயத்தங்கள் செய்கின்றன.—அதாவது இன்னொரு போருக்கு வித்திடுகின்றன!

ரூர் பிரதேசத்தையும், ஜப்பானையும் தங்கள் போர்த்தளமாக வைத்துக்கொண்டு ரஷ்யா மீது தாக்குதல் நடாத்தவும், அதே போது 'மார்ஷல் உதவி' என்ற மாயாசொரூபத்தைக்காட்டி இந்தியா, பர்மா ஆகிய நாடுகளை மயக்கி தங்கள் கூடாரத்தின் பக்கபலமாக வைத்துக் கொள்ளவும் முதலாளித்துவ நாடுகள் முயல்கின்றன.

இந்நிலையில்......

சீனாவில் கம்யூனிஸ்டுகள் முன்னேற்றம். வியட்நாமில் சுதந்தரக் கிளர்ச்சி. பர்மாவில் பல இடங்களில் கம்யூனிஸ்டுகள் ஆக்கிரமிப்பு. இந்தியாவிலும் மும்முரம்...என்ற செய்திகள் வருகின்றன. ஆங்காங்குள்ள நாடுகளின் சர்க்கார்கள் முதலாளிகளின் கைப்பொம்மைகளாகவேயிருக்கும் காரணத்தால், பணமூட்டைகளின் கட்டளைப்படி முதல் கூடாரம் நோக்கியே சாயும்! சான்று, இந்திய சர்க்காரும் பர்மாவுமே போதும்!!

முதல் கூடாரத்தில் பலம் சேரச் சேர, இரண்டாம் கூடாரத்தின் மீது பாயவே தூண்டும்—ஏதாவது சாக்குடன்! இந்தப் பாய்ச்சல் ஏற்படாமல் இருக்கவேமுடியாது! காரணம். முதலாளித்துவ போதை கொண்ட ஆதிபத்திய நாடுகள் பொதுவுடைமையைக்கண்டு கிலி கொண்டு அதற்குக் 'காரணம் ரஷ்யாவே ஆகும், அதை ஒழித்து விட்டால் நம் சுகபோகங்களுடன் பயமின்றிச் சரண்டி வாழலாம்'' என்று மனப்பால் குடித்துக் கொண்டுள்ளன. இந்த நிலையின் காரணமாகவே உதகை மாநாடுகளும், லண்டன் கூட்டு மாநாடும், அட்லி-சர்ச்சில் சந்திப்பும், 'நித்திய'க்காட்சிகளாகி வருகின்றன! இந்த நித்திய நிகழ்ச்சிகள் அடுத்த போருக்கான பாதைதான். சந்தேகமேயில்லை!

★

"கிழவனுக்குப்பெண் கொடுக்காதே! இருதார மணத்துக்கு இணங்காதே! இதைச் சொல்வாயா?... என்பொருட்டுச் சொல்...என்போன்ற பெண்கள் இனியும் தோன்றாமலிருக்க இதைச் சொல்..."

"ஆகட்டும் கண்ணே...வா... பிடரிப்பக்கம் போவோம். அங்கேதான் இருட்டாயிருக்கும்"

"சந்திரனும் கங்காவும் மறைந்து விட்டார்கள். சற்று நேரத்தில்... எம்பெருமான் திடுக்கிட்டு விழித்தார். பக்கத்தில் பார்வதி அசைவற்று உறங்கிக்கொண்டிருந்தாள். தலையைத்தொட்டுப் பார்த்தார்... அப்போதுதான் அவசர அவசரமாக கங்கா ஓடிவந்து அங்கே உட்கார்ந்தாள்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தின் பேரில், ரெம்பவும் கஷ்டமாக ஒரு நூறு ரூபாய் அநுமதித்திருக்கிறார். இதைத்தான் நாம்நால்வரும் பங்கு போட்டு ஆளுக்கு இருபத்தைந்து வீதம் எடுத்துக் கொள்ள வேண்டும்! வேண்டுமானால், என் பங்கை அந்த சப்இன்ஸ்பெக்டருக்கே கொடுத்து விடுகிறேன்... ரஞ்சா! நீதானப்பா விஷயத்தை எப்படியாவது சரிக்கட்டவேண்டும்! இந்தச் சமயத்தில், உண்மையான நண்பர்களாகிய நீங்கள் தானே என்னைக் காப்பாற்ற வேண்டும்!!

இராகவன்:- ஆ ட ட ட ா ...? என்ன தாராளமப்பா உனக்கு...?

ஆடிட்டர் என்னங்கசார்! கடைசியிலே இப்படிக் கையை விரிச்சிட்டீங்களே...?

இரஞ்சன்:- [நயவஞ்சகமாக] அவர்கள் கிடக்கிறார்கள் விஸ்வா! எல்லாவற்றையும் நான் கவனித்துக் கொள்கிறேன்...உம்...சரி... காலை...நான்! தாசி கமலா வீட்டில் ஒரு...நடனக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்!! நீ அங்கே அவசியம் வரவேண்டுமே...?

விஸ்வன்:- ஓ! அப்படியா!! என்னப்பா 'கரும்பு திங்கக் கூலியா? ஊம். கண்டிப்பாவருகிறேனப்பா!!!

இரஞ்சன்:- சரி! நாங்கள் போய் வருகிறோம்...

விஸ்வன்:- ஆ க ா...! போய் வாருங்கள்...ஆனால்! நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும்...

இரஞ்சன்:- ஓ. கே!

காட்சி 23.

[வீதி.]

உறுப்பினர்:- இரஞ்சன், இராகவன், இராஜன்.

கதைஅமைப்பு:- [இராஜன் விடுதலையாகிப் போவதை இரஞ்சனும், இராகவனும் அறிகின்றனர்.]

இராகவன்:- ரஞ்சா! இப்போது என்னை எங்கே இவ்வளவு அவசரமாகக் கூட்டிக்கொண்டு போகிறாய்...?

இரஞ்சன்:- என்னடா ராகவா! ஒன்றுந் தெரியாதவனைப்போல் கேட்கிறாயே? இன்று தாசி கமலா வீட்டில் விஸ்வனுக்கு நாட்டிய விருந்தளிப்பதாக நேற்றுத்தானே வாக்களித்தோம்...! நாம் போகா விட்டால் அங்கு என்ன நடக்கும்...?

இராகவன்:- என்னப்பா அது! அந்தப் பயல் விஸ்வன்தான், பிளாக் மார்க்கட்டில் கிடைத்த ரூபாயை எல்லாம் அவன் ஒருவனே கவளீகரம் பண்ணிவிட்டு, நமக்கெல்லாம் பட்டைநாமத்தைச் சாத்திபிருக்கானே...! அவனுக்குப்போய் நாட்டிய விருந்து வேறே செய்யணுமா...?

இரஞ்சன்:- ராகவா! எனக்கெல்லாம் தெரியும்! பட்டை நாமம் நமக்கா அவனுக்கா என்பதை நாட்டியக் கச்சேரியில் காட்டுகிறேன்! வா!!

இராகவன்:- அதோ! அங்கே வருகிறவன் ராஜனைப் போல் இருக்கிறானே?

> ## ஒழியட்டும்!
>
> பிச்சை யெடுத்தே சில ஆத்மாக்கள் வாழவேண்டும் என்பதாகப் பிரமன் படைத்திருப்பான் ஆனால், அக்கோடிய பிரமன் முதலில் அலைந்தலைந்து கெட்டொழியட்டும்!
>
> "திருவள்ளுவர்"

இரஞ்சன்:- [கூர்ந்து நோக்கிக் கொண்டே] ஆங்! ராஜனா? சப் இன்ஸ்பெக்டர் அவனை விட்டு விட்டானோ? ஆம். ராஜனேதான்! ராகவா! நீ சற்று மறைவாக இரு. நான் அவனிடம் கொஞ்சம் பேசிப்பார்க்கிறேன்!

இராஜன்:- [இரஞ்சனைக் கடந்து செல்லுகிறான்]

இரஞ்சன்:- அடடே! என்னப்பா ராஜா! விடுதலையாகிவிட்டாயா?

இராஜன்:- [திரும்பி வந்து] ஏன் உனக்குப் பிடிக்கவில்லையா?

இரஞ்சன்:- சேச்சே! அதற்கில்லேப்பா! அந்தப்பாவிப்பயல் விஸ்வன், உன் மேலே பழிசுமத்திவிட்டானே பார்த்தாயா?......?

இராஜன்:- பார்த்தேன்!

இரஞ்சன்:- என்னப்பா பார்த்தே?

இராஜன்:- நீங்களெல்லாம் கூடி என் மீது திருட்டுப்பட்டம் கட்டினீர்களே அதை! ச்சீ நாயே! போடா; அயோக்கியத் திருட்டுப் பயலே!! உங்கப்பன் போலீஸ்காரன் உன் பின்னாலேயே வருகிறான் போ!!!

இரஞ்சன்:- டேய் ராஜன்! நீ யாரிடம் இப்படிப் பேசுகிறாய் என்பது ஞாபகமிருக்கட்டும்! உங்கப்பன் போலீஸ்காரன் உன்னிடம் வருகிறானா? என்னிடம் வருகிறானா...? பார்!

இராஜன்:- நான்தான் ஒரு முறை போயிட்டு வந்திருக்கிறேனே! இனிமே எனக்கென்னடா பயம்......?

[என்று கூறிப்போகிறான்]

இராகவன்:- [மறைவிலிருந்து வந்து] என்னப்பா ரஞ்சா...! ராஜன் சொல்லி விட்டுப்போகிறதைப் பார்த்தால், இனிமே நமக்குக் கூட ஆபத்து வரும்போலிருக்கே?

இரஞ்சன்:- இனிமே என்னடா வருகிறது? இப்பவே வந்துகிட்டுத்தானே இருக்கு...!

இராகவன்:- அய்யய்யோ! நான் அப்பவே நினைத்தேன்! அந்த சப் இன்ஸ்பெக்டரை நம்பவே கூடாதென்று......இப்போ என்னப்பா செய்யலாம்...?

இரஞ்சன்:- [கோபமாக] ராகவா! ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? எங்கே உன் வீரதீர பராக்கிரமங்களெல்லாம்? அந்தப்பயல் விஸ்வனை இன்று தாசி கமலா வீட்டிலேயே சுட்டுக் கொல்ல வேண்டும்! பழியை ராஜன்மீது சுமத்தவேண்டும்!! வேறு வழியே இல்லை; வா போகலாம்!!!

★

கிராமநேசன்.

ஈரோடு, ஜன. 5.

"கிராம நேசன்" என்னும் மாதமிருமுறைப் பத்திரிகைக்கு, கோவை ஜில்லா மாஜிஸ்திரேட் முன், நேற்றுத் தோழர் பி. ஜி. மாணிக்கம் ஆசிரியராகவும் வெளியிடுபவராகவும் தோழர் ஜி. பி. வெங்கிடாஜலபதி பதிப்பாளராகவும் பதிவு செய்து கொண்டனர்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE

உங்களுக்கு இவற்றில் எது வேண்டும்?

பெரியார் ஈ. வெ. ரா.

தத்துவவிளக்கம்	0	12	0
பெண் ஏன் அடிமையானாள்	0	8	0
வெளியேறு	0	6	0
திராவிடர் கழக லட்சியம்	0	4	0
மொழி எழுத்து	0	4	0
சமதர்ம உபந்யாசம்	0	4	0
இலங்கை உபந்யாசம்	0	3	0
இராமாயணப் பாத்திரங்கள்	0	3	0
மேல்நாடும், கீழ்நாடும்	0	3	0
உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை?	0	3	0
திராவிடர் ஆரியர் உண்மை	0	2	0
திருச்சிப் பிரசங்கம்	0	2	0
இதிகாசங்கள் புகட்டும் நீதி	0	2	0
உண்மைத் தொழிலாளி யார்?	0	2	0
இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து!	0	2	0
தமிழ் இசை-நடிப்புக்கலைகள்	0	1	0

குடி அரசு வெளியீடுகள்

பணம்பிடுங்கிப் பார்ப்பனர்	0	14	0
இந்தியாவின் குறைபாடுகள்	0	8	0
பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு (ஆங்கிலம்)	0	8	0
இதோ பெரியாரில் பெரியார்	0	6	0
பெரியார் பெருந்தொண்டு	0	6	0
கர்ப்ப ஆட்சி	0	6	0
நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா?	0	6	0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	0	5	0
இரண்டு வழிகள்	0	4	0
பகுத்தறிவு அல்லது மரணசாசனம் 2ம் பாகம்	0	4	0
வால்டையரின் வாழ்க்கைச் சரிதை	0	4	0
கார்ல் மார்க்ஸ்	0	4	0
அய்யாமுத்து கட்டுரைகள்	0	3	0
அப்பரும் திருஞான சம்பந்தரும்	0	3	0
சோசியலிசம்	0	3	0
அகஸ்தியர் ஆராய்ச்சி	0	3	0
ராமலிங்க சுவாமிப் பாடல்	0	2	0
பாண்டியன் பரிசு (பாரதிதாசன்)	3	8	0
பாரதிதாசன் கவிதைகள் ,,	3	8	0
எதிர்பாராத முத்தம் ,,	1	4	0
அழகின் சிரிப்பு ,,	1	0	0
தமிழ் இயக்கம் ,,	1	0	0
காதல் நினைவுகள் ,,	0	12	0
இசையமுது (பாரதிதாசன்)	0	12	0
முல்லைக்காடு ,,	0	12	0
நல்ல தீர்ப்பு ,,	0	10	0
கவிஞர் பேசுகிறார் ,,	0	10	0
குடும்ப விளக்கு 1 ,,	0	6	0
குடும்ப விளக்கு 2 ,,	0	10	0
அமைதி ,,	0	8	0
ரோமாபுரி ராணிகள் (சி. என். ஏ.)	2	4	0
கம்பரசம் ,,	1	8	0
தீ பரவட்டும்	1	0	0
குமரிக்கோட்டம் ,,	1	0	0
விடுதலைப்போர் ,,	1	0	0
கற்பனைச் சித்திரம் ,,	1	0	0
சிறு கதைகள் ,,	1	0	0
ஆரியமாயை ,,	1	0	0
உலகப்பெரியார் காந்தி ,,	1	0	0
ரேடியோவில் அண்ணா ,,	0	12	0
வர்ணாஸ்ரமம் ,,	0	12	0
ஏ தாழ்ந்த தமிழகமே ,,	0	8	0
திராவிடர் நிலை ,,	0	6	0
நாடும் ஏடும் ,,	0	6	0
மே தினமும் திராவிடர் கழகமும்	0	5	0
நல்ல தீர்ப்பு ,,	0	4	0
மகாத்மா காந்தி ,,	0	3	0

இதர வெளியீடுகள்

ஐந்தாவது சுதந்தரம்	1	8	0
பொய்யும் மெய்யும்	1	8	0
நாலு கதைகள்	1	8	0
தீண்டாமை	1	8	0
கோகிலராணி (நாடகம்)	1	0	0
காரல் மார்க்ஸ்	1	0	0
சிறந்த பேச்சாளர்	1	0	0
நரகாசுர படுகொலை	0	12	0
புரட்சி முரசு	0	12	0
கனவில் கண்ட கவி	0	10	0
தில்லையில் பெரியார்	0	8	0
மறுமலர்ச்சி கவிதைகள்	0	8	0
சாவோலை	0	8	0
திராவிடநாட்டுப் பாடல்கள்	0	6	0
நாடகக் கலையின் முன்னேற்றம்	0	6	0
சிரிக்கும் வையம்	0	4	0
வாழ்விலோர் திருநாள்	0	4	0
மக்கள் ஆட்சி	0	4	0
தமிழகம் இழந்த தளபதி	0	4	0
ஓடிப்போனவள் கதை	0	4	0
எப்படி உருப்படும்	0	4	0
திராவிடநாடு பிரிவினை	0	2	0

பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.
வியாபாரிகளுக்கு மட்டும் கமிஷன் உண்டு.

நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரிவீதி, ஈரோடு.